கூளப்ப நாயக்கன்

# விறலி விடு தூது

ஆசிரியர்

சுப்ர தீபக் கவி

பதிப்பாசிரியர்

ராய. சொக்கலிங்கன்

பக்கம் — 176.

விலை ரூபாய் மூன்று.

கிடைக்கும் இடம்

பாரதி பிக்சர் பாலெஸ்,

காரைக்குடி.

சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி.

# நூல் முகம்

## தோற்றுவாய்

விறலியைத் தூது போக்குவது விறலி விடு தூது. பிணக்குக்கொண்ட மனையாளிடம் அவளைப் பிரிந்து சென்ற கணவனின் செய்தியையும் வருகையையும் சொல்லி, போனவனைப் பரிவோடு வரவேற்க அவளை இணக்கவல்ல இளங் குமரிக்கு விறலி என்று பெயர்.

—நீங்கி வெறுப்பு

**ஆன மடவார்க்கும் ஆடவர்க்கும் நல்லசமா**
**தான நிதான அவ தானியே!** — களம் கண்ணி

என விறலியை அழைக்கின்றான் இந்நூலில் தூதுவிடும் நாயகன். விறல் என்ற சொல்லுக்கு வலிமை என்று பொருள். விறலி, வலிமையுடையாள்.

## கூளப்ப நாயக்கன்

இவ் விறலி விடு தூது நாகம கூளப்ப நாயக்கன்மீது பாடப்பெற்றது. நாகம கூளப்ப நாயக்கன் என்பவன் மதுரை ஜில்லாவிலுள்ள நிலக்கோட்டை என்னும் பகுதியின் தலைவனாக இருந்தவன். அவன் இந் நூலாசிரியரைப் பெரிதும் ஆதரித்தவன். பாட்டுடைத் தலைவனாகிய கூளப்ப நாயக்கன் ஆசிரியரால் தேன் ஒழுகும் தமிழில் மிகப் பலபடப் பாராட்டப் பெறுகின்றான்.

**குன்றில் கருதார் குடும்பம் குடிஏற**
**முன்றில் குமுறுமணி மும்முரசான்—நின்றஅடி**
**தூக்கினார் சென்னி துடிக்கத் துணித்துவிடும்**
**ஆக்கினை சக்கரம்போல் ஆணையான்.** — ருo-ருக

தண்தார் மகுடம் தடவும் ஜயவீர
கண்டா மணிமுழங்கும் காலினன்—மண்டுசமர்

யுத்தகளத்து ஒன்னர் உயிர்மேய்ந்த குற்றுடைவாள்
வைத்தணைத்துக் கட்டும் மருங்கினன்—கைத்தலத்தில்

ஐந்தருவும் ஐந்துவிரல் ஆகித் தருவளனச்
செந்தமிழ்க்கு நல்குமலர்ச் செங்கையான்—பைந்தொடியார்

பொன்முலையாம் கோட்டில் புதுக்கலவைச் சேறுஊட்டி
மன்மதநல் நூல்எழுதும் மார்பினன். ருங - ருசு

சாய்த்த மதிமுகத்துத் தையலார் முத்தம்இட
வாய்த்த முழுமதிபோல் மாமுகத்தான்—காத்தருளும்

எம்பிரானர்கோயில் ஈசரடி எந்நாளும் [தொழும்
செம்பொன்முடி தாங்குமலர்ச் சென்னியான்—உம்பர்

நின்மலனர் வெண்ணீற்று நெற்றிக்கண் காணுத
மன்மதன்காண் என்னும் வடிவினன். சுக - சுங

என்பன கூளப்ப நாயக்கனைப்பற்றிய புகழ்ச்சிகளுட் சில.

இவற்றுள் '' நின்மலனர் வெண் நீற்று நெற்றிக்கண் காணுத மன்மதன்காண் '' என்ற சொல் தொடரின் அருமையை அப்படியே நுகர்ந்து பருகி வியந்து, இந் நூலாசிரியர் காலத்து வாழ்ந்த பாவலர் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் என்பார், ஆசிரியர் இறந்தபோது சொல்லிய பின்வரும் வெண்பா நோக்கத்தக்கது.

செய்ய கொழுநைச் சிவசுப் பிரதீபா!
வெய்ய கொழுந்தழலில் வேவதே!—ஐயகோ!
'' நின்மலனர் வெண்ணீற்று நெற்றிக்கண் காணுத
மன்மதன்காண் '' என்றுசொன்ன வாய்.

கூளப்ப நாயக்கன் இந்நூலாசிரியர் காலத்தவனே. இந்நூலாசிரியர் இவன்மீது இத் தூது தவிரக் காதல் ஒன்றும் செய்திருக்கின்றார். அதற்குக் கூளப்ப நாயக்கன் காதல் என்று பெயர். இவ் இரண்டு நூல்களும் அதி

மதுரம் வாய்ந்தவை. கூளப்ப நாயக்கன், நாகம கூளேந்திரன், பெரிய நாகன் என்பன இவன் பெயர்கள். இவன் தந்தை பெயர் சிந்தம கூளேந்திரன்.

**சிந்தமகூ ளேந்திரதுரை சிங்காச னுதிபதி**
**தந்தசௌ பாக்கிய சம்பன்னன்.** அறு

**சிங்காச னுதிபதி சிந்தமகூ ளேந்திரன் அருள்**
**எங்கோன் பெரியநா கேந்திரன்.** சகூ௦

**பெஞ்சைநகர்ச் சிந்தமன் நற் பேறே!** க௦கூக

என்பன இவன் தந்தையைப் பற்றிக் கூறப்படுவன. இவனுக்குச் சிந்தமன் என ஒரு தம்பி இருந்ததாகத் தெரிகிறது. "குமார துரைச் சிந்தமன்" என ஆயிரத்துத் தொண்ணூற்று ஆறும் கண்ணியிலும் "கூளேந்திரன் தம்பியாம் சிந்தமன்" என்று ஆயிரத்து நூற்றி ஆறும் கண்ணியிலும் சொல்லப்படுகின்றன.

**ஐம்பதூர்க் கேகி அலைந்துபலன் ஏதென்றே**
**ஒன்பதூர்க் கேக ஒருமித்தேன்.** கூகூரு

என்பதுபோன்ற சிலவற்றுல் இவனுக்கு ஒன்பது ஊர்கள் சிறப்பாக இருந்தன எனக் கொள்ளலாம். இவனுடைய தலைநகருக்கு 'பெஞ்சை' அல்லது 'நவபுரி' என்று பெயர். இவன் திருமால் வழிபாடு உடையவன் என்பதை

**இம்மரா யப்பெருமாள் செஞ்சரண சேகரனை** உச

என்பது போன்றவற்ருல் அறிகிரேம்.

## சுப்ர தீபக் கவி

இந்த நூலின் ஆசிரியர் பெயர் சுப்ர தீபக் கவி. இவர் மதுரை ஜில்லா திருமங்கலம் பகுதியினர். இன்னர் பிறந்த வகுப்பில் தட்டார் என்ப. இவர் நிறைந்த புலமை

வாய்க்கப்பெற்றிருந்தார். இவர் பாட்டுக்களெல்லாம் தேனும் பாலும் பெருகி ஆறுக ஓட்டமெடுப்பது போன்ற இனிமையும் ஒழுங்கும் கொண்டவை. இவர் எக்காலத்தவர் என்பதை அறியத்தக்க திறவுகோல் இந்நூலின் உள்ளேயே இருக்கின்றது. அதனைத் தேடி எடுக்கும் சிரமம் கூடப் படிப்பவர்க்கு வேண்டாம். அச்சாவியை இங்கு எடுத்து வைக்கிறேன்.

**திக்கெல்லாம் கொண்டாடும் செங்கோல் விஜயரங்க**
**சொக்கநா தேந்த்ர துரைராஜன்—சக்ரபதி**

**சேதுபதி பாண்ட்யகுல தெட்சணசிங் காசனந**
**ராதிபதி மெச்சு நரபாலன்.** ௨௪, ௨௫

என்ற கண்ணிகள் நூலாசிரியர் காலத்தைக் கணிக்க நன்கு உதவுகின்றன. விஜய ரங்க சொக்கநாத துரை ராஜனால் பாராட்டப் பெற்றவன் கூளப்பநாயக்கன் என்பதால் அவன் காலத்தவனாகவே கூளப்பநாயக்கன் இருத்தல் வேண்டும். கூளப்பநாயக்கன் காலத்து உடன் இருந்தவனே சுப்ரதீபக்கவி என்று சொல்ல வேண்டுவதே இல்லை. இக்கண்ணிகளில் கூறப்படுபவனே ஒரு காலத்தில் மதுரையை ஆண்ட விஜயரங்க சொக்கநாத நாயக்கன் என்பவன். இவன் மதுரையை ஆண்டகாலம் கி. பி. ௧௭௦௬—முதல் ௧௭௩௨ எனச் சரிதம் கூறும். இந்தக்காலமே கூளப்பநாயக்கன் காலமும் சுப்ரதீபனின் காலமும் என்பதில் ஐயம் இல்லை. எனவே ஏறக்குறைய இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக் கிடையில் தோன்றியது இந்நூல் என்று கொள்ள வேண்டும்.

இந் நூலாசிரியராகிய சுப்ரதீபர், பெரும் புலவராக இருந்து, மதுரைச் சோமசுந்தரக் கடவுள்மீது திருவிளையாடல் புராணம் இயற்றிய கல்விக்கடல் பரஞ்சோதி முனிவரிடம் கல்வி கற்றவர் என **ஊகிக்க** இடம் இருக்கிறது.

**கோமுனிவர் கொண்டாடும் கூடல் பரஞ்சோதி**
**மாமுனிவர் செம்பொன் மலர்ப்பாதம் நான்மறவேன்**

என்று சுப்ரதீபக் கவி, தாம் பாடிய கூளப்ப நாயக்கன் காதலில் கூறுவதால், கவி முனிவர் மாணுக்கர் எனவும் ஆசிரியர் அஞ்சலியாகவே இப்பாட்டைச் செய்தார் என்றுமே கொள்ள வேண்டுவதாகிறது.

## நூல் வரலாறு

நூலின் கதை என்ன என்று பார்க்கலாம்.

காவிரியாகிய பெண், தனது அலைகளாகிய கைகளால் திருவடி வருடத் திருமால் அறிதுயில் கொண்டிருக்கும் திருவரங்க நகரிலே பிறந்தான் ஒருவன். ஐயங்கார் மரபிலேதான். அவன் பெயரே அட்டாவதானி. அவனுக்கு வேறு இயற்பெயர் ஏதும் இருப்பதாக நூலில் சொல்லப்படவில்லை. '' அட்டாவதானி என்பதாயினேன் '' எனவும் '' அட்டாவதானி என்பேர் '' என்றும் தன்னை அவன் அறிமுகப்படுத்துகிறுன் இரண்டு இடங்களில்.

அந்த அட்டாவதானி, தமிழ்நாட்டின் வட எல்லையான திருப்பதியிலே வாசுதேவ ஐயங்கார் மகளை மணம் புரிந்தான். அந்நங்கையின் பெயா பூங்காவனம். அட்டாவதானம் வல்ல அவன், அவனுக்கு இன்பக்கனியாக அமைந்த அப் பூங்காவனத்தோடு சீரங்கத்திலே இனிய வாழ்க்கை நடத்துவானுயினுன். அங்ஙனம் வாழ்ந்த அட்டாவதானி பக்கத்து ஊரான திரிச்சிராப்பள்ளியில் நாட்டம் செலுத்தலானுன். அங்கு இன்பரசவல்லியென்னும் விலைமாதின் வலையில் வீழ்ந்தான்.

இதனை அறிந்தாள் பூங்காவனம். விளைந்தது பூசல். இல்லாள் ஏச்சைப் பொறுக்கமாட்டாமல் புறப்பட்டான் வீட்டை விட்டு அவதானி. பற்பல ஊர்களையும் சுற்றி

விட்டுச் சோலைமலை வந்து சேர்ந்தான். அவ் அழகர் கோவிலில் ஞானியையன் என்ற ஒரு நண்பனைப் பெற்ருன். 'சொக்கேசர் வாழும் மதுரை நகர் கண்டு தொழுது வர நீரும் உடன் வரவேண்டும்' என ஞானியையனை அழைத்தான் அவதானி. 'வேண்டாமப்பா அது; அங்கு போனுல் நீ மாட்டிக்கொண்டுவிடக் கூடும்; அங்கே மதனுபிஷேகம் என ஒரு வேசி இருக்கிருள்; அவளால் குடி கெட்டவர் அநேகர்' என, அவள் பிறப்பு வளர்ப்பு செய்கை முதலியவற்றை எடுத்து விரிவாக உரைக்கின்ருர் ஞானியையர். அப்படியொன்றும் தன்னைப்பற்றி அஞ்ச வேண்டாம் எனச்சொல்லி அவரை அழைத்துக்கொண்டு மதுரை அடைகிருன் அவதானி.

மதுரை மீனுளை வணங்கினுன்; சொக்கேசர் தாள் பணிந்தான்; ஆயிரக்கால் மண்டபத்துள் நுழைந்தான். அங்கே நடந்துகொண்டிருந்தது நடனம். ஞானியையன் சொன்னது சரியாக முடிந்தது. "ஆயிரக்கால் மண்டபத்தில் கண்டான் மதனுபிஷேகத்தை". அந்த "விண் தலத்தை விட்டு வந்த மேனகையை"க் கண்டவுடன் என்ன ஆனுன்? அவளுடைய "கொண்டைச் சொருக்கு அழகும் முத்துத் துராய் அழகும் செவ்வாய் முருக்கு அழகும் சேலை முகப்பில் கருக்கு அழகும் வேல் அழகு போன்ற விழிஅழகும் தண்டையிட்ட கால் அழகும் பொற் கடகக் கைஅழகும் ஓலை இட்ட காது அழகும் வச்ரமணிக் கச்சு இறுக்கும் மார்பு அழகும் சோதி முகத்து அழகும் துங்க ரத்ன மாது ரதி கட்டு அழகும் பொட்டு அழகும் கச்சை கட்டி வந்த கட்டு மட்டு அழகும் கண்டு" மயங்கியே போனுன். ஆட்டம் முடிந்தது. புறப்பட்டாள் வீட்டுக்கு மதனுபிஷேகம். பின் தொடர்ந்தான் அவதானி, ஞானியையனை ஏமாற்றிவிட்டு.

மதனுபிஷேகம் வீட்டின் உள்ளே நுழைந்து விட்டாள். அவதானி, நின்ருன் வாசலில். என்னவிசேடம் என்ருள்

ஒருதோழிவந்து. "நம்பர் சொக்கலிங்கர் முன் நின்று ஆடி வந்த பெண் அரசியார்?" என்று கேட்டான் அவதானி. 'ஓகோ! அது தெரிய வேண்டுமா? "மாணிக்கமாலை பெற்ற வச்சிரத்தை, கும்பகுடக் காணிக்கு வாய்த்த கனதனத்தை, ஆணி முத்தை, விண் இச்சைகொள்ள வந்த மேனகையை, பெண்ணுக்குப் பெண் இச்சை கொள்ள வந்த பெண் அமுதை, எண் அரிய சாத்ரவித கொக்கோக சாரத்தை, மேல் விருது பாத்திர சிரோ மணியை, பைங்கிளியை, வாய்த்த மடமானை, மரகதத்தை, மன்மத குடோரியை, செந்தேனை, மதனாபிஷேகத்தை" நீர் தெரிந்துகொள்ள வில்லையா? நன்றாக இருக்கிறது' என்று கேட்டு விட்டாள், கைம்மருந்துச் சொக்கி என்னும தோழி. 'சரி; இருக்கட்டும்; வரலாமோ?' என்றான் அவதானி. 'நன்றாக வரலாம்; வெள்ளையப்பன் தான் வேண்டுவது' என்றாள் பாங்கி.

"வெள்ளைப்புது வெட்டு மின்னலாய் அப்படியே அள்ளிக் கொடுத்"து அனுப்பினான். பிறகு அவதானிக்கு ராஜ உபசாரம் நடந்தது. மதனாபிஷேகத்தின் இன்ப வாரிதியில் சிலகாலம் மிதந்தான் அவதானி. அவனிடம் இருந்த பொருள் முழுதும பலவகையாகவும அவள் கைக்கு மாறும்வரைப் பொறுத்திருந்தாள் மதனாபிஷேகம். எல்லாம் தீர்ந்தது; வெறுங்கையன் ஆனான் அவதானி. துரத்த வகைதேடினர் தாயும் மகளும். வந்தது சண்டை. வழக்குச் சபை ஏறியது. அம்பலத்தார் ஒருவகையாக வழக்கை ஒழித்து அவதானியை விடுதலை செய்து விட்டனர்.

அவதானி மதுரை ஈசனை வணங்கி விட்டுப புறப்பட்டான். எங்கே? பாடல் தலைவனாகிய கூளப்பநாயக்கனிடம். தனது அட்டாவதானத் திறமையை அங்கே காட்டிப் புகழ்பெற்றான். ஏராளமான பரிசில்கள் கிடைக்

கின்றன அவதானிக்கு. எல்லாவற்றையும் கொண்டு சிறப்பாகத் திரும்புகின்றான் தன் வீடு நோக்கி. தனக்கு முன்னதாகத் தன்மனையாட்டிபால் செல்க "தோகை விறலி நீ தூது" என விறலியைத் தூதாக விடுக்கின்றான் அவதானி. இதுவே கதை.

## யாப்பு

இந்நூல் ககசச கண்ணிகள்கொண்ட கலிவெண்பாவால் ஆக்கப்பெற்றிருக்கிறது. எனினும் சக, சஉ, ௩கஅ, ௩கக, ௩கசச, ௩கரு, ௫௭௦, ௫௭க, க௦௭௩, க௦௭ச, க௦௭௫ ஆகிய பதினொரு கண்ணிகள் கலிவெண்பாவில் அமையவேண்டிய வெண்தளை யாப்புக்கு மாறுபட்டிருக்கின்றன. இவற்றை யாப்புக்கு அமைய நான் திருத்த விரும்பவில்லை. ஆசிரியர் அவ் இடங்களிலெல்லாம் யாப்பை முரணினாலும் இப்படித்தான் இருக்க வேண்டும் எனக் கருதியே செய்தனர் என எனக்குத் தோன்றுவதாலேயே. அவ் இடங்களில் சந்தநயம் ஒன்றுக்கே ஆசிரியர் சிறப்புத் தந்தார் என்றே நான் நினைக்கிறேன். இவ் விஷயத்தை விரித்தால் நூல்முகம் பெருகி விடும் என அஞ்சி விடுக்கின்றேன். பாவலர் அவ் அவ் இடங்களை ஆராய்ந்து முடிவுகட்டட்டும்.

## மொழி

கொச்சைச் சொற்கள் இந் நூலில் இடம்பெற்றுத் தான் இருக்கின்றன. என்றால் வெளியிடப்பெற்ற சேதுபதி விறலி விடு தூது முன் உரையில் கூறப்பெற்ற காரணத்தையே இதற்கும் சொல்லுகிறேன். சொற்களைக் கண்டு ஒழுக்கம் வாய்ந்தவர் அஞ்சவேண்டிய அவசியம் இல்லை. இன்பத்தை இல்லில் ஒல்லுமாறு நுகர்வாரை எந்தச் சக்தியும் தடுத்தல் முடியாது; தடுக்கவும் கூடாது.

## நூல் நயம்

இந் நூல் 'வடித்த சுவையுடையது. இம் முகப்பில் நூலின் உள்ளிருந்து எந்தப் பகுதியைச் சான்ருக எடுத்துக் காட்டுவது என்று தோன்றவில்லை. அத்தனையும தித்திப்பு. கற்பனைக் களஞ்சியம் இந்நூல்.

**பெஞ்சைநகர் வாழப் பெருஞ்சீர் வளர்ந்தோங்க**
**கஞ்சமலர் மாது களிகூர—வஞ்சகமும்**

**பொய்யும் பறந்தோடப் புண்ணியமும் தண் அளியும்**
**மெய்யும் கலந்து விளையாட—பெய்யும் மழை**

**வானம் வழங்க மனைவாழ்க்கை ஓங்க அன்ன**
**தானம் வழங்கத் தவம்ஓங்க—நான்மறைக்கும்**

**நல்நிதியாம் மேகவண்ண நாதர்திம்ம ராயர்திருச்**
**சந்நிதியில் பூஜை தழைத்தோங்க—இந்நிலத்தில்**

**எங்கோன் அபிஷேகம் ஏந்திமநு விஞ்ஞானச்**
**செங்கோல் அரசு செலுத்துநாள்** கூ௨—கூசா

எனக் கூளப்ப நாயக்கன் செயல் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

மதனபிஷேகத்தின் தாய் மாணிக்கமாலை கருவுற்ற காலத்து மண்ணைத் தின்ருளாம். கருவுற்ற பலருந்தான் மண் தின்கின்றனர். மாணிக்கமாலை மண் தின்றதைக் கவி செய்யும் கற்பனை சால அழகுடையது. தன் கருவில் இருக்கும் மகளிடம் சிக்கும் பிறர் வாயில் அள்ளிப்போடப் போகும் பொருளைத் தன் வாயில் போட்டுப்பார்த்தாள் தாய் என்று வருகின்றது பாட்டு.

**ஊடு தரித்தபிள்ளைக்கு உள்ளாவார் வாயில்அள்ளிப்**
**போடுவதைத் தன்வாயில் போட்டுஅறிந்தாள்** கசூ௨

பெண்ணைத் தொட்டிலில் என்னசொல்லி ஏற்றினுள்?

**வீடேறப் பண்டைமுதல் மேல்ஏறத் தன்குடும்பம்**
**ஈடேறப் பொன்தொட்டில் ஏற்றினுள்** கஎசா

தாராட்டினுள் குழந்தையை. எவ்வாறு?

**வாரா தவர் ஆர்ஆர்? வந்துமடிச் சீலைகொட்டித்**
**தாரா தவர் ஆர்ஆர்? தந்து அணையில்—சேராதார்**

**ஆராரார் சேர்ந்துனக்குள் ஆசைகொண்டு சுற்றுதார்**
**ஆராரார் என்றுதா ராட்டினுள்** கஎஎ, கஎஅ

மகள் மதனாபிஷேகத்தை எப்படிவளர்த்தாள் என்று நினைக்கிறீர்கள்? கூளப்ப நாயக்கன் புகழைத் தமிழ்ப் பாவலர் வளர்ப்பதுபோல வளர்த்தாள்.

**கிளைப்பெரிய நாகேந்த்ரன் கீர்த்தியைச்சொல் வாணர்**
**வளர்ப்பதுபோல் பெண்ணை வளர்த்தாள்** கஅ௦

மதனாபிஷேகம் செய்த திருவிளையாட்டைச்சொல்லுங்கால் தவயோகிகளைக்கூட ஒரு உலுக்கு உலுக்கி விட்டாள் என்கின்றார்.

**மூட்டுவிக்கும் யோக முனிவோ ரையும்பொம்மல்**
**ஆட்டுவிக்கும் தோல்உருப்போல் ஆக்கினாள்** உக௦

அவளைக்கண்ட சில சந்யாசிகள் மயங்கி 'ஐயோ வீணாக ஏன் இந்தத் துறவுகொண்டோம்' என வருந்தினராம்.

**மின்ஆசை கொள்ளாமல் வீணுக்குக் கொண்டோம்இச்**
**சந்நாசம் என்று தளர்வாரும்** உசஎ

வையை நதியைப்பற்றி,

**வையகமேல் எய்தியசீர் வைதிகநூல் மெய்ஒலிசேர்**
**மொய்திரை நீர் வையை** உசஉ

**செழுந்திரை நீர் வையை** ருசஉ

**தூவு திரைவையை** ருசசு

என வழுத்துகின்றார், ஆசிரியர்.

அவதானி வழக்கமாகச்செய்யும் கடவுள்வழிபாட்டை மறந்து மதனாபிஷேகத்தின் மையலிற் கிடந்து உழன்றமைபற்றி ஒரு சமயம் பேசுகின்றான் பின்வருமாறு:

**செங்களபக் கொங்கை தெரிசனமல் லாதுசிவ**
**லிங்க தெரிசனத்தை நீக்கினேன் — அங்கசவேள்**

**மாபூஜை வேளை அவள் வாயமிர்தம் உண்பதல்லால்**
**தேபூஜை மேற்கவனம் தீர்ந்துவிட்டேன்,** கூசஎ, கூசஅ

சபையாரிடம் வழக்கு உரைக்குங்கால் அவதானி கூறுகின்றான்: 'அவள் சொல்வதெல்லாம் முழுப்பொய். ஒருவன் அவள் வாயில் முத்தம் கொஞ்சும்போது இன்னொருவனால் சற்றுமுன் தன் வாயில் உமிழப்பட்ட வெற்றிலை ரசத்தைக் கொடுப்பார்க்குச் சத்தியம் ஏது?' என்று

**— வந்து ஒருவன்**
**முத்தம் கொளும்வாய்க்கு முன்ஒருவன் தான்கொடுத்த**
**அத்தம் பலங்கொடுப்பார்க்கு ஆணையுண்டோ?** அகூ௫

சபையார் அவதானி ஆகிய ஐயங்காரைப் பார்த்து,

**மந்திர நூல் வாயால் மதுவாய் ரசம்கொள்ள**
**எந்த வகைதுணிவாய் எண்ணினீர்?** கூஉங

எனக் கேட்பது மிகப் பொருத்தமாக இருக்கிறது.

அவளைவிட்டு விலகிவந்த பிறகு, அவளுக்கு வீணாகக் கொட்டிய பொருளுக்கு இரங்கி,

**மால்அழக ருக்கு வயிரத்தால் மின்எறிந்தசல்**
**போல்அழகாம் அங்கிபண்ணிப் பூட்டினமோ?** கூ௫சு

என அவதானி வருந்துகிறான்.

முன்புத்தி சொன்ன ஞானியையர் கடைசியாகச் சந்திக்கிறார் அவதானியை. 'ஐயோ? எப்படி இருந்தீர் அன்று! இப்படி உடம்பெல்லாம் இளைத்து உருத்தெரியாது போய் விட்டீரே' என்று அவர் கேட்கும் போது,

—முன் உமது
கையைவிட்டு வேசிமகள் கால்பிடிக்கச் சென்றேன் நான்
மையைஇட்ட கண்ணிக்கு மாலானேன்—பையஉண்டை
கூட்டியிட்டாள் கைப்பொருளைக் கொள்ளையிட்டாள்
கைக்குரங்கா
ஆட்டியிட்டாள் இக்கோலம் ஆக்கியிட்டாள் கூஅ௦, கூஅக

என்று அவதானி கூறுவதைக் கேட்கப் பரிதாபமாக இருக்கிறது.

மதனாபிஷேகத்தோடு தான் அனுபவித்த காலை அவள் அணிந்திருந்தமூக்குத்தியின் இடையூற்றைப்பற்றி,

முத்தம்இட ஒட்டாத மூக்குத்தி யைக்கழற்றி
முத்தம் இட்டேன் ருசூஅ

என அவதானி கூறுவது நகைச்சுவை வாய்ந்தது.

அவதானி மதனாபிஷேகத்தோடு இன்பக் கடல் ஆடுங்கால் அவள் கண்ணாடிபோன்ற ஒளிவிடும் கையைப்பிடித்து அவளை முன்னால் உட்கார வைத்து அவள் கையில் தன் முகம்பார்த்த அழகை, கவி, நயம் சொட்ட உரைக்கின்றார்:

மின்இருக்கும் நுண்இடையாள் மென்கமலக் கைபிடித்து
முன்இருத்திக் கொண்டு முகம்பார்த்தேன் சஅசூ

அட்டாவதானி தன் வித்தையை நாகமகூளப்ப நாயக்கன் அவையில் காட்டியபோது சபையார் வியந்து கூறியமுறையை,

கம்பனும் என்றார் கவிராஜர் க௦கூஎ

எனக் கூறுவதிலிருந்து சுப்ரதீபக் கவிராயருக்குக் கவிச் சக்கிரவர்த்தி கம்பனிடம் மிகச் சிறந்த மதிப்பு இருந்தது என்று தெரிகின்றது.

எல்லோரும் செம்பொன் இறைத்தார்ஐ ஆனனம்சூழ்
நல்லாச னன்பெரிய நாகேந்த்ரன்—செல்வத்
துரைஎனக்கு அங்கு ஆட்டினான் சொர்ணாபிஷேகம்
ககஙஉ, ககஙங

என நாகம கூளேந்திரன் தனக்குச் செய்த சிறப்பைப் போற்றும் கவியை நாமும் போற்றுவோம்.

## இறுவாய்

இத்தூது, இனிப்புப் பொருள்களால் செய்த ஒரு பண்டம் என்று சொல்லுதல் மிகையன்று. தனித்தனி முக்கனிபிழிந்து, வடித்து, ஒன்ருய்க் கூட்டி, சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் மிகக் கலந்தே, இனித்த நறுந் தேன் பெய்து, இளஞ்சூட்டில் இறக்கி, எடுத்த சுவைக் கட்டியினும் இனித்திடும் தெள் அமுது இந் நூல்.

அமராவதிபுதூர்,
காந்தி ஆண்டு அ०
கார்த்திகை கஉ.

ராய. சொ.

# பொருள் அடக்கம்


| தொடர் எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | விறலி புகழ் | 1 |
| 2 | தன்கதைச் சுருக்கம் | 5 |
| 3 | பாடல் தலைவன் சிறப்பு | 7 |
| 4 | தசாங்கம் | 7 |
| 5 | பிற சிறப்புக்கள் | 9 |
| 6 | அவதானி பிறப்பு முதலியன | 15 |
| 7 | யாத்திரை புறப்படல் | 19 |
| 8 | ஞானியார் நல் வழி நவிலல் | 23 |
| 9 | மதனாபிஷேகத்தின் பிறப்பு | 24 |
| 10 | மதனாபிஷேகத்தின் வளர்ப்பு | 26 |
| 11 | மதனாபிஷேகத்தின் பருவக் குறி | 30 |
| 12 | மகட்குத் தாய் போதிப்பு | 32 |
| 13 | மதனாபிஷேகத்தின் திருவிளையாடல் | 46 |
| 14 | தோழிகள் திறமை | 47 |
| 15 | மதனாபிஷேகத்தின்மேல் மையல்கொண்டோர் | 48 |
| 16 | அவதானி மதுரைநகர் அடைதல் | 59 |
| 17 | மதனாபிஷேகத்தைக் கண்டு மருளல் | 61 |
| 18 | தோழிகள் சூழ்ச்சி | 67 |
| 19 | பணிப்பெண்கள் வழிபாடு | 70 |
| 20 | மனைக்குட் சேறல் | 70 |
| 21 | மதனாபிஷேகத்தின் வரவேற்பு | 71 |
| 22 | மாமியாரின் முகமன் | 73 |
| 23 | படுக்கை அறை அலங்காரம் | 76 |
| 24 | மாமியின் சீர் வரிசை | 78 |
| 25 | படுக்கை சேர்ந்தமை | 78 |
| 26 | போகம் நுகர்தல் | 79 |

| தொடர் எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 27 | கலவிப் புகழ்ச்சி | 84 |
| 28 | புணர்ச்சி வருத்தம் போக்கல் | 85 |
| 29 | விடிந்தபின் மயக்கம் | 86 |
| 30 | மூலிகை சேர்த்தல் | 88 |
| 31 | கடைச்சரக்குச் சேர்த்தல் | 89 |
| 32 | பிராணிகளின் உறுப்புச் சேர்த்தல் | 90 |
| 33 | மருந்து கலந்து கொடுத்தல் | 91 |
| 34 | மருந்துண்டு மதி மயங்கல் | 91 |
| 35 | வஞ்சகச் சதி | 92 |
| 36 | திருவிழாக் காணச் செல்தல் | 93 |
| 37 | திரும்புகையில் செய்த மோசம் | 94 |
| 38 | கிழவி பொய்ப் புலம்பல் | 96 |
| 39 | நகை செய்து கொடுத்தல் | 99 |
| 40 | ஆடை வாங்கிக்கொடுத்தல் | 100 |
| 41 | பலவகைக் கடன் தீர்த்தல் | 102 |
| 42 | சாமி பூஜைக்குக் கொடுத்தல் | 102 |
| 43 | தன்னிடம் மிச்சமிருந்ததைக் கொடுத்துவைத்தல் | 103 |
| 44 | பலவகையாகப் பணம் பிடுங்கல் | 104 |
| 45 | மீதியைவிற்று வெறுங்கையன் ஆதல் | 105 |
| 46 | துரத்த வழி தேடல் | 106 |
| 47 | மதனுபிஷேகம் தன்னை ஏசுதல் | 106 |
| 48 | தாய் மகளை ஏசல் | 107 |
| 49 | சண்டை போடல் | 108 |
| 50 | பஞ்சாயத்துச்சபை புகல் | 112 |
| 51 | கிழவி அறிவிப்பு | 112 |
| 52 | அவதானி அறிவிப்பு | 117 |
| 53 | தாய்க்கிழவி மறுப்பு | 123 |
| 54 | சபையார் விசாரணை | 124 |
| 55 | மருந்திட்டது அறிந்தவகை கூறல் | 124 |
| 56 | சபையார் ஆறுதல் மொழி | 125 |
| 57 | தான் கலக்கமுற்றுத் தெளிதல் | 127 |

| தொடர் எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 58 | கோயில் வழிபாடு | 127 |
| 59 | கூளப்ப நாயக்கன் கட்டளை காண்டல் | 128 |
| 60 | இழந்த பொருளுக்கு வருந்தல் | 129 |
| 61 | கூளப்ப நாயக்கனிடம் செல்லத்துணிதல் | 130 |
| 62 | மதுரை விட்டுச் செல்லல் | 131 |
| 63 | ஞானி ஐயரை மறுபடியும் காண்டல் | 131 |
| 64 | ஞானி ஐயர் தேறுதல் கூறல் | 132 |
| 65 | திரு ஏடகம் கண்டமை | 133 |
| 66 | நாட்டு வளம் | 134 |
| 67 | திம்ம ராயரை வணங்கல் | 136 |
| 68 | நகர்ச் சிறப்பு | 137 |
| 69 | அரண்மனை காண்டல் | 138 |
| 70 | கொலுச் சிறப்பு | 139 |
| 71 | வித்தை அரங்கேற்றல் | 148 |
| 72 | வெகுமதி பெற்றமை | 149 |
| 73 | விறலி விடு தூது | 153 |

# கூளப்ப நாயக்கன் விறலி விடு தூது

# கூளப்ப நாயக்கன்

# விறலி விடு தூது

## காப்பு

### நேரிசை வெண்பா.

பொங்குபெரும் செல்வப் புகழ்பெரிய நாகன்;போர்த்
துங்கன் விறலிவிடு தூதுக்கு—மங்களம்சேர்
பஞ்சவர்சீர்க் காதையைமுன் பைம்பொன்நெடுங் [குன்றிடுகைக்
கஞ்சமலர்க் குஞ்சரமே காப்பு.

## நூல்

### விறலி புகழ்.

கார்பூத்த மேனிக் கருணைத் திருநெடுமால்
பார்பூத்த உந்திப் பரந்தாமன்—நீர்பூத்த க

---

**காப்பு:** நாகன், கூளப்ப நாயக்கன் பெயர். போர்த்துங்கன்: போர்வல்ல மேன்மை வாய்ந்தவன். பஞ்சவர்: பாண்டுமக்கள் ஐவர். காதை: பாரதம். பைம்பொன் நெடுங்குன்று, மேருமலை. இடுதல்: எழுதுதல். கஞ்சமலர்: தாமரைப்பூ. கைக்குஞ்சரம்: கணபதி. காப்பு: காக்கட்டும். மேருமலையை ஏடாகவும் தனது தந்தத்தை எழுத்தாணியாகவும் கொண்டு விநாயகன் பாரதக்கதையை எழுதினன் என்பது தொன்று தொட்ட வழக்கு. ''ஏடாக மாமேரு வெற்பு ஆகவங்கூர் எழுத்தாணிதன் கோடாக எழுதும் பிரானைப் பணிந்துஅன்பு கூர்வாம் அரோ''. என்பது பாரதக் காப்பு.

க. கார்: மேகம். கார்பூத்த மேனி: முகில்போல் பொலியும் உடம்பு. பார்: உலகம். உந்தி: கொப்பூழ். பார் பூத்த உந்தி: உலகத்தைத் தந்த கொப்பூழ். பரந்தாமன்: திருமால். நீர்பூத்த: நீர்மல்கிய.

வேலை,குமு றக்கடைந்த வேலைவரும் தெள்ளமுதும்
ஆலைதரு வெண்சாறு அடுபாகும்—பாலும் உ

கனியும் சருக்கரையும் கற்கண்டும் நாவுக்கு
இனியபசுந் தேனும் இணக்கி—தனியாக

மத்தித்து எடுத்த மதுரத்துக்கு எண்மடங்கு
தித்திப்புக் கேட்போர் செவிக்கேறத்—தத்தைகள்
போய்க்

குன்றுஏறத் தோற்றுக் குயில்மா மரந்தோறும்
சென்றுஏற வாணி சிறுகுமரி—நின்று ஒதுங்கி ரு

விண்ஏற அந்தரத்தில் விஞ்சையர்ஏ றக்கனிந்த
பண்ஏறப் பாடும்இசைப் பாடினியே!—உண்மையருள்

போதிக்கும் மெய்த்தவத்தோர் புத்திக்கு இடையூறாய்
நாதிக்கும் ஏழிசைக்கு நாயகமே!—கீதக் எ

---

உ. வேலை: கடல். குமுற: ஓலம் இட. கடைந்தவேலை: கலக்கிய காலத்து. தெள் அமுது: தெளிந்த அமிழ்தம். ஆலை: இயந்திரம். வெண்சாறு: கருப்பஞ்சாறு. சுடு பாகு: காய்ச்சிய கட்டி.

ஙு. இணக்கி: ஒன்ருகப்பொருத்தி.

ச. மத்தித்து: திரட்டி. மதுரம்: இனிப்பு. தத்தை: கிளி.

ரு. குன்று: மலை. வாணி: கலைமகள். வாணியாகிய சிறு குமரி.

சு. விண்: வான் உலகம். அந்தரமும் அதுவே. விஞ் சையர்: வித்தியாதரர் என்னும் இசைவல்ல ஒரு கூட்டத் தார். பண்: இசை. பாடினி: விறலி.

எ. நாதித்தல்: நாதத்தை உண்டாக்குதல்.

கொழுந்தோடி மன்னவராம் குன்றிற் படரக்
கொழுந்தோடி பாடிவரும் கொம்பே !—எழுந்தசிமிழ் அ

கண்டார்ஆ கத்திலொரு காமப்பேய் ஏற்றுவிக்கும்
கண்டாரா கத்தில்வல்ல காரிகையே !—கெண்டைநெடும்

கண்சுருட்டி யோகர் கருத்தறிவெல் லாம்சுருட்டிப்
பண்சுருட்டி பாடும்உயிர்ப் பாவையே !—ஒண்கிரணக் கo

காந்தாரக் கொங்கையின்மேல் கைத்தம் புருவணைத்துக்
காந்தாரம் ஏற்றும் கனிமொழியே !— சேந்தவரி

அம்பகாம் போதில் அணங்கும் இணங்கும்இசைக்
கும்பகாம் போதிரச கும்பமே !—தும்புருதன் கஉ

---

அ. முதல் வரியைக் கொழுந்து ஓடி எனப் பிரித்தல் வேண்டும். இரண்டாவது அடி கொழுந் தோடி; அதற்குக் கொழுமையான தோடி ராகம் என்பது பொருள். கொம்பே! கொம்பை ஒத்தவளே. சிமிழ்: டப்பி போன்ற தனம்.

கூ. கண்டார் ஆகத்தில்: பார்த்தவர்கள் உடம்பில். கண்டா ராகம், ஓர் இராகம்.

கo. கண் சுருட்டி: கண்ணைச் சிமிட்டி. இரண்டாவது, சுருட்டி: வாரி. பண் சுருட்டி: சுருட்டி ராகம்.

கக. காந்தாரக் கொங்கை: காந்து ஆரக் கொங்கை எனப்பிரிக்க. ஒளிவிடுகின்ற ஆரம் அணிந்த கொங்கை. ஆரம், மாலை; அல்லது சந்தனம். காந்தாரம்: ஓர்பண். சேந்த: சிவந்த. வரி: கோடு.

கஉ அம்பகம்: கண். அம்போது: அழகிய பூ. அம் பக அம் போதில் அணங்கு: கண் அனைய அழகிய தாமரைப் பூவில் வாழும் பெண். இசைக்கும்ப காம்போதி ஓர் இராகம். ரச கும்பம்: இனிமை பொதிந்த குடம். தும்புரு: வீணையில் வல்ல ஓர் வானுலக வாசி.

பாகரஞ்சி தத்தனியாழ் பட்டுறையில் இட்டயர
மேகரஞ்சி பாடும் விறலியே!—லோகத்தில் கங

காகஅறி வின்றிக் கலந்தனில்வைத் துண்பாரை,
தேகிஎன்பார்க் கியாத தியாரை—ராகமெனுங்

கள்ளக் கயிறுகொண்டு கட்டி உருட்டிவிழித்
துள்ளுமுனைச் சாட்டைகொண்டு சுண்டியே—
தெள்ளமிர்தத் கரு

திங்குதலைச் சொல்லால் திகிலேற்றித் தேட்டையெல்லாம்
வாங்கிவிட வல்ல மதங்கியே!—நீங்கிவெறுப்பு

ஆன மடவார்க்கும் ஆடவர்க்கும் நல்லசமா
தான நிதான அவ தானியே!—கானவித்தைப்

பாட்டையெல்லாம் கற்ற பனிமொழியே! நான்பட்ட
பாட்டையெல்லாம் சற்றே பகரக்கேள்!—வேட்டமனை கஅ

---

கங. பாக ரஞ்சிதத் தனி யாழ்: பக்கத்திலேயுள்ள இனிக்கும் ஒப்பற்ற யாழ். மேகரஞ்சி: ஓர் இராகம்.

கச. காக அறிவு: காக்கையைப்போல இனத்தை அழைத்து உண்ணும் அறிவு. "காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்" என்றார் தாயுமானப் பெரியார். கலம்: பாத்திரம். ராகம்: இசை.

கரு. விழி துள்ளு முனை சாட்டை: கண்ணாகிய துள்ளுகின்ற நுனியை உடைய சாட்டை.

கசு. தீம் குதலைச்சொல்: இனிக்கின்ற இளம் பேச்சு. திகில்: மயக்கம். தேட்டு: செல்வம். மதங்கி: விறலி.

கஎ. சண்டை பிடித்துக்கொள்ளும் கணவன் மனைவிகளைச் சமாதானம் செய்துவைக்கும் அவதானம் வல்லவள். கான வித்தை: இசைக்கலை.

கஅ. பனிமொழி: குளிர்ந்த பேச்சு. பட்டபாட்டையெல்லாம்: அனுபவித்த சிரமங்களையெல்லாம். பகர: சொல்ல. வேட்ட: மணந்துகொண்ட.

### தன்கதைச் சுருக்கம்

ஆட்டியுடன் போட்டிவிளைத்து ஆட்டிவிட்ட
பம்பரம்போல் ௧௯
நாட்டையெல்லாம் சுற்றியதும் நான்ஒருநாள்—
தோட்டுஇதழிப்

பூஉடையான் தென்மதுரை புக்கதுவும் அங்கேயோர்
தேவடியாள் கைக்குள்ளாய்ச் சிக்கியதும்—பாவிகிழ ௨௦

ஓரிஎன்கைப் பொன்னை உறிஞ்சியதும் போழ்வாய்த்துச்
சாரிசதி செய்ததுவும் வைததுவும்—போராடி

மேரைகெட அம்பலத்தில் விட்டதுவும் வாய்ப்பகட்டால்
ஊரைவிடப் பற்றிஎனை ஓட்டியதும்—பேராசை

அங்கே இருக்கமன தாகிவழி கொண்டுபுகல்
எங்கேஎன்று ஒன்பதூர்க்கு ஏகியதும்—சங்கேந்தும்

திம்மராயப்பெருமாள் செஞ்சரண சேகரனை
மும்மதமால் யானைமூர்த் தன்னியனை—ரம்ய

கருணா கரனைக் கனயோக வானை
பொருநா வலர்பூ ஷணனை—இருநிதியைச் ௨௫

---

௧௯. தோட்டு இதழி: இதழ்களையுடைய கொன்றை.

௨௦. பூ உடையான்: சிவபெருமான்.

௨௧. ஓரி: நரி. போழ்வாய் துச்சாரி: பிளந்தவாயை யுடைய தீயாள.

௨௨. மேரை: மரியாதை. அம்பலம்: சபை.

௨௩. ஒன்பதூர்: கூளப்பநாயக்கன் ஊர்.

௨௪. திம்மராயப்பெருமாள்: பாட்டுடைத் தலைவனின் வழிபடு கடவுளாகிய திருமால். செஞ்சரண சேகரன்: செவ்வியபாதம் பற்றியோன். மூர்த்தன்னியன்: முதல்வன்.

௨௫. நாவலர் பூஷணன்: புலவர்க்கு ஆபரணமானவன். இருநிதி: பெருஞ்செல்வம்.

சந்த்ரமுக மந்த்ர தள தந்த்ரகொலு இந்திரனைச்
சிந்தமகு மார செயதரனை—முந்து உசு

நிலைக்கோட்டை யானை நெடுங்கலியைத் தூரத்
தொலைக்கோட்டும் தியாக துரையை—மலைக்கோட்டில்

ஆளைவைத்துப் பார்க்கும் அறுபத்து நாலுமன்னர்
பாளையத்தை வென்ற படையானை—வாள்அரசர்

வெஞ்சமருக்கு அஞ்சா விருதுவென்றி வாகனைநம்
பெஞ்சைநகர் காக்கும் பெருமானை—வஞ்சகர்க்கோர்

தண்டப் பெரும்புலியைச் சாமித் துரோகரைக்காய்
வெண்டயத்தாட் சூரியனை வீரியனை—மண்டலிகர் ௩௦

மாகனகம் கப்பமிடும் வாயிலானைப்பெரிய
நாகமகா ளேந்த்ர நராதிபனை—யோகனை, யான்

பாடியதும் ஐயன்முகம் பார்த்ததுவும் என்கலிவிட்டு
ஓடியதும் பாக்கியம்வந் துற்றதுவும்—நாடிஇங்கே

நான்வந் ததுவும் நடுமதியி லேஇரண்டு
மான்வந் தனையவிழி மாதேகேள்!—தானபரன் ௩௫

---

உசு மந்த்ரம்: மந்திரிகள். தளம்: வரிசை. தந்த்ரம்: சேனை. சிந்தமன்: தந்தை பெயர். ஜெயதரன்: வெற்றியையே அணிபவன்.

உஎ நிலைக்கோட்டை: கூளப்பநாயக்கனின் ஊர். நெடுங்கலி: பெரிய வறுமை. மலைக்கோடு: மலை உச்சி.

உகூ. பெஞ்சைநகர், அவனது நகரம்.

௩௦. சாமித்துரோகர்: எஜமானனுக்குத் துரோகம் செய்பவர். வெண்டயத்தாள்: வீரக்கழல் அணிந்தகால். மண்டலிகர்: பூமியாள் மன்னர்.

௩௧. மாகனகம்: மிகுந்த தங்கம். கப்பம்: திறைப் பொருள். யோகன்: யோகம் வல்லான்.

௩௫. சந்திரனுக்கு நடுவிலே இரண்டு மான்கள் வந்தன போன்ற கண்களையுடையவளே! தானபரன்: கொடையையே தாங்கியவன்.

### பாடல் தலைவன் சிறப்பு.

திக்கெல்லாம் கொண்டாடும் செங்கோல் விஜயரங்க
சொக்கநா தேந்த்ர துரைராஜன்—சக்ரபதி நூச
சேதுபதி பாண்ட்யகுல தெட்சணசிங் காசனந
ர்ாதிபதி மெச்சு நரபாலன்—கோதில் நூரு

### தசாங்கம்

உருப்பான்மை-வெண்பிறைமேல் ஊர்வது தன்கோல
மருப்பாகும் பன்றி மலையான்—திரைக்கரத்தில்
ஆரமணி ஆரமணி ஆரமணி வாரிநடு
வாரி இடுங்குடவ மாநதியான்—தார்வேந்தர்
வீதிக்கு வீதி விவாக மணிமுரசம்
நாதிக்கும் பாண்டிவள நாட்டினன்—ஆதித்தன்
தேர்ஊர் அருண ஜெயகோ புரநிலைக்குள்
ஊர்ஊர் எனும்ஒன்பது ஊரினன்—சூரியபோர் நூசா

---

நூச. சொக்கநா தேந்த்ர துரைராஜன்: மதுரை நகர்க்கு ஒரு காலத்தில் தலைமை பூண்ட சொக்கநாத நாயக்கன்.

நூரு. கோது இல்: குற்றம் அற்ற.

நூசா. உருப்பான்மை: வடிவத்தின் தன்மை. கோல மருப்பு: அழகிய தந்தம். பன்றிமலை: வராககிரி. திரைக் கரம்: அலைகளாகிய கைகள்.

நூஎ. ஆரம் அணி ஆரம் மணி ஆரமணி என்று பிரிக்க. ஆரம்: சந்தனம். அணி ஆரம்: அழகிய பூமாலைகள். மணி: ரத்னங்கள். ஆரமணி: முத்து மாலைகள். வாரி: அள்ளி. வாரிநடு: கடலின் நடுவே. குடவநதி, ஆற்றின் பெயர்.

நூஅ. நாதிக்கும்: ஒலிக்கும். ஆதித்தன்: சூரியன்.

நூகூ. அருணம்: சிவப்பு நிறம்.

வேலைவைக்கும் செங்கருங்கண் மின்னார் இதயவண்டு
மாலைவைக்கும் பூந்தளவ மாலையான்—கோல சo

முகமிலங்கு பணியணிந்து முதுகணைந்த கலனைகொண்டு
தகதகென்று நடைபிறந்து சமரடர்ந்து—பகைவர்தங்கள்

தலையினின்று திமிதிதிந்தி தகுதிதந்த எனநடஞ்செய்து
உலவிவந்து கனகதண்டை ஒலிமிகுந்து—கலகலென்று

கொஞ்சிடச்ச தங்கையிட்ட கொண்டலொத்தி டுந்திறத்த
வெஞ்சினப்ர சண்டஉக்ர வெண்பரியான்—விஞ்சுகரம்

ஒன்று படைத்துவரும் ஓங்கலுக்கொப் பாஇரண்டு
வென்றிப் பிறைசுமந்த மேகம் எனத்—துன்று

மதங்கள் எனும்மூன்று மாரிசிந்தப் பாகர்
ஒதுங்கநால் வாயால் உதறி—அதிர்ந்துபொரும் சரு

அஞ்சார் உதிரத்தை ஆறாக்கி ஓரேழு
மஞ்சார் புனலை மடுத்துறிஞ்சிக்—குஞ்சரங்கள் சசு

---

சo. வேலை வைக்கும் செங்கருங்கண்: வேலைப் பதித்த சிவந்த கரிய கண். மின்னார் இதய வண்டு மாலை: மின்அனைய நங்கையர் உள்ளமாகிய வண்டு வரிசை. தளவம்: முல்லை.

சக. பணி: நகை. கலனை: குதிரையின் சேணம். சமர் அடர்ந்து: அமர்செய்து.

சஉ. திமிதி திந்தி தகுதி தந்த: ஒலிக் குறிப்பு. கனகதண்டை: பொற் சதங்கை.

சங. கொண்டல்: மேகம். திறத்த: திறமையுடையன. வெண்பரி: வெள்ளைக் குதிரை.

சச. ஓங்கல்: மலை. பிறை: சந்திரன்.

சரு. மாரி: மழை. நால்வாய்: தொங்குகின்ற வாய்.

சசு. உதிரம்: ரத்தம். ஓர் ஏழு மஞ்சு ஆர்புனல்: ஏழு மேகங்களின் நீர். குஞ்சரங்கள்: யானைகள்.

என்பதோர் எட்டும் இணையில்லை என்றுஅகற்றி
ஒன்பதூர் வீதி உலாவியே—வம்புரைப்போர் ௪எ

பைம்பொன் முடிஇடறிப் பத்துநக மும்தேய்ந்த
கும்பரண கம்பீர குஞ்சரத்தான்—அம்புவியில்

காந்து கலியைவெட்டும் கண்டகோ டாரியைப்போல்
ஏந்துவெள்ளைப் பக்கறையி டாலினன்—சாய்ந்தோடிக்

குன்றில் கருதார் குடும்பம் குடிஏற
முன்றில் குமுறுமணி மும்முரசான்—நின்றஅடி ௫௦

தூக்கினர் சென்னி துடிக்கத் துணித்துவிடும்
ஆக்கினை சக்கரம்போல் ஆணையான்—பாக்கியவான்

**பிற சிறப்புக்கள்**

கற்பகமாம் பட்டரையங் கார்கருணை யேமணக்கும்
பொற்கமலம் போன்றமனப் பூரணவான்—பற்றலார்

தண்தார் மருடம் தடவும் ஜயவீர
கண்டா மணிமுழங்கும் காலினன்—மண்டுசமர்

யுத்தகளத்து ஒன்னார் உயிர்மேய்ந்த குற்றுடைவாள்
வைத்தணைத்துக்கட்டும் மருங்கினன்-கைத்தலத்தில் ௫௪

---

௪அ. கும்பம்: குடம்போன்ற மத்தகம்.

௪கூ. கலி: பாபம். பக்கறை: துணி. இடால்: கொடி.

௫௦. கருதார்: தன்னை நினையாத பகைவர். முன்றில்: வாசல்.

௫௨. பற்றலார்: எதிரிகள்.

௫௩. மண்டு: நெருங்கிய.

௫௪. ஒன்னார்: பகைவர். குற்று உடைவாள்: சிறிய கத்தி. மருங்கு: இடை.

ஐந்தருவும் ஐந்துவிரல் ஆகித் தருவளனச்
செந்தமிழ்க்கு நல்குமலர்ச் செங்கையான்—

பைந்தொடியார் ருரு

பொன்முலையாம் கோட்டில் புதுக்கலவைச் சேறூட்டி
மன்மதநல் நூலெழுதும் மார்பினன்—நன்மைதரும்

வெற்றிச் சிறுபெண் விளையாடும் சிற்றில் எனச்
சுற்றியகே யூரமணி தோளினன்—கற்றவராம்

கோக்குலத்தைக் காத்தருளும் கோபாலர்

வேயிசைபோல்

வாக்குமது ரம்பொழியும் வாயினன்—நாக்குளிரச்

சொல்இ ரசங்கள் துவர்ப்பென்று தள்ளிஇன்பக்
கல்வி ரசம்பருகும் காதினன்—வல்ல

மருவலரை வெட்டுகின்ற வாள்போல் முகத்தில்
கருணை உலவுமலர்க் கண்ணன்—இரவின் உடல் சா௦

---

ருரு. ஐந்தரு: கற்பகம் முதலிய கேட்டன கொடுக்கும் மரங்கள். பைந்தொடியார்: பசுமையான வளையல் அணிந்த நங்கையர்.

ருசு. கோடு: கொம்பு. புதுக்கலவைச் சேறு: அன்று கலந்த சந்தனக் குழம்பு. மன்மத நல்நூல்: காம நற்கலை.

ருஎ. சிற்றில்: சிறுவீடு, கேயூரம்: தோளில் அணியும் நகை.

ருஅ. கோக்குலம்: பசுக் கூட்டம். கோபாலர்: இடையர். வேய் இசை: குழல் ஓசை.

ருகூ. பருகுதல்: குடித்தல்.

சா௦. மருவலர்: எதிரிகள். இரவின்: இரவிலே.

சாய்த்த மதிமுகத்துத் தையலார் முத்தமிட
வாய்ந்த முழுமதிபோல் மாமுகத்தான்-காத்தருளும் கூக
எம்பிரா னார்கோயில் ஈசரடி எந்நாளும்
செம்பொன்முடி தாங்குமலர்ச் சென்னியான்—
உம்பர்தொழும்
நின்மலனார் வெண்ணீற்று நெற்றிக்கண் காணாத
மன்மதன்காண் என்னும் வடிவினான்—தன்னுடைய
வல்லக்கு வார்குலத்தில் வாள்வேந்தர் கண்குளிரப்
பல்லக்கு மேலுலவும் பாக்கியவான்—வில்லேற்றிக்
கைகொண்டு பொற்படியில் கால்கொண்டு பஞ்சகதி
மெய்கொண் டனையபரி மேற்கொண்டு—செய்யரண கூரு
துங்கதள கர்த்தர் துரைமக்கள் வாள்பிடித்துச்
சிங்கமெனச் சுற்றித் திரண்டுவர—மங்குல் எனக்
கூனல்முதுகு ஒட்டகமேல் கொட்டுகின்ற டம்மாரம்
யானையின்மேல் பேரி அதிர்ந்துவரச்—சேனையொடு
தாக்குமறு மண்டலிகர் தங்களுக்குச் சென்றுசொல்லும்
கூக்குரல்போல் வீரசின்னம் கொம்பூத—நோக்கும் கூஅ

---

கூக. முழுமதி: பூரணச்சந்திரன்.

கூஉ. மலர்ச் சென்னி: மலர் சூடிய தலை. உம்பர்: தேவர்.

கூங. நின்மலனார்: சிவனார். இவன் சிவனால் எரிக்கப்படாத காமன்.

கூச. வல்லக்க வார்குலம், கூளப்ப நாயக்கனுடைய குலம்.

கூரு. பஞ்ச கதி: ஐந்துவேகம். பரி: குதிரை.

கூகூ. மங்குல்: மேகம்.

கூஎ. கூனல்: வளைந்த. டம்மாரம், பேரி, பறை வகைகள்.

கூஅ. மறுமண்டலிகர்: வேற்றரசர்.

பரிதி பகைக்கும் பகைஎழுந்த தென்ன
விருதுகரு டாலவட்டம் வீசத்—தரளக்கால் சுகூ

வெள்ளைக் கொடியாடை மேகம் கிழித்துவரப்
பிள்ளைப் பிறைபோல்ப்ர காசிக்க—வெள்ளைவட்டச் எo

சித்ரக் குடைகள் ஜெயமாதுக் கிட்டநிழல்
முத்துமணிப் பந்தரென மொய்த்துவர—கைத்தலத்தில்

கத்தி பிடித்துவெள்ளி கட்டினதுப் பாக்கிகொண்டு
பத்துலட்சம் காலாட் படைநடக்க—தத்துபரி

கொக்குநரை யான்கைக் குமரிஎன ராவுத்தர்
கைக்குள் அடங்காது கால்மீற—நெய்க்கவளம்

கூட்டிஇரை ஊட்டிஇரு கொம்புகத்தி பூட்டிமதம்
மூடடிவிட்ட மால்யானை முன்நடக்க—கூட்டமிட்டு

வாரிட்டு அணிவகுத்து வாதிட்ட வேற்றரசர்
போரிட்ட வெங்களத்தில் போயெதிர்த்து—
நேரார்மேல் எரு

---

சுகூ. பரிதி: ஆதவன். தரளம்: முத்து.

எo. பிள்ளைப்பிறை: இளஞ் சந்திரன்.

எக. சித்ரம்: ஓவியம். முத்துமணிப் பந்தர்: முத்திழைத்த காவணம்.

எஉ. தத்துபரி: தாவும் குதிரை.

எங. கொக்கைப் போலவும் நாரையைப் போலவும் குமரியைப் போலவும் கைக்குள் அடங்காது எனக் கொள்க. நரையான்: நாரை. ராவுத்தர்: குதிரைத் தலைவர்.

எச. இரை: உணவு. மால்: பெரிய.

எரு. வார் இட்டு: கச்சை கட்டி. நேரார்: எதிரிகள்.

சுட்டபீ ரங்கித் தொனியும் புகையும்சூல்
இட்ட முகிலும் இடியும்என—பட்டயங்கள் எசு
வீசுவதும் வெட்டுவதும் மின்னலென்ன வீரர்சிலை
பூசலம்பு மாரிமழை போற்பொழிய—தேசப்
பரதளங்கள் பட்டுருளப் பாய்ந்தபெரும் செந்நீர்ப்
பிரளயப்ர வாகம் பெருக—சிரதலத்தில்
ஆனை இருப்புலக்கை யானை அடிக்கவிழு
மூளை நுரைத்திரளாய் மொய்த்தோட—வாளால்
படுந்தீரர் ஏறிவரும் பல்லக்குப் பேய்க்கு
விடுந்தோணி போலும் மிதப்ப—கிடந்துசிலர் அo
வேர்த்துப் பரிசைகொண்டு மேன்மூடிச் சென்னிஎட்டிப்
பார்த்துக் கமடம் எனப்பதுங்க—போர்த்தலையில்
மந்திரவாள் வேந்தர் மகுடத் துதிர்ந்த ரத்னம்
இந்திரகோ பங்கள் எனச்சிதற—செந்தறுகண்
விந்தை மிடிதீர வெற்றிப் பயிர்ஏற்றி
வந்து கொலுவிருக்கும் வாள்வீரன்—முந்துபெரும் அரு

---

எசு. சூல் இட்ட முகில்: கருக்கொண்ட மேகம். பிரங்கிப் புகை முகிலுக்கும் சுடும் ஒலி இடிக்கும் உவமை. பட்டயம்: வாள்.

எஎ. பூசல் அம்பு: சண்டைக்கணை. மாரிமழை: ஒரு பொருள் கொண்ட இரு மொழி.

எஅ. பர தளங்கள்: மாற்றார் படை. செந்நீர்: இரத்தம். பிரளயப்ரவாகம்: ஊழிக்காலப் பெருக்கம்.

எகூ. திரள்: கூட்டம்.

அக. பரிசை: கேடயம். சென்னி எட்டிப்பார்த்து: தலையை நீட்டிப்பார்த்து. கமடம்: ஆமை.

அஉ. இந்திர கோபம்: பட்டுப் பூச்சி.

அரு. விந்தை: வீரத்திருமகள். மிடி: வறுமை.

பாதலத்தில் வேரோடிப் பாரில் படர்ந்துவட
பூதரத்தில் ஏறும் புகழினன்—நீதிபான் அச
சிந்தமகூ ளேந்த்ர துரை சிங்காச ஞதிபதி
தந்தசௌ பாக்கிய சம்பன்னன்—செந்துவர்வாய்க் அரு
காமவடி வேல்விழியார் கைவடிவெல் லாம்எழுதும்
நாமவடி வேற்பெரிய நாகேந்த்ரன்—சேமநிதி
ஊரா தின்வாழ்வை ஒக்கும் நவகோடி
நாராய ணன்பெரிய நாகேந்த்ரன்—சேரலராம்
ஆட்டுக்கூட் டங்களிலோர் ஆண்புலிபோல் பாயும்நடு
நாட்டுக்கூ ழிற்பெரிய நாகேந்த்ரன்—" பூட்டுசிலை
அம்பொன்றால் ஈவேன் அரசுனக்கு வீடணு
நம்பு "என்ற மால்பெரிய நாகேந்த்ரன்—தம்பமென
லோகம் சுமப்பதனுல் ஓரா யிரமௌலி
நாகம் பொரும்பெரிய நாகேந்த்ரன்-பாகெனுஞ்சொல் கூ௦
பாவுக்கே றிக்கனகப் பல்லக்கே றிப்புலவோர்
நாவுக்கே றும்பெரிய நாகேந்த்ரன்—வாவிதிகழ் கூக

---

அச வட பூதரம்: இமயமலை.

அரு. சிந்தமகூளேந்த்ர துரை: பாடல் தலைவனின் தந்தை.

அசு. வடி: கூர்மை. நாமம்: அச்சம்.

அஎ. சேரலர்: பகைவர்.

அஅ. கூழ்: உணவுவகை.

அகூ. 'ஓர் அம்பினல் இராவணனை வென்று உனக்கு அரசு தருவேன்; வீடணு! நீ நம்பலாம்' என்று உரைத்த ராமனே இவன் எனக்கொள்க.

கூ௦. ஓராயிரம் மௌலி நாகம்: ஆயிரம் தலைப்பாம்பு என்னும் ஆதிசேஷன். பொரும்: ஒத்த. பாகு: வெல்லப்பாகு.

கூக. வாவி: தடாகம்.

பெஞ்சைநகர் வாழப் பெருஞ்சீர் வளர்ந்தோங்கக்
கஞ்சமலர் மாது களிகூர—வஞ்சகமும் ௧௨
பொய்யும் பறந்தோடப் புண்ணியமும் தண்அளியும்
மெய்யும் கலந்து விளையாட—பெய்யுமழை
வானம் வழங்க மனைவாழ்க்கை ஓங்கஅன்ன
தானம் வழங்கத் தவமோங்க—நான்மறைக்கும்
நன்நிதியாம் மேகவண்ண நாதர் திம்ம ராயர் திருச்
சந்நிதியிற் பூஜை தழைத்தோங்க—இந்நிலத்தில் ௧௫
எங்கோன் அபிஷேகம் ஏந்திமநு விஞ்ஞானச்
செங்கோல் அரசு செலுத்துநாள்—சங்கேந்தும்

**அவதானி பிறப்பு முதலியன**

காரங்க மேனிக் கடவுள் இருக்கும்அந்தச்
சீரங்கத் தேபிறந்தேன்; செல்வத்தில்—ஈரைந்தோடு
ஆறு வயதினுக்குள் ஆரியமும் வேதமும்நா
ஏறித் தமிழ்நூல் இலக்கணத்தில்—மீறினேன்;
வால் சரஸ்வதிஎன் வாக்கிற்பர சன்னமதா
நாலு கவித்திறனும் நானறிந்து—வேலும் ௧௯

---

௧௨. கஞ்சமலர் மாது: தாமரை வாழ் திரு.

௧௩. தண் அளி: குளிர்ந்த கருணை.

௧௫. மேகவண்ண நாதர்: முகில் நிறத் தலைவர்.

௧௬. அபிஷேகம் ஏந்தி: திருமுடி சூடி. மநுவிஞ்ஞானச் செங்கோல் அரசு: மக்கட்கேற்ற மேலான அறிவுச்சுடர் ஆட்சி. சங்கு ஏந்தும்: சங்கைத் தாங்கும்.

௧௭. கார் அங்க மேனி. மேகநிற வண்ணம்.

௧௭. ௧௮. ஈரைந்தோடு ஆறு வயது: பதினாறு வயது. ஆரியம்: வடமொழி. வேதம்: மறை.

௧௯. நாலு கவித்திறன்: ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் நால்வகைக் கவியிலும் திறமை.

மயிலும்எனச் சொன்னஉரை மாறுமல் சொல்லக்
கயிலாட சிங்கி கழற்ற—அயலொருவன் கoo

சொன்னவினுச் சொல்லஎதிர் குதாடப் பின்முதுகு
தன்னில் எறிந்தகல்லும் தான்எண்ண—பன்னுசது

ரங்கவிளை யாட்டிற் கடிபார்க்கச் சொற்புலவோர்
தங்கள் கவியைஅவ தானிக்க—சங்கத்தில்

எட்டெட் டெழுத்தாணிக் கேற்றகவி சொல்லவும்நான்
அட்டாவ தானிஎன்ப தாயினேன்—மட்டார் கoரு

---

கoo. லாட சிங்கி: பின்னல் சங்கிலி. அயல்: பக்கத்தில்.

கoக. சொன்ன வினுச்சொல்ல: கேட்ட கேள்விக்குப் பதில் கூற.

கoஉ. அவதானிக்க: விரித்துரைக்க. சங்கம்: கூட்டம்.

கoரு. எட்டெட்டு: பதினுறு. அல்லது அறுபத்திநான்கு. அட்டாவதானி: எட்டு விஷயங்களில் ஒரே சமயம் கருத்துச் செலுத்துபவன்.

**அஷ்டாவதானம்.**

க. வேலும் மயிலும் என்று மாறி மாறி ஓயாமல் சொல்லல்.

உ. லாட சங்கிலி கழற்றல் மாட்டல்.

ந. விஞவிற்கு விடை கூறல்.

ச. சொற்கேட்டான் ஆடல்.

ரு. முதுகில் எறியும் கற்களைத் திரும்பிப் பாராமல் உணர்ச்சி கொண்டு கணக்கிடல்.

சு. சதுரங்கம் ஆடல்.

எ. பாட்டுக்குப் பொருள் சொல்லல்.

அ. எழுத்தாளர்க்குக் கவிபாடல்.

திருப்பதியி லேவாசு தேவன் மகளைக்
கருப்புருவ இன்பக் கனியை—விருப்பமுள்ள கoச

பூங்கா வனத்தைப் பொருத்த முடன்வேட்டுப்
பாங்கான வாழ்விற் பயிலுநாள்—ஆங்குசெல்வத்து

ஈசர்திருச் சந்நிதியில் ஏந்திழையார் தம்மிலொரு
தாசிமேல் வைத்தேன் தயவுநான்—நேசமாய்

இந்தரங்கத் தேதிரிந்தேன் இன்பரச வல்லிஇடத்து
அந்தரங்கத் தேதிரிந்தேன் ஆசையால்—அந்தத்

திரிச்சிராப் பள்ளிக்குச் செல்லா திருக்கத்
தரிச்சிரா தென்மனது தானும்—ஒருத்தன்

அறியாச் சிறுவனுடன் யான்ஒருநாள் அந்த
வெறியார் குழல்பரத்தை வீட்டில்—பிரியமுடன்

சென்றிருந்து வந்தேன் திடுதிடென ஓடிப்போய்க்
குன்றிருந்த கொங்கைக் குலமணியாட்கு—
உன்கணவர் ககo

---

கoச. கருப்பு உருவ இன்பக்கனி: கரும்புபோல் இனிக்கும் சுவைமிக்க பழம்.

கoரு. பூங்காவனம், அவதானி மணியாள் பெயர். வேட்டு: மணந்து.

கoசு. ஈசர்: திருச்சிராப்பள்ளி இறை சிவனார்.

கoஎ. இந்து அரங்கம்: திங்கட் கூட்டம். இன்ப ரச வல்லி: அத்தாசியின் திருநாமம்.

கoஅ. தரிச்சிராது: பொறுத்து இராது. ஒருத்தன்: ஒருவன்.

கoகூ. வெறி: மணம். குழல்: கூந்தல். பரத்தை: வேசி.

ககo. திடுதிடு: ஒலிக்குறிப்பு, குன்று: மலை.

ஓடத்தில் ஏறினர் உத்தரியம் போக்கடித்தார்
நாடிச் சிரகிரியை நண்ணினர்—கூடவந்த க௧௧
என்னைச் சவுக்கையில்வைத்து இன்பரச வல்லிஎனும்
பொன்னனையாள் வீட்டிற்குள் போய்ப்புகுந்தார்—
அந்நேரம்
மிஞ்சிமிஞ்சிப் பேசினள் வேசி மகள்அதற்கு
அஞ்சிஅஞ்சிப் பேசினர் ஐயங்கார்—வஞ்சிஅந்த
வீட்டுக் கதவடைத்தாள் மெள்ளமெள்ளக் கொஞ்சினள்
காட்டுப் புருவோசை காட்டினள்—வீட்டைவிட்டு
வந்தார்நம் ஐயர்என்னை வாவென்றார் காவிரியில்
சந்திபண்ணி இக்கரையில் தாண்டினர்—
இந்த ஊர்க்கு ௧௧௫
என்மார்க்கம் சொல்லாதே என்றுசொன்னர் என்றந்தத்
துன்மார்க்கப் பையலெல்லாம் சொல்லிவிட்டான்—வன்மம்

௧௧௧. ஓடம்: தோணி. அந்நாளில் சீரங்கத்திலிருந்து திரிச்சிராப்பள்ளி போவதாயின் காவிரியைக் கடக்கத் தோணி ஏறியாகவேண்டும். உத்தரியம்: மேல் வேட்டி. இன்பரச வல்லியிடம் விரைந்து செல்லும் நினைவில் மேல் வேட்டியைக்கூடத் தவற விட்டுவிட்டார் அவதானியார். சிரகிரி: திருச்சி.

௧௧௩. வஞ்சி: கொடிபோன்றவள்.

௧௧௪. காட்டுப் புரு ஓசை: காட்டுப் புருப்போல ஒலிசெய்தல்; அது காதல் இன் இசை.

௧௧௫. சந்தி: சந்தியாவந்தனம். இந்த ஊர்க்கு: இந்த ஊரார்க்கு.

௧௧௬. என் மார்க்கம்: எனது நடத்தை. பையல்: பையன். இவன் துன்மார்க்கத்தை வெளிப்படுத்தி விட்டான் என்ற கோபத்தால் பையனைத் துன்மார்க்கன் என்கிறன் அவதானி.

தொடுத்தாள் கடுகடுத்தாள் தூங்குமஞ்சம் விட்டுப்
படுத்தாள் பகைஞரைப்போற் பார்த்தாள்—
அடுத்தடுத்து ௧௧௭
வேண்டினேன் குட்டு வெளியாக்கு வேனென்னைத்
தீண்டாதே என்றாள் சிராப்பளியில்—ஆண்டவள்பாற்
செல்லாய்என் றாள்பரத்தை தேடுவா ளேஎன்றாள்
சொல்லாத வார்த்தைசில சொல்லினாள்—இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்
புலிகிடந்த தூறாய் விடுமென்று—உலகறியச் ௧௨௦

**யாத்திரை புறப்படல்**

செப்பினாள் அவ்வையென்று தேர்ந்தேன் இராத்திரியே
தப்பினேன் கைக்கடங்கத் தக்கதுகொண்டு—அப்பால்
அதிசயங்கள் ஆனதலம் யாவும் அறிவோம்
நதிகள்பல மூழ்குவோம் நாமென்று—இதயமாய்
வெள்ளைநா வல்பழுக்கும் மிக்கபதி யும்நரிகள்
துள்ளுபரி யானதொரு தொல்நகரும்—தெள்ளுதமிழ்

---

௧௧௭. தூங்கும் மஞ்சம்: படுக்கும் கட்டில்.

௧௧௮. குட்டு; ரகசியம். ஆண்டவள்பால்: உன்னை அடிமைப்படுத்தி ஆட்கொண்ட தாசியிடம்.

௧௧௯. இல்லாள்: மனையாள்.

௧௨௦. வலி கிடந்த மாற்றம்: பெரும்படியான பேச்சு. இல்: வீடு. தூறு: மரத்தின் அடி.

௧௨௧. தேர்ந்தேன்: தெளிந்தேன். தப்பினேன்: கிளம்பிவிட்டேன். கைக்கு அடங்கத்தக்கது: கை அடக்க மான பொருள்கள்.

௧௨௨. தலம்: திருப்பதிகள். இதயமாய்: மனமார.

௧௨௩. வெள்ளை நாவல் பழுக்கும் மிக்க பதி, ஜம்பு கேஸ்வரம் என்னும திருவானைக்கோவில். நரிகள் துள்ளு பரியான தொல்நகர்: மதுரைமாநகரம்.

செப்பக் கதவு திறந்தவூ ரும்கருங்கல்
கப்பலென வந்த கடற்பதியும்—இப்புறத்தில் கஉச
பாங்குடைய ஆண்டு பனிரெண்டுக் கோர்கால்மா
மாங்கநீர் பொங்கும் வளம்பதியும்—பூங்குடத்தில் கஉரு
அங்கத்தை மங்கைவடிவு ஆக்கினவூ ரும்தமிழ்க்குத்
தங்கத்தை ஈந்த தனியூரும்—செங்கருங்கட்
காகம் எரியக் கனல்வீசும் மாமலையும்
யோகம் கழுகுசெயும் ஒண்கிரியும்—வேகமிக்க
கான்தாண்டு வெம்முதலை கவ்வியுண்ட பிள்ளைதனை
மூன்றாண்டு சென்றழைத்த மூதூரும்—மான்தான்நேர்
தாசிக்கு எழுந்த தனத்தைலிங்கம் என்றொருவன்
பூஜித்துப் பேறுபெற்ற பொன்னகரும்—நேசித்து கஉகூ

கஉங, கஉச. தமிழ் பாடக் கதவு திறந்த ஊர், மறைக்காடு என்னும் வேதாரணியம். கருங்கல் கப்பலாக நாவுக்கரசர் மிதந்துவந்த கடற்பதி, திருப்பாதிரிப்புலியூர்.

கஉரு. மாமாங்க நீர் பொங்கும் வளம் மல்கியபதி, திருக்குடந்தை என்னும் கும்பகோணம்.

கஉகூ. அங்கத்தை மங்கை வடிவு ஆக்கின ஊர், திருஞானசம்பந்தர் எலும்பைப் பெண் ஆக்கிய சென்னையின் ஒருபகுதியாகிய திருமயிலாபுரி. தமிழ்க்குத் தங்கத்தைத்தந்த ஒப்பற்ற ஊர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமிழ்ப்பாடலுக்குத் தங்கம் கொடுத்த ஊராகிய விருத்தாசலம் என்னும் முதுகுன்று.

கஉஎ. கனல் வீசும் மாமலை, திருவண்ணாமலை. ஒண்கிரி; திருக் கழுக் குன்றம்.

கஉஅ. கான் தாண்டு: வாய்க்காலில் தாவுகின்ற. வெம்: கொடிய. மூதூர், சுந்தரமூர்த்திகள் முதலையுண்ட பிள்ளையை அழைத்த அவிநாசி என்னும் ஊர்.

மைந்தன் உடல்அரிந்து மாதவத்தோர்க் கிட்டுவினைப்
பந்தம் அரிந்தோன் பழம்பதியும்—சொந்தமாம் கங0

ஆட்டைப் புலிகாக்கும் அம்பலமும் நாலுவசி
நாட்டி நடுக்குதிக்கும் நன்னகரும்—காட்டெயினன்

கண்ணைப் பறிகொடுத்த கற்பதியும் வண்ணான்தன்
பெண்ணைப் பறிகொடுத்த பேரூரும்—மண்ணுலகில்

தீண்டாதார் எச்சில் செழுமறையோர்க்கு ஈந்தாலும்
வேண்டாம் எனாதேற்கும் மெய்ப்பதியும்—மாண்டவர்தம்

காதில்உப தேசம் கடவுள்சொல் லும்பதியும்
சீதரன்மா யாபுரியும் சேவித்து—நாதிக்கும்

சங்கமுகந் தங்கெறித ரங்கமுக கங்கையுடன்
சங்கமுக தீர்த்தமெல்லாம் தானாடி—அங்கிருந்து கரு

---

கங0. பழம் பதி, சிராளனை அறுத்துக் கடவுளுக்கு உணவு சமைத்த சிறுத்தொண்டன் வாழ்ந்த செங்காட்டங்குடி.

கஙக. ஆட்டை: நடனத்தை. புலி: வியாக்ரபாத முனிவர். அம்பலம்: சிதம்பரம்.

கஙஉ. கற்பதி, கடவுளுக்குக் கண் கொடுத்த கண்ணப்பர் திருக்காளத்தி.

கஙங. எனாது: ஏன்று சொல்லாது.

கஙச. இறந்தவர் காதில் கடவுள் உபதேசம் சொல்லும் பதி, காசிநகர். சீதரன் மாயாபுரி, அரித்துவாரம். சீதரன், ஸ்ரீதரன் என்பதன் திரிபு. ஸ்ரீதரன் திருவை மார்பில் அணிந்த திருமால்.

கஙரு. சங்கம்: சங்குகள். தரங்கம்: அலை. சங்கமுகம்: கங்கா சாகரம், கங்கை கடலோடு கலக்கும் இடம்.

கங்குல் பகலாக் கடலோட்டக் கப்பலிலோர்
திங்களில்வந் தெய்தினேன் சேதுவினில்—மங்காத் கஙசு

தனுக்கோடி தர்ப்ப சயனம் பணிந்து
மனுக்கோடி சூழ்செந்தூர் வந்தேன்—கனத்த

திருப்பதிகள் ஒன்பதும்நான் சேவித்தங் குள்ள
அருட்பொலியும் தீர்த்தமெல்லாம் ஆடி—தருப்பொலியும்

குற்றாலம் நெல்வேலி கோதைவில்லி புத்தூர்வந்து
உற்றேன் திருச்சுழிகை ஊர்பணிந்தேன்—நெற்றிவிழித்

தம்பிரான் பூவணத்தைச் சந்தித்தேன் சங்கேந்தும்
எம்பிரான் சோலைமலைக்கு எய்தினேன்--பைம்பொன் கசo

தலைஅருவி ஆடியெங்கள் சங்கத்து அழகர்
மலரடியைப் போற்றி மகிழ்ந்தேன்—தலமகிமை கசக

---

கஙசு. கங்குல்: இரவு. திங்கள்: மாதம் சேது: தனுக்கோடி.

கஙஎ. தர்ப்ப சயனம்: திருப்புல்லாணி. மநுக் கோடி சூழ் செந்தூர்: மக்கள் கோடிக்கணக்கில் கூடுகின்ற திருச்செந்தூர்.

கஙஅ. திருப்பதிகள் ஒன்பது: திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஆழ்வார்கள் பாடிய ஒன்பது வைணவத் தலங்கள். அருட் பொலியும் தீர்த்தம்: கருணை ததும்பும் தீர்த்தம்.

கஙஅ, கஙகூ. தருப் பொலியும் குற்றாலம்: மரவளம் மல்கிய குற்றாலப்பதி. கோதை: ஆண்டாள். நெற்றிவிழி: நெற்றிக்கண்.

கசo. தம்பிரான்: சிவன். பூவணம்: திருப்புவனம். சோலை மலை: அழகர் மலை.

கசக. சங்கத்து அழகர்: சோலைமலை இருக்கும் பெருமாள்.

ஆனதினல் அஞ்சுநாள் அங்கிருந்தேன் அங்கேயோர்
ஞானியையன் தன்னுடனே நட்பானேன்மேன்—மையீர்!

சொக்கர் மதுரை தொழுதுவர வேநீரும்
ஒக்கவர வேண்டும் எனஉரைத்தேன்—தக்கோன்

நகைத்தான்இவ் வண்ணம் நடந்தகதை உண்டு
தொகுத்தமறை வேதியரே! சொல்வேன்—மிகுத்தபுகழ்

### ஞானியார் நல்வழி நவிலல்

மேவிச் சிறந்தகொந்தி வேந்தன்ஒற்றி யூர்த்திருநாள்
சேவிக்கப் போகமனம் சிந்தித்தான்—தாவில் கசரு

அமைச்சன்அங்கே சென்றக்கால் அங்கொருத்தி வல்லி
உமைச்சதிசெய் வாளென்று உரைத்தான்—
அமைச்சனுரை

மிஞ்சிநடந் தான்அந்த வேசைகைக்குள் சிக்கினன்
வஞ்சி மருந்தால் மதிகெட்டான்—குஞ்சரமும்

நாடும் நகரும் நவநிதியும் வாங்கினள்
ஓடும் குழையுமா ஓட்டினள்-ஆடுகின்ற கசஅ

---

கசந. ஒக்க: உடன். தக்கோன்: தகுதிவாய்ந்த அந்த ஞானியையன்.

கசச. தொகுத்த மறை: தொகுக்கப்பட்ட வேதம்.

கசரு. கொந்தி வேந்தன்: கொந்தி என்னும் நாட்டு அரசன். ஒற்றியூர்: திருவொற்றியூர். தாவு இல்: குற்றம் அற்ற.

கசசு. அமைச்சன்: மந்திரி. வல்லி, ஈண்டுத் தாசிப்பெண்.

கசஎ. மிஞ்சி: கடந்து. மதி: புத்தி. குஞ்சரம்: யானை.

கசஅ. ஓடு: பிச்சைஎடுக்கும் பாத்திரம். குழை: இலை.

கூத்தாடி கள்வன்போற் கோலம்பூண் டாடுவதைப்
பார்த்தீர் இலேயோசொற் பாவலீர்?—வாய்த்த கசக
கறைக்கண்டர் தென்மதுரை காணவென்ருல் ஆங்கோர்
தொறட்டுண் டதனைநான் சொல்வேன்—
பொறுத்தகசம் கரு௦

**மதனாபிஷேகத்தின் பிறப்பு**

அட்டதிக்கும் சூழ்கோவில் ஆலவாய்ச் சொக்கருக்குத்
தட்ட தெடுக்கும் தகையினுள்—வட்டமுலே
மாணிக்க மாலேயெனும் மங்கையொரு பெண்ணடிதன்
காணிக்குத் தேடக் கருத்தாகி—ஊணேத்
தறைமெழுகி உண்டு தவங்கிடந்து மெத்தக்
குறைகள் எனக்குறிகள் கேட்டும்—பெறுவதற்குச்
செப்புத் தகடெழுதிச் செம்பொற் கழுத்தில்இட்டும்
கெர்ப்பத்துக் காமருந்து கிண்டியுண்டும்—தப்பாத்
திருவனந்தல் சேவித்தும் செண்பகப்பூ வாசம்
மருவனந்த நந்தனங்கள் வைத்தும்—திரைஉடலே கருரு

---

கரு௦. கறைக் கண்டர்: விஷத்தைக் கழுத்திலே வைத்த சிவனுர். தொறட்டு: சங்கடம். பொறுத்த கசம்: தாங்கிய யானே.

கருக. ஆலவாய்: மதுரை. தட்டது எடுக்கும்: தட்டுத் தூக்கும் பணிமேற் கொண்ட. தகை: அழகு.

கருஉ. மாணிக்கமாலே, மதனபிஷேகத்தின் தாய். ஒரு பெண் அடி தன்காணிக்குத் தேட: தனது காணியை ஆள வழித்தோன்றலாக ஒரு பெண்பெற. ஊண்: உணவு.

கருரு. திருவனந்தல் சேவித்தல்: அதிகாலே வணக்கம். அனந்த நந்தனங்கள்: பல நந்த வனங்கள். திரை உடல்: சுருக்கம் விழுந்த உடம்பு.

வேற்றொருவர் கண்டு விரும்பாத நாள்தாழை
காற்றடிக்கப் பூத்த கதைபோல—சாற்றும் கருசு
அரிவை தெரிவைகடந் தப்பால் நடக்கும்
பருவத்தே கர்ப்பம் படைத்தாள்—நரைவீழ்
தலையிற் கறுப்பிறங்கிச் சாய்ந்ததெனத் தொங்கும்
முலையிற் கறுப்பு முதிர—கலக
விழிவேல் குழியமுகம் வெண்மதியம் ஆக
எழில்மேனி பச்சைநரம்பு எய்த—தழைதருசூல்
கொண்ட வயிறுபெஞ்சைக் கூளேந்த்ரன் சத்திரத்தில்
உண்டுவருவோர்வயிற்றை ஒப்பாக—தண்தேன் கசுo
அளிக்குடிக்கும் காராளர் அம்புளியங் காய்க்கும்
புளிக்குடிக்கும் முன்னமிச்சை பூண்டாள்—களிக்கவயிற்று
ஊடு தரித்தபிள்ளைக் குள்ளாவார் வாயில்அள்ளிப்
போடுவதைத் தன்வாயிற் போட்டறிந்தாள்—கூடிவந்த

கருசு. வேற்றொருவர் கண்டு விரும்பாத நாள்: ஒருவரும் ஆசைப்படாத கிழப்பருவம்.

கருஎ: அரிவை: இருபது வயது முதல் இருபத்தைந்து வயதுக்கு உட்பட்ட பெண். தெரிவை: இருபத்தாறு வயது தொட்டு முப்பத்தொரு வயதுக்குட்பட்ட நங்கை.

கருகூ. குழிய: குழி வீழ. சூல்: கருப்பம.

கசுo. பெஞ்சைக் கூளேந்திரன்: கூளப்பநாயக்கன்.

கசுக. அளி, அள்ளி என்பதன் இடைக்குறை. தார்: மாலை. அம்: அழகு. களிக்க: மகிழ்ச்சியுற.

கசுஉ. தரித்த: உண்டான. பிள்ளைக்கு உள்ளாவார் வாயில் அள்ளிப் போடுவதை: மதனுபிஷேகத்தின் வலையில் வீழ்வார் வாயிலே அள்ளிப்போடும் மண்ணை. தன்வாயிற் போட்டு அறிந்தாள்: தன் வாயிலே போட்டுத் தெரிந்து கொண்டாள். கருவுற்றவர் மண் தின்னும் இயற்கை இவ்வளவு நயமாகக் கூறப்படுகிறது.

*மாதமொரு பத்தாய் வயிறுளைந்து பெற்ருள்அவ்*
*வேதனையால் மூர்ச்சையாய் மெய்சோர்ந்தாள்—தாதிமார்*

*பெண்ணென்ருர் காதிற் பிழிந்த மருந்ததுபோல்*
*துண்ணென்று எழுந்து துயர்தீர்ந்தாள்—வண்ணமணிப்*

*பொற்ருெடிக்கை மங்கைநல்லாள் பொன்காய்க்கும்*
*பூடொன்று*
*பெற்றதுபோல் ஈன்றெடுத்த பெண்கொடியை—*
*மற்றுளார் கசுரு*

**மதனுபிஷேகத்தின் வளர்ப்பு**

*ஏந்திஇரு கையால் எடுத்துநறு நீராட்டிப்*
*பூந்துகிலால் மெய்துவட்டிப் போற்றினர்—வாய்ந்தசங்கிற்*

*சேனையுடன் வஞ்சத் திருட்டும் மருட்டும்அவ*
*தானப் புரட்டும் தனம்பறிக்க—மானிடர்க்குச்*

*செய்யுங் கபடுமகா தித்திரிப்பும் ஆகாசப்*
*பொய்யுங் கலந்து புகட்டினள்—"செய்யபசுந்*

*தேனே! கனியே! தெவிட்டாத தெள்ளமுதே!*
*மானே! என் கண்ணே! மரகதமே!—நான்ஈன்ற*

*பொன்னே!" எனஎடுத்துப் பொற்குறங்கின் மீதேற்றி*
*மின்னேர் இடையாள் விழிபரப்பி—நன்னுதலிற்* களo

---

கசுரு. உளைந்து: வலித்து.

கசுச. துண் என்று: விரைந்து.

கசுரு. தொடி: வளையல். பூடு: செடி.

கசுசு. நறு: நல்ல. பூந்துகில்: மெல்லிய ஆடை. மெய்துவட்டி: உடலைத் துடைத்து.

கசுஎ. சேனை: குழந்தைக்கு ஊட்டும் முதற்பால். தனம்: பணம்.

கசுகூ. மரகதம்: பச்சை.

களo. குறங்கு: துடை. நுதல்: நெற்றி.

பாப்பிட்ட சொல்லிவெள்ளிப் பட்டம்ஏன வெண்நீற்றுக்
காப்பிட்டாள் சிற்றடிக்கும் காப்பிட்டாள்—சேப்பிட்ட
செய்க்குவளைக் கண்மயிலே! செம்பொனுள்ள
பேர்களையுன்
கைக்குள்வளை என்றுவளை கைக்கிட்டாள்—சிக்காப்புள்
ஒட்டுக்குள் ளாவதுபோல் உள்ளபணக் காரர்களுன்
பொட்டுக்குள் ளாகஎன்று பொட்டிட்டாள்—
பொட்டெனவே
வேந்தர் புதையல் வெளியாக்கும் அஞ்சனம்போல்
வாய்ந்தவடி வேல்விழிக்கு மையிட்டாள்—காந்திமுக
வன்னக் கமலமதில் வண்டிருந்தாற் போலமகள்
கன்னத்தின் மீதோர் கறுப்பிட்டாள்—
சொன்னதனம் களடு
வீடேறப் பண்டைமுதல் மேலேறத் தன்குடும்பம்
ஈடேறப் பொன்தொட்டில் ஏற்றினள்—"தேடிஉன்பால்

---

களக. பா பிட்ட சொல்லி: பாடவல்ல-பிட்டுப் போன்ற இனிய சொல்லினள். வெண் நீற்றுக் காப்பு: திரு நீற்றுக் கோடு. காப்பு: தண்டை.

களஉ. செய்: வயல். குவளை: நீலோற்பலம். கைக்குள் வளை: கையடக்கமாகச் சுருட்டு. சிக்காப்புள்: பிடிபடாத பறவை.

களங. ஒட்டு: குருவி பிடிக்க இணைத்துவைக்கும் பசை. பொட்டெனு: விரைவாக.

களச. அஞ்சனம்: மை. காந்தி: ஒளி.

களடு. வன்னக் கமலம்: அழகிய தாமரை. குழந்தைகட்குக் கன்னத்தின்மீது ஒரு கறுப்புப்புள்ளி வைப்பது அழகை மேலும் எடுத்துக் காட்ட. "வன்னப் புதுமதியில் வந்தகளங் கம்போலே, கன்னத்தின் ஊடே கறுப் பிட்டாள்" என்றார் சேதுபதி விறலி விடு தூதுடையாரும்.

வாரா தவராரார்? வந்துமடிச் சிலேகொட்டித்
தாரா தவராரார்? தந்தணையிற்—சேராதார் கஎஎ
ஆராரார்? சேர்ந்துனக்குள் ஆசைகொண்டு சுற்றுதார்
ஆராரார்?'' என்றுதா ராட்டினுள்—தாராட்டிச்
சீராட்டி முன்இருத்திச் செங்கைகொட்டிக் காட்டிமஞ்சள்
நீராட்டி அந்தி நிலாக்காட்டி—பாரில்
கிளைப்பெரிய நாகேந்த்ரன் கீர்த்தியைச்சொல் வாணர்
வளர்ப்பதுபோல் பெண்ணை வளர்த்தாள்—
முளைக்குமகள் கஅ0

தள்ளி நடந்தாள் அதுகண்டு தாய்க்கிழவி
துள்ளி நடந்தாள் துயர்தீர்ந்தாள்—பிள்ளைஒரு
சிற்றுடை கட்டித் தெருவில்வரக் கண்டுதிட்டி
சுற்றும லேதிட்டி சுற்றினுள்—மற்றும் அந்த
வம்பி மகள்மழலை வார்த்தையைக்கேட்டு ஆடவரைத்
தம்பியென்று சொல்லத் தலைப்பட்டாள்—அம்புயச்செங்

---

கஎஎ. வாராதவர் ஆர் ஆர்? தாராதவர் ஆர் ஆர்? எனப் பிரிக்க. அணை: படுக்கை.

கஎஅ. ஆர் ஆர் ஆர்? எனக் கொள்க. தாராட்டினுள்: தாலாட்டினுள்.

கஎகூ. செங்கை கொட்டிக் காட்டி: கையைச் சேர்த்துக் கொட்டி விளையாட்டுக் காட்டி. அந்தி நிலாக்காட்டி: மாலைப்பிறையைக் காண்பித்து.

கஅ0. கிளைப் பெரிய நாகேந்த்ரன்: பெருங்கிளை தாங்கும் நாகம கூளப்பநாயக்கன். கீர்த்தியை: புகழை. சொல்வாணர்: புகழ்பாடுவோர். முளைக்கும் மகள்: வளர்ந்து வருகின்ற பெண்.

கஅக. தள்ளி: தள்ளாடி.

கஅஉ. திட்டி சுற்றுமல்: கண் ஏறுபட்டு விடாமல்.

கஅங. வம்பி, தாயாகிய மாணிக்க மாலை. அம்புயம்: தாமரை.

கைக்குவளை யிட்டுக் கடகம் பவளமிட்டுத்
தக்கையிட்ட காதில் தளப்பமிட்டு—பக்கத்தில் கஅச
கொண்டைஇட்டுக் குப்பிஇட்டுக் கொப்பிட்டுக்
காலில் வெள்ளித்
தண்டைஇட்டுச் செம்பொன் சதங்கைஇட்டு—
வெண்தரள கஅரு
மாலைஇட்டி ரட்டை அரைஞாண் மருங்கில்இட்டு
வேலைஇட்ட சுட்டிநெற்றி மேலிட்டு—கோலச்சிந்
தாக்கிட்டுச் செம்பவளத் தாழ்வடங்கள் இட்டுவச்ர
மூக்குத் தளுக்கிட்டு முத்தமிட்டு—நாக்குளிர
வார்இட்ட கொங்கை மதனபி ஷேகம்எனப்
பேர்இட் டுலகறியப் பேச்சிட்டாள்—ஆரியமும்
கன்னடமும் கட்டிக் கரும்புபோ லேவடுகும்
பன்னு தமிழும் படிப்பித்தாள்—மன்மதவேள் கஅகூ

---

கஅச. கடகம்: தோள் வளை. தக்கை, காதுத் தொளை தூர்ந்து போகாதிருக்கப் போடும் நெட்டித் துண்டு. தளப்பம்: காது அணிவகை.

கஅரு. குப்பி, ஓர் ஆபரணம். வெண் தரளம்: வெண்முத்து.

கஅசு. இரட்டை அரைஞாண்: இரண்டு கொடிகள் கொண்ட அரைக் கயிறு. மருங்கு: இடை. வேலை இட்ட சுட்டி: வேலாயுதம் பொறிக்கப்பட்ட நெற்றிச் சுட்டி.

கஅசு. கஅஎ. கோலம்: அழகு. சிந்தாக்கு: ஓர் அணி. வச்ர மூக்குத் தளுக்கு: வைர மூக்குப் பொட்டு.

கஅஅ. வார்: ரவிக்கை. ஆரியம்: வடமொழி.

கஅகூ. வடுகு: தெலுங்கு. மன்மத வேள்: மன்மதனாகிய வேள்.

### மதனாபிஷேகத்தின் பருவக்குறி

சிற்பரத அல்குல் சிறியாள் வயதுஎழில்
நற்பரதம் எல்லாம் நடித்தறிந்தாள்—உற்பனமாம் ககூo
மோனவித்தை உள்ள முனிவோரை யும்மயக்கும்
கானவித்தை எல்லாம் கரைகண்டாள்—மேனிக்குள்

வாடைமஞ்சள் பூசுவதும் மல்லிகைப்பூச் சூடுவதும்
ஆடவரை வீட்டுக்கு அழைப்பதுவும்—ஓடிப்
பிலுக்குவதும் கிட்டநின்று பேசயிலே முத்துக்
குலுக்குவதும் கொஞ்சுவதும் கொங்கைத்-தலைக்கறுப்பை
முந்திகொண்டு வெட்கம்போல் மூடுவதும் காமுகரை
அந்திமட்டும் வைத்துவிளை யாடுவதும்—வந்தவரை
வாள்வீச்சுப் போல வரிவிழியால் வெட்டுவதும்
போழ்வாய்ச்சி கண்டுடம்பு பூரித்தாள்—
வேளனையார் ககூரு

---

ககூo. சிற்பரத அல்குல்: சிற்பக் கலைப்படி அமைக்கப்பட்ட தேர் அனைய அல்குல். பரதம்: நடனக்கலை. உற்பனம்: விரைந்து அறிதல்.

ககூக. மோனம்: வாய் பேசாமை. கான வித்தை: இசைக்கலை. கரைகண்டாள்: முழுதும் அறிந்தாள். மேதினி: பூமி.

ககூஉ. வாடை: மணம்.

ககூங. பிலுக்குதல்: தளுக்குப்பண்ணுதல். முத்துக் குலுக்குதல்: ஒரு உலுக்கு உலுக்குதல்.

ககூச. முந்தி: சேலைத்தலைப்பு. அந்தி: சாயும் பொழுது.

ககூரு. வரி விழி: கோடுபடர்ந்த கண். போழ்வாய்ச்சி: பொக்கை வாய்த் தாய். வேள் அனையார்: காமனை நிகர்த்த காமுகர்.

கைக்குள்வச மாகிவந்து காலைப்பிடிக்குமந்தச்
சொக்குப் பொடிமருந்தும் சொல்லிவிட்டாள்—
சொக்கர்புது ககூசு

மண்டபத்தின் முன்னே வசந்தன் திருநாளில்
எண்திசையோர் மெச்சஅரங்கு ஏற்றினாள்—
ஒண்தொடிக்குச்

சின்னச் சிமிழாகிச் செப்பாகித் தேங்காயாய்
வன்னத் தனங்கள் வளர்ந்தேறக்—கன்னிகையாள்

தன்னை அறிந்தாள் தழுவினாள் தன்பழைய
பொன்னை ஒருபக்கம் புதைத்துவைத்தாள்—மன்னவர்கள்

சுற்றுவதும் காமுகரைத் தோய மகட்குமனம்
பற்றுவதும் கண்டறிந்தாள் பப்பரத்தி—
பெற்றெடுத்த உoo

---

ககூசு. சொக்குப் பொடிமருந்து: மயங்கவைக்கும் மருந்து:

ககூசு, ககூஎ. சொக்கர் புதுமண்டபம்: சொக்கேசரின் மதுரையிலுள்ள புதுமண்டபம். வசந்தன்: மன்மதன். எண்திசையோர்: எட்டுத் திக்கிலுள்ளவர். அரங்கு ஏற்றுதல்: அம்பலம் ஏறச் செய்தல். ஒள் தொடி: ஒளி செய்யும் வைரக்காப்பு அணிந்த மதனாபிஷேகம்.

ககூஅ. சின்னச் சிமிழ்: சிறிய டப்பி. செப்பு: கிண்ணம். வன்னத் தனங்கள்: அழகிய கொங்கைகள்.

ககூகூ. அறிந்தவள் தாய்க் கிழவி. தழுவினாள்: மகள் செயலுக்கு மெச்சித் தழுவிக் கொண்டாள். புது வருவாய்க்கு இடம் தந்து பழைய நிதியை மூடிவைத்து விட்டாள்.

உoo. தோய: அணைய. பப்பரத்தி: பம்பரம் போலச் சுற்றித் திரிபவள்.

### மகட்குத் தாய் போதிப்பு

மானே! என் கண்ணே! மயிலே! குயிலே! செந்
தேனே! மதனுபி ஷேகமே!—மீனீன்ற உ0க

குஞ்சுச்கு நீச்சும் கொடும்பாம்பின் குட்டிக்கு
நஞ்சும் கொடுத்தவரார் நங்கையே—செஞ்சிலைக்கைச்

சிவகனுக் கங்கொருபெண் சிங்கமொரு கன்றீனும்
பாவனைபோ லேஎழுதிப் பக்கத்தில்—ஓவியமாக்

காரானை ஒன்றெழுதிக் காட்டஅரிக் கன்றுதுள்ளிப்
போராடிப் பாய்ந்தகதை பொய்யலவே—யாருக்கும்

சாதித் தொழில்தனக்குத் தானே வரும்ஒருவர்
போதிக்க வேண்டுமோ? பொற்கொடியே!—
மாதர்க்குள் உ0ரு

உன்புத்தி என்புத்திக் கோரிரட்டி யாகினும் என்
தன்புத்தி யும்மகளே! சற்றேகேள்!—ஒன்பதூர்க்

கொஞ்சு பரிநகுலன் கூளேந்த்ரன் பன்றிமலை
மஞ்சட் குளியை மறவாதே!—மஞ்சள்

மணங்காட்டி ஆட்பிடிக்கும் வாடைப் பொடியின்
குணங்காட்டிக் கண்காட்டிக் கோலம்—இணங்கியபொன்

---

உ0உ. சிலை: வில்.

உ0ங. கன்று ஈனும் பாவனை: குட்டிபோடும் மாதிரி.

உ0ச, கார் ஆனை: கறுப்பு யானை. அரிக் கன்று: சிங்கக்குட்டி.

உ0ரு. இரட்டி: இருமடங்கு.

உ0எ. கொஞ்சு பரி நகுலன்: கொஞ்சும் குதிரையை யுடைய நகுலனை ஒத்தவன்.

உ0அ. வாடைப்பொடி: வாசனைத் தூள்.

உத்தரியம் சற்றே ஒருபால் தெரியவிட்டுக்
குத்துமுலைச் செம்பொற் குடம்காட்டி—முத்துநகை ௨௦௯
காட்டிவகை காட்டிநடை காட்டி இடை காட்டிநயம்
காட்டி இளை யோர்க்காசை காட்டுவாய்!—
கோட்டுமுலை ௨௧௦
சாய்ந்தால் முகம்திரைத்தால் சல்லிக்கா
சொன்றும் உனக்கு
ஈந்தா தரிப்பவரார் ஏந்திழையே!—ஆய்ந்தபஞ்சுப்
பெட்டிபோ லேநரைத்த பெண்கள்கையில் என்னவரும்!
சட்டி சுறண்டவரும் தையலே!—கட்டழகின்
வாலிபத்தே தேட்டில் மனம்வைத்தால் பொன்தகட்டால்
வேலி இட்டுக் கட்டலாம் வீடெல்லாம்—காலைப்
பிடிப்பார்! முழுப்புரட்டுப் பேசிஇலை கிறி
மடிப்பார்! தருவார்! வருவார்!—படுக்கைவிதம்
காட்டுவேன் என்பார்அக் கள்ளவண்டர் தங்களைஉன்
வீட்டில் அழையாதே மெல்லியலே!—
வீட்டில்வந்து ௨௧௫
பாயப் பகட்டுவிதம் பண்ணுவார்க் குப்புழுதி
வாயிற் புகட்டும் மயல்பூட்டு!—நீ ஒருத்தர்க்கு ௨௧௬

---

௨௦௯. உத்தரியம்: மேலாடை. ஒருபால்: ஒரு பக்கமாக. முத்து நகை: முத்துப்போன்ற பல்.

௨௧௦. கோடு: கொம்பு.

௨௧௧. திரைத்தால்: சுருக்கம் கண்டால்: ஆய்ந்த: ஆராய்ந்த.

௨௧௩. தேட்டில்: பணத்தில். பொன் தகடு: தங்கப்பாளம்.

௨௧௪. இலை: வெற்றிலை.

௨௧௬. பாய: புகுவதற்கு. பகட்டுவிதம்: ஏமாற்று வித்தை.

ஆசைவைத்தால் பின்ஒருத்தர் அண்டார் உடன்ஒத்த
வேசையர்க்கெல் லாம்நகைப்பாம் மெல்லியலே—
காசுபணம் உகஎ

குப்பல்குப்ப லாகக் குவித்தாலும் வாலிபத்தில்
வைப்பிருக்கச் சற்றுமனம் வையாதே!—செப்பு

முலையைக் கசக்கிவிட்டு முட்டாள் சரசத்து
அலையவிடும் பேரை அழையாதே—சிலைநுதலாய்!

முன்பின் அறியார் முடிப்பாகப் பொன்எழுநூற்று
ஒன்பதுதந் தாலும்மனம் ஒவ்வாதே! இன்பமுடன் உஉ௦

கூடுவார் நித்திரைநீ கொள்வதுபார்த் துப்பொடியைப்
போடுவார் சேலைவர்க்கம் பொன் உடைமை—
சோடிணையாய்ச்

சேரச் சுருட்டிஅப்பால் செல்வார் விடிந்ததற்பின்
யாரைப்போய்க் கேட்பதுநாம் ஆரணங்கே!—ஊரிலே

தந்தைக்கீழ்ப் பிள்ளைஉண்டு தாய்க்கீழ்ச் சிறுவருண்டு
வந்தால் மறைய வரச்சொல்லி—தந்தமதால் உஉந

---

உகஎ. அண்டார்: நெருங்கமாட்டார்.

உகஅ. குப்பல் குப்பலாக: கும்பல் கும்பலாய். வாலிபம்: இளம் பருவம். வைப்பு இருக்க: ஒரேயொருவருக்கு வைப்பாக இருக்க. செப்பு: கிண்ணம்.

உகக. சிலை நுதல்: வில் நெற்றி.

உஉ௦. ஒவ்வாதே: உடன்படாதே.

உஉக. பொடி: மயக்க மருந்து. வர்க்கம்: வகை. சோடிணை: ஒழுங்கு.

உஉஉ. சேர: ஒருசேர.

உஉந. மறைய: ரகசியமாக. தந்தம்: பல்.

வாயில்வடுச் செய்யாமல் மார்பில்நகம் வையாமல்
தோயும்இதங் காட்டிச் சுகங்காட்டு—சேயிழையே! உஉச

அந்தி படப்பணயம் அத்தரொக்கம் ஆகவந்தால்
சொந்தமுள்ள பேர்தனக்குச் சொல்லியே—
முந்திவந்து உஉரு

சாரமுண்பாய் நீஅவன்பின் சக்கையைத்தின்
பானெனமுன்
நேரம் அழைத்தனுப்பு நேசமாய்—தூரத்து

இருந்துவந்து கூடிவிடுந் தேகுவார் தம்மேல்
பரிந்தாசை போறபிறகே பற்றி—பிரிந்திருக்க

மாட்டேனே உன்னுலே மாப்பிளைமார் ஆசையெல்லாம்
போட்டேனே என்னபொடி போட்டாய்நீ—வீட்டில்

தனித்திருக்கப் போமோடா! சாமீ! உன் தம்பல்
இனித்திருக்கும் தாடா! இருடா!—சனிக்கிழமைக்கு

அப்பாலோ நீவருவாய்! ஆணையிடு! முக்காலும்;
தப்பாதே! என்றனுப்பு தார்குழலே!—
மைப்பொருங்கண்

மாதுநல்லாய்! வேறு மருந்தேன் அவர்திரும்பும்
போது வருமே புதையலெல்லாம்—காதல்கொண்ட உருக

உஉச. வடு: தழும்பு. மார்பில் நகம் வையாமல்: அவன் மார்பிலே நகக் குறியைப்பதித்து விடாமல். தோயும் இதம்: நுகர்ச்சி நயம்.

உஉரு. பணயம்: பணம். அத்த ரொக்கம்: கையில் ரொக்கப் பணம்.

உஉஎ. பரிந்து: விருப்பங்காட்டி.

உஉகூ. தம்பல்: தம்பலம்.

உகூ0. முக்கால்: மும்முறை.

மன்னவரைத் தூங்குசப்ர மஞ்சத்தின் மீதிருத்திப்
பொன்அவரைக் கேளாமற் புல்லினல்-மின்அரசே! ௨௩௨

ஊர்க்கும் சலுகைநம்மோ டொத்தவர்க்கும் எண்ணிக்கை
யார்க்கும் கனத்தகுடி ஆகலாம்—பார்க்குள்ளே

புல்லுவிற்றும் கீரைவிற்றும் பொன்கொடுப்பார்
காண்நமக்குக்
கொல்லிமலைப் பாவாய்! குலதெய்வம்—பல்விழுந்த

கூனற் கிழவன் கொடுக்கும் பணயமதில்
நானக் குழலே! நரைஉண்டோ?—மானமின்றி ௨௩௫

அப்பன் வருவான் அவன்பின் மகன்வருவான்
தப்புமுறை என்றுநீ தள்ளாதே!—இப்புவியில்

மாலைக் குளியர்வெகு மாமாயக் கள்ளர்தங்கள்
ஜோலிக்குப் போகாதே தோகையே!—வேலையின்றித்

தத்தையனை யாரைத் தழுவிப் பணம்பறிக்கும்
எத்தரைநாம் எத்துவதும் எத்துகாண்!—சித்ரக்

கதையைக்கேள் என்பருவ காலத்தில் இந்தப்
பதியிலோர் குச்சிலியப் பையல்—மதுரை ௨௩௯

---

௨௩௨. சப்ரமஞ்சம்: கட்டில். புல்லினல்: அநுபவித்தால்.

௨௩௫. பணயமதில்: பணத்தில். நானக் குழல்: கஸ்தூரி அணிந்த கூந்தல்.

௨௩௭. மாலைக் குளியர்: மாலைப் போதில் நீராடுவோர்.

௨௩௮. தத்தை: கிளி.

௨௩௯. பதி: ஊர். குச்சிலியப் பையல்: குச்சுக்கூட இல்லாத பயல்.

மழுங்குணிஎன் னும்பேரான் மாதர் தனத்தைத்
தழுவிப் பறிப்பான் தனத்தை—முழுதும் உசo
கிழக்குத் தெருவின்நெட்டைக் கிஷ்ணளின் வீட்டைக்
குளப்பறியா கப்பறித்தான் கூடி—முளைத்தெழுந்த
செப்பு முலைமாதே! சிவிலிபுத் தூர்த்தாசிக்
குப்பி உடைமையெலாம் கொள்ளைகொண்டான்—
வைப்பென்று
தந்திரமா கப்பசப்பித் தஞ்சாவூர்ச் செல்லிதனைக்
கந்தை பொருத்தவிட்டான் கைம்மருந்தால்—இந்தவகை
ஆங்கவனுக் கேகொடுத்தார் அல்லாது அவன்பொருளை
வாங்கினபேர் இல்லைஎன்மேல் மாலாகி—ஈங்குவந்தான்
குன்றுமுலை யாய்!கொழுத்த குட்டி அகப்பட்டது
என்றுபூ ரித்தேன் இருதோளும்—அன்றுமுதல் உசரு
மாட்டுப் பரங்கிக்காய், மாதே! தினங்கறியாக்
கூட்டிக்கொண் டாங்கவனைக் கூடியே—வீட்டில்வந்த
நாலாம்நாள் அல்லில் நடுச்சாமம் சோதித்துக்
காலில் தொடுசெருப்புக் கட்டியே—மேலெல்லாம் உசஎ

---

உசo. முதலாவது தனம், கொங்கை; இரண்டாவது தனம், பொருள்.

உசக. நெட்டைக் கிஷ்ணள்: உயரமாக இருந்த கிருஷ்ணள் என்னும் வேசி. குளப் பறியாக: குளம் தோண்டுவது போல.

உசங. பசப்பி: பசப்புவார்த்தை கூறி. கந்தை பொருத்த: கிழிந்த துணி கட்ட.

உசச. மாலாகி: மயக்கங் கொண்டு

உசரு. பூரித்தேன்: பருத்தேன்.

உசசு. கூடி: அணைந்து.

உசஎ. அல்: இரவு.

*வெண்ணீறு பூசியைந்து வீரசடை பின்னிவிட்டுப்*
*பெண்நீலி என்றுகண்டோர் பின்வாங்க—*
*எண்ணமின்றிக்* உசஅ

*கள்ளுஞ்சோ றுங்கைச் சுரிகையுமாய்ப் போய்க்கழுவில்*
*கள்ளன் வலதுகுதிக் கால்நரம்பில்—மெள்ள*

*விளக்கெரித்து நெய்வடித்து வீட்டில்வந்து நன்றாய்*
*உழக்கரிசி பெய்துஊற வைத்து—புளிப்பில்லாச்* உருo

*சாற்றிலிட்டும் பாற்குழம்பின் சர்க்கரையில் கூட்டி இட்டும்*
*சோற்றிலிட்டும் நெஞ்சைச் சுழலவிட்டு—வேற்றவன்உ*

*பாயத்தால் தேடும் பணப்புற்றி லேகரடி*
*வாயைவைத்தாற் போலுறிஞ்சி வாங்கிவிட்டேன்—*
*பேய்போலக்*

*கையிலுள்ள தெல்லாம்போய்க் கப்பரைஒன்*
*றேந்திஅதோ*
*தெய்வமே என்று திரிகிறான்—நெய்யரிசி*

*நாளுக்கு நாட்செலவாய் நங்காய் உனக்குவரும்*
*ஆளுக் கிருக்குதின்னம் ஆழாக்கு-வாள்விழியாய்!* உருச

---

*உசஅ. ஐந்து வீர சடை: ஐந்து பிரிவாகத் தொங்கும் வீரச் சடை.*

*உசகூ. சுரிகை: கத்தி.*

*உருக, உருஉ. வேற்றவன்: அந்த மழுங்குணி என்பவன். உபாயத்தால்: தந்திரத்தால். பணப்புற்றிலே கரடி வாயை வைத்தால்போல்: பணப்பொந்திலே, ஈசல் புற்றிலே கரடி வாயை வைத்ததுபோல.*

*உருங. கப்பரை: பிச்சைச்சட்டி.*

வேடிக்கை யாய்மாசி வீதியிலே நாம்உலவ
ஆடிக்கு முன்னேஎன் ஆசைஎனத்—தேடுநிதி உருரு
உள்ளவரை மெள்ள உபாயமாய்க் கூட்டிப்போய்க்
கொள்ளும் பவளமுத்துக் கோவைவடம்—உள்ள
கடையும் சவுளிக் கடையும்பார்த் தையா
கிடையாச் சரக்குக் கிடைத்தது—அடைவாய்என்
முத்தண்ட மாலையைக்கா தோலையைப்பொன் மோதிரத்தை
வைத்தென்ற லுங்கடுக வாங்கித்தா—பத்தஞ்சு
வட்டிசுமந் தாலுமப்பால் வாங்கலாம் என்பாய்அச்
சொட்டனுக்கு நெஞ்சு சுறுக்கென்னும்— பொட்டெனத்தன்
கைத்தனத்தை ஈவான் கடையிலே உள்ளசரக்கு
அத்தனையும் வாங்கி அறையிலிடு—வைத்து உசூ௦
மருந்திடுப்பிற் கட்டி வருவார் சிலர்மேல்
இருந்துடம்பை வாட்டி எடுப்பார்—பரிந்தணைந்து உசூக

---

உருரு. மாசி வீதி: மதுரை நகரில் நாற்புறமும் உள்ள பெரிய வீதிகள். ஆடிக்குமுன்: ஆடிமாதம் பிறப்பதற்கு முன்னர். தேடு நிதி: தேடிய பொருள்.

உருசு. மெள்ள: மெதுவாக. உபாயம்: தந்திரம். பவளம் முத்துக்கோவை வடம்: பவளமும் முத்தும் கோத்த மாலை.

உருஎ. அடைவாய்: அடகுவைத்து.

உருஅ. கடுக: விரைவாக.

உருகூ. என்பாய்: என்று உரைப்பாய். சொட்டன்: சொத்தைப்பயல். பொட்டென: விரைவாக.

உசூ௦. கைத் தனத்தை: கைப்பொருளை. அறையில் இடு: அறையினுள் வைத்துப்பூட்டு.

உசூக. பரிந்து அணைந்து: விரும்பி மேவி.

கைச்சரசம் போல்தடவிக் கண்டு பிடித்துடனே
பிச்சுப் பிடுங்கிஎறி பெண்அணங்கே!-லச்சைஅற உகூஉ
மன்மதநூ லைப்படித்த வம்பரைஎன் ஆணையுன்றன்
ஜென்மஜென்மம் உள்ளமட்டும் சேராதே!—சன்யாச
ருத்திராட் சப்பூனை ரூபர்சிலர் உண்டுவந்தால்
மெத்தையிலே வைத்து விளக்கணைத்து—சத்தமின்றிக்
கூடையிலே ஆள்வந்து கூப்பிட்டால் ஐயர்தமைக்
கூடையிலே மூடிவைத்துக் கூப்பிடுநீ—பாடிக் உகூடு
கடுக்கன் அலைக்கும் கவிப்புலவர் வந்தால்
துடுக்காய் ஒருவார்த்தை சொல்வார்—கொடுக்கஎன்றால்
ஐந்துபொன்னும் வாங்கார் அரைப்பணமே
போதுமென்பார்
சிந்தை அவர்மகிழச் செய்திட்டால்—நந்தம்
இசைபாடு வார்கூடா தென்றால் கொடிய
வசைபாடு வார்கெடுமே வாழ்வு—அசைஅளவும் உகூஅ

---

உகூஉ. லச்சை அற; வெட்கம் கெட.

உகூங. மன்மத நூல்: காம சாத்திரம். வம்பரை: வம்புக்காரரை. என் ஆணை: தாயாகிய என்மீது ஆணையாக.

உகூச. ருத்திராட்சப் பூனை ரூபர்: ருத்திராட்சம் தரித்த பூனையைப்போலப் பிறரை ஏமாற்றும் வேஷக்காரர். சத்தம் இன்றி: ஓசைப்படாமல்.

உகூடு. கூடையிலே: கலக்கும்போது.

உகூகூ. கடுக்கன் அலைக்கும் கவிப்புலவர்: காதுக் கடுக்கனை ஆட்டுகின்ற கவிபாடும் பாலவர். துடுக்காய்: வெடுக்கென்று.

உகூஎ. அரைப் பணம்: பாதிப்பணம் அன்று; இடையின் அடியிலுள்ளபாம்புப் படம். நந்தம்: நம்முடைய.

உகூஅ. இசை: புகழ். வசை: இகழ்.

அஞ்சுகின்ற கச்சேரி ஆட்சே வகர்வந்தால்
வஞ்சி! அவர் ஈந்ததைநீ வாங்கிக்கொள்—கொஞ்சமென

எண்ணுதே! கைம்முதல்மற் றென்னபோம் ஓர்செம்பு
தண்ணீர்போம்! நாம்இடும்பொய்ச் சத்தியம்போம்—
பெண் அணங்கே! உஎ०

வாஎன்று அழைப்பார் மணியப் பிலுக்கர் சும்மா
போஎன்று சொன்னுலும் பொல்லாப்பு—பாவையே!

சாதனையாச் சேலையிலே தம்பலத்தின் சாறுஉமிழ்ந்து
சூதகமா னேன்என்று தூர இரு—மாதவிடாய்

ஆனநா ளிற்பணயம் அத்தரொக்கம் காணிலொரு
பானைவெந்நீர்க் காகஎண்ணிப் பாராதே!—நானுன்மேல்

மோகமுற்றேன் நீஎன்மேல் மோகமில்லை என்றுசிலர்
தோகைநல்லாய்! உன்கருத்தைச் சோதிப்பார்—
ஓகோநீர்

என்னமாச் சொல்லவந்தீர் என்னுசை உம்மேல்என்று
அன்னமே என்தலைதொட்டு ஆணையிடு—
சொன்னஅந்தப்

பொய்யாணை யாற்சிவன் போகுதோ பார்எனக்குத்
தையால்! அவ் ஆணை தயிர்ச்சாதம்—கையில் உஎசு

உசுகூ. வஞ்சி: பெண்ணே.

உஎக. பிலுக்கர்: பகட்டுக்காரர்.

உஎச. மோகம்: ஆசை. சோதித்தல்: பரிசோதித்தல்.

உஎரு. ஆணையிடு: சத்தியம்செய்.

உஎசு. சிவன்: உயிர். பொய்ச் சத்தியம் தயிர்ச் சாதம் சாப்பிடுவதுபோல.

இருட்டினில்செல் லாப்பணத்தை ஈந்து படுத்துக்
கருக்கலிலே போவாரைக் காட்டித்–தரச்சொல்லு உ௱௯

வாய்மட்டாப் பேசினுல் மானே முசலின்மேல்
நாயைவிட்டாற் போலெழுப்பி நம்மைவிடு !—
கோயிலுக்குள்

நம்பியார் ஐயருடன் நானுண்டு நம்பியார்
தம்பியா ரைக்கூடிச் சஞ்சரிநீ—அம்பெனுங்கண்

மைவித்தா ரக்குயிலே ! வாய்வித்தா ரக்காரன்
கைவித்தா ரக்காரன் கையைவிடு !–செய்யுமறைக் உ௨௰

கட்டளையார் வந்தாலுன் கைம்மருந்தா லேஅறிவைத்
தட்டழியப் பண்ணித் தனம்பறிநீ !—அட்டிலிலே

சோறு சமைக்கும் சுயம்பாகி வந்தாக்கால்
வேறுமொரு வேளாண்மை வேண்டுமோ !—சாறும்

பரும்படியாச் சம்பாவும் பாற்குழம்பும் நெய்யும்
வரும்படிந்த கட்டளையாய் மானே !-தரும்பொருளை உ௨௩

---

உ௱௯. அம்பு எனும் கண்: பாணம் என்று சொல்லக்கூடிய கண்.

உ௨௰. வாய்வித்தாரக்காரன்: வாய்வீச்சு வீசுபவன். கைவித்தாரக்காரன்: கையைவிரித்துவிட்டுப் போவோன். கையைவிடு: இவர்களையெல்லாம் தள்ளிவிடுவாயாக!

உ௨௰, உ௨௧. மறைக்கட்டளையார்: வேதத்தை முறையாகப் படிப்போர். அறிவைத் தட்டுஅழியப்பண்ணி தனம் பறி: அறிவை நிலை குலைத்துப் பொருளைக் கவர். அட்டில்: அடுப்பு.

உ௨௨. வேளாண்மை: உபகாரம். சாறு: ரசம்.

உ௨௩. பரும்படியும் சம்பாவும்: பெரிய படிக் கணக்கில் சம்பாச் சோறும். பாற் குழம்பு: திரட்டுப்பால். வரும் படிந்த கட்டளையாய்: பொருந்திய தினக் கட்டளையாய் வந்துகொண்டே இருக்கும்.

வெம்பளிக்கை பண்ணுதே வெஞ்சினப்பண்
டாரிவந்தால்
உம்பளிக்கை ஊர்வரத்தை ஒக்குமே-சம்பளத்தைக் உ௮௪

கூட்டிச் சுமத்திவைப்பான் கோயிற் கணக்கன்ஒரு
வேட்டுப்போட் டுப்போத விட்டிலமை!
ஆட்டுவிக்கக் உ௮௫

கால்பிடித்த நட்டுவனர் கையைப் பிடித்தழைத்தால்
வேல்படைத்த கண்மயிலே! மேவிவிடு!—சாலநெடு

நேரஞ்செல் லாமல் நெடுகுடசக் காரனைமுன்
நேரம் அழைத்தனுப்பு நேசமாய்—சாரமுள்ள

நாடகத்துப் பாங்கு நமக்கு நடத்துவிக்கும்
பாடகனை யுந்தனது பண்ணிக்கொள்!—கூடுதித்திக்

காரனையும் கைத்தாளக் காரனையும் எக்காளக்
காரனையும் கூடிஇதம் காட்டாதே!—தூறு உ௮௯

---

உ௮௪. வெம்பளிக்கை: அலட்சியம். பண்டாரி: பொக்கிஷதார்.

உ௮௫. வேட்டுப் போட்டு: குண்டு போட்டு. போத: வரும்படி. ஆட்டுவிக்க: நாட்டியம் பயிற்ற.

உ௮௬. கால் பிடித்த: காலைக் கையால் பிடித்த. மேவி விடு: அணைந்து விடுக. சாலநெடு: மிக நீண்ட.

உ௮௭. குடசம்: மலை மல்லிகைப்பூ. முன்நேரம்: அந்திப்பொழுது. சாரம்: ரசம்.

உ௮௮. பாடகன்: பாட்டுக்காரன். தனது பண்ணிக் கொள்: சொந்தமாக ஆக்கிக்கொள். தித்தி: துருத்தி என்னும் இசைக்கருவி.

உ௮௯. எக்காளம்: ஊதும் கருவி. தூறு: விரிந்த.

தலையராய்க் கைத்தாழைத் தம்பியராய்ப் பீறல்
கலையராய் உன்அழகைக் கண்டு-விலைகொடுத்தால் உ௯௰

வாங்குவாய் ! சற்றே மருவுவான் ! பேய்ப்படுவான்
தூங்குவான் ! போவான் ! சுகமறியான் !—பூங்குயிலே !

மஞ்சத்தில் நீயும்ஒரு மாப்பிள்ளையு மாயிருந்து
மிஞ்சுசர சத்திலொரு வேற்றுன்வந்து—அஞ்சாறு

தந்தால் அவனைச் சமையல்வீட் டில்பதுக்கிச்
செந்தேனே ! மெல்லச் செறுமுவேன்—வந்தணைந்து

கொல்லைக்குப் போன குணம்போற்கை காலலம்பி
மெல்லப்போ நம்மைஎவர் வெல்லுவார்—நல்ல

உடந்தையா கத்திரிந்த உத்தியோ கஸ்தர்க்கு
இடைஞ்சல்வந்தால் உன்னையும்வந் தேய்ப்பார்—
மடந்தையே ! உ௯௫

---

உ௯௰. கைத்தாழைத் தம்பியராய்: கையிலே கண்ட செடிகளைத் தூக்கித்திரிபவராய். பீறல்: கிழிசல். கலை: வேட்டி. விலை: போகத்திற்குக் கிரையம்.

உ௯௧. சற்றே மருவுவான்: கொஞ்சம் தழுவுவான். பேய்ப்படுவான்: பேய்பிடித்தவன்.

உ௯௨. அஞ்சாறு: அஞ்சு ஆறு ரூபாய்:

உ௯௩. செறுமுவேன்: செறுமிச் சத்தம் கொடுப்பேன். வந்து அணைந்து: அந்தச் சரச சல்லாபத்தை விட்டுச் சமையற்கட்டுக்கு வந்து அங்கு பதுங்கியிருப்பவனை அணைந்து.

உ௯௪. கொல்லைக்குப்போன குணம்போல்: கொல்லைப்பக்கம் போய்வந்த மாதிரியாக:

உ௯௫. உத்தியோகஸ்தர்: அதிகாரிகள்.

காணிக்கை யானேன்உன் கண்டிகையைத்தா
தண்டையைத்தா
மாணிக்க மாலையைத்தா வைத்துநான்—
காணிக்கை ௨௯௯

தீர்ந்தமறு மாதம் திருப்பித் தருவனென்பார்
ஏந்திழையே! நீசற் றிணங்காதே!—காந்தாரி

தாய்க்கிழவி சம்மதித்தால் சம்மதமென் பாய்எனது
வாய்க்குப் பயந்தவர்பின் வாய்பேசார்—நோக்கமாய்

என்னைக் கலந்தவர்கள் என்றாலும் கைந்நிறையப்
பொன்னைக் கொடுத்தாற் புணர்ந்துவிடு!—மின்னே!

பறவைமிரு கங்கள்முறை பார்க்குமோ வேசி
முறைபார்க்க வேபிழைப்பு மோசம்—சிறுபோதே ௩௦௦

தேடியல்லோ வன்பிற் சிலம்பியென்றும் மன்னவரைக்
கூடு திருவாரூர்க் கொண்டியென்றும்—ஆடவரைத்

தெட்டும் பெருங்குண்டைத் திம்மியென்றும்
கொண்டையிற்பூ
மட்டுண்ட ஒற்றியூர் வல்லியென்றும்-சிட்டர்தொழும் ௩௦௨

---

௨௯௯. காணிக்கையானேன்: செலுத்த வேண்டிய பொருட்கடனாளியாகிவிட்டேன். வைத்து: அடகுவைத்து.

௨௯௭. காந்தாரி: பொல்லாதவள்.

௩௦௦. சிறுபோது: காலாகாலம்.

௩௦௧. வன்பு: வலிமை. கொண்டி, ஒரு வேசியின் பெயர்.

௩௦௨. தெட்டுதல்: வஞ்சித்தல். குண்டைத் திம்மி: குண்டையூர்த் திம்மி என்னும் பெயரினள். மட்டு: தேன். சிட்டர்: மேலோர்.

பூவணமாம் பொன்னகரிப் பொன்னனையாள்
என்றும்உடற்
பூவணமாம் தென்உறையூர்ப் பொன்னிஎன்றும்—
தேவர்தொழும் ௩௦௩

சொக்கேசர் கோவில் துணைக்கொடியென் றும்புவிக்குள்
மிக்கான பேர்படைத்தார் மெல்லியலே !—அக்காலம்
வண்ணமாற் றுப்பசும்பொன் வாங்க ஒருத்திசெய்த
கிண்ணமாற் றுக்கதையைக் கேட்டிலையோ !—
பெண்ணணங்கே ! ௩௦௫

என்றிப் படித்தாய் இயம்பினுள் புத்திஅதை
அன்றிப் படித்தாள் அநேகபுத்தி—அன்றுமுதல்

**மதனபிஷேகத்தின் திருவிளையாடல்**

காதல்மதம் மீறிவரும் காமுகராம் யானைகளைக்
கோதும்உகிர் அங்குசத்தால் குத்திஇதம்-ஓதிஅந்த ௩௦௭

---

௩௦௩. பூவணம்: திருப்புவனம். பொன்நகரி: அழகிய நகரம். பொன்னனையாள், திருவிளையாடற் புராணத்தில் வரும் ஓர் தாசி. உடல் பூ வணமாம்: பூப்போன்ற உடல் பெற்றவள்.

௩௦௪. மிக்கானபேர்: மேலான பெயர்.

௩௦௫. மாற்றுப் பசும் பொன்: மாற்றுயர்ந்த பசுமை மிக்க தங்கம். வாங்க: பெற. ஒருத்தி: மேல்குறித்த பொன்னனையாள். கிண்ணம்: பித்தளைக்கிண்ணம் முதலியன. கதை: திருப்புவனத்தில் பொன்னனையாள் என்னும் தாசிக்காகக் கடவுள் ரசவாதம் செய்து பித்தளை யைப் பொன் ஆக்கிய திருவிளையாடற் கதை.

௩௦௬. அதை அன்றி: அதைத்தவிர.

௩௦௭. மீறி: பொங்கி. கோதும்: தடவுகின்ற. உகிர் அங்குசம்: நகமாகிய யானை நிரடும் குறடு.

மாரன் அரண்மனைக்குள் வைத்தணைத்துச் சேர்ந்துரச
சாரக் கரும்பு தனையூட்டி—மூரல்வாய்த் ௩0௮

தம்பற் கவளம் தனைக்கொடுத்துக் கும்பமுலைக்
கம்பத் துடன்பிடித்துக் கட்டினாள்—அம்பரத்தீ

மூட்டுவிக்கும் யோக முனிவோ ரையும்பொம்மல்
ஆட்டுவிக்கும் தோலுருப்போல் ஆக்கினாள்—
திட்டியவேல் ௩௧0

வண்ணக் குடைஅரசர் மாநிதியாம் முந்நீரை
உண்ணக் குறுமுனியை ஒப்பானாள்—பெண்ணுக்குத்

### தோழிகள் திறமை

தோழிமார் கைமருந்துச் சொக்கிஎன்றும் சாராயத்
தாழிஎன்றும் தூது சவுந்திஎன்றும்—எழுமதில் ௩௧௨

௩0௮: மாரன் அரண்மனை: மன்மத மண்டபம். ரச சாரக் கரும்பு: செங்கனிவாய் இதழ் அமுது. மூரல்: பல்.

௩0௯. தம்பற் கவளம்: வெற்றிலை உருண்டை. கும்பம்: குடம். கம்பம்: தூண்.

௩0௯, ௩௧0. அம்பரத் தீ மூட்டுவிக்கும் யோக முனிவோர்: ஆகாயம் அளாவத் தீமூட்டி வேள்விசெய்ய வல்ல தவயோகிகள். பொம்மல் ஆட்டுவிக்கும் தோல் உரு: பொம்மலாட்டம் காட்டும் தோல் வடிவப்பாவை. யோகிகளைக்கூட உயிரற்ற பொருளாக ஆக்கிவிட்டாள்.

௩௧௧. மாநிதி: பெருஞ் செல்வம். முந்நீர்: கடல். உண்ண: பருக. குறுமுனி: அகத்தியன். அகத்தியன், கடலைக் குடித்தான். மதனாபிஷேகம்,மன்னர்களின் பெருஞ் செல்வமாகிய கடலைக் குடிப்பதற்குத் தயாராகி அதனால் அத் தமிழ் முனிவனுக்கு ஒப்பாகிவிட்டாள்.

௩௧௨. தாழி: பாத்திரம்.

ஏறிஎன்றும் தஞ்சாவூர் எத்திஎன்றும் மாமாயக்
காரிஎன்றும் குண்டுணிவாய்க் கள்ளிஎன்றும்—
மாருட்டக் ௩௧௩

குள்ளிஎன்றும் மாயக் குருவிஎன்றும் மாரீசக்
கள்ளிஎன்றும் பத்துப்பேர்; காமுகரை—மெள்ளப்

பொருத்துவார் ஊடலாய்ப் போவாரை மோடி
திருத்துவார் தாராரைச் சிம்பித்—துரத்துவார் ௩௧௫
கல்லிலே நார்உரித்துக் காண்பார் நனைந்தஇடம்
கல்லுவார் தாமும்ஒரு கைபார்ப்பார்—மெல்லிநல்லார்

**மதனபிஷேகத்தின் மேல் மையல்கொண்டோர்**

இவ்வாறு செய்ய இருநிதியம் தேடுமந்த
மைவார் விழியாள் மதிநுதற்கும்—செவ்விக் ௩௧௭

---

௩௧௪. மாரீசம்: வஞ்சகம்.

௩௧௨ முதல் ௩௧௪ முடிய: ௧. கைமருந்துச் சொக்கி, ௨. சாராயத் தாழி, ௩. தூது சவுந்தி, ௪. ஏழு மதில் ஏறி, ௫. தஞ்சாவூர் எத்தி, ௬. மா மாயக்காரி, ௭. குண்டுணிவாய்க் கள்ளி, ௮. மாருட்டக் குள்ளி, ௯. மாயக் குருவி, ௧௦. மாரீசக்கள்ளி; இப் பதின்மரும் மதனபிஷேகத்தின் தோழிகள்.

௩௧௫. பொருத்துவார்: கொண்டுவந்து சேர்ப்பார். ஊடல்: சிறுசண்டை. மோடி: பிணக்கு. சிம்பி: கோபித்து.

௩௧௬. கருங்கல்லிலே நார்உரித்துப் பார்த்து விடுவார்; ஈரம் கொஞ்சம் கண்டால் அந்த இடத்தைத் தோண்டி எடுத்துவிடுவார்; மதனபிஷேகத்தின் சிறப்பை வைத்துக்கொண்டு தாங்களும் ஒருகை பார்த்தே விடுவார்.

௩௧௭. இரு நிதியம்: பெரும் பொருள். மை வார் விழி: மை தீட்டிய நீண்ட கண். மதி நுதல்: திங்கள் அனைய நெற்றி. செவ்வி: அழகு.

கொடிஇடைக்கும் நிலவுஎறிக்கும் குறுநகைக்கும்
ஒயில்விளைத்த
பிடிநடைக்கும் வயிரமிட்ட ப்ரமைமிகுத்த-தொடிகளுக்கும்

அலைஉதித்த அமுதெனச்சொல் அருமொழிக்கும்
இருவிழிக்கும்
மலைகளொக்கும் முலைகளுக்கும் மனதுவைத்து—
வலையினுக்குள்

மான்சிக்கி னுற்போல் மருள்வாரும் தூண்டியிலே
மீன்சிக்கி னுற்போல் மெலிவாரும்—ஏன்சிக்கிக் ௨௨௦

கொண்டோம்என்று உள்ளம் கொதிப்பாரும் கூடிஇன்பம்
கண்டோம்என்று உள்ளம் களிப்பாரும்—கண்டுஅனைய

பேச்சுமடந் தைக்குப் பிடிக்கும்மன தாசைஎன்று
பூச்சுமருந் திட்டணையப் போவாரும்—வாய்ச்சுதேன்றே

---

௨௧௮. கொடிஇடை: கொடிபோன்ற இடுப்பு. நிலவு எறிக்கும் குறுநகை. நிலவை வீசுகின்ற புன் சிரிப்பு. ஒயில் விளைத்த பிடிநடை: ஒய்யாரம் நல்கும் பெண் யானையின் நடையை நிகர்த்த நடை. வயிரம் இட்ட ப்ரபை மிகுத்த தொடிகள்: வைரமணிகள் அழுத்திய ஜோதி மிக்க வளைகள்.

௨௧௯. அலை உதித்த அமுதெனச் சொல் அரு மொழி: பாற் கடலில் பிறந்த தேவாமிர்தம் எனச் சொல்லத்தகும் அருமையான பேச்சு. இரு விழி: பெரிய கண்கள். மனது வைத்து: மனசைப்பதித்து.

௨௨௦. மதனபிஷேகத்தால் தாக்குண்டு, வலையில் சிக்கி மயங்கும் மானனர் சிலர்; தூண்டிலில் விழுந்து துடித்து வருந்தும் மீன்போல் ஆனர் வேறு சிலர்.

௨௨௧. கண்டு: கற்கண்டு.

௨௨௨. பூச்சு மருந்து: பூசும் மருந்து.

யார்க்கும் பொடிபோடும் ஆயிழைமுன் வாடைமணம்
சேர்க்கும் பொடிபூசிச் செல்வாரும்-ஊர்க்கிணங்கத் ௩௨௩

தந்தனத்தை ஈந்து சரிந்ததனக் காரிபண்ணும்
தந்தனத்துக் குள்ளாய்த் தளர்வாரும்—தந்திரமாய்

மாதைப் பசப்பளன்று வாசல்மட்டும் வந்துநரைப்
பூதத்தைக்கண்டகலப்போவாரும்-"கோதாய்! உன் ௩௨௫

கால்பிடிக்க வோ?அடைப்பை கட்டவோ? செண்பகப்பூ
மேல்பிடிக்க வோ?விசிறி வீசவோ?—கோலமலர்

கட்டவோ? கட்டழகி! கண்ணுறங்கப் பொற்குறங்கு
தட்டவோ?" என்றருகில் சார்வாரும்—வெட்டிவேர்

மண்டுகுழ லாள்குளித்த வாடைமஞ்சள் நீரைஅள்ளிக்
கொண்டுதலை மேல்தெளித்துக் கொள்வாரும்—
அண்டர்பிரான் ௩௨௮

---

௩௨௩. பொடி[1]போடுதல்: மயங்க வைத்தல். ஆயிழை: இங்கு மதனாபிஷேகம். வாடை மணம், ஒரு பொருட் சொற்கள். வாடை மணம் சேர்க்கும் பொடி: வாசங்கலந்த தூள்.

௩௨௪. தம் தனம்: தங்கள் பணம். சரிந்த தனம்: சாய்ந்த ஸ்தனம். அத்தனக்காரி, தாய். தந்தனம்: சூழ்ச்சி. உள்ளாய்: உட்பட்டு.

௩௨௫. மாது, மதனாபிஷேகம். நரைப் பூதம், மாணிக்க மாலை. அகல: தூரத்தே.

௩௨௬. அடைப்பை: வெற்றிலைப் பை. செண்பகப் பூ மேல்: செண்பகப் பூ போன்ற பொன்நிறமும் மென்மையும் கொண்ட உடம்பு.

௩௨௭. கட்டழகி: உடையாத எழில். பொற்குறங்கு தட்டல்: பொன் அனைய துடையைத் தட்டுதல். குறங்கு: துடை.

௩௨௮ மண்டு குழல்: நிறைந்த கூந்தல். அண்டர் பிரான்: தேவேந்திரன்.

சன்னிதியில் சந்தடியில் தள்ளுண்டு வீழ்வார்போல்
பின்னுகுழ லாளைப் பிடிப்பாரும்—பின்னொருத்தன் ௩௨௯
வீட்டி லிருக்க வெளியிலே நின்றுசன்னை
காட்டித் திரிந்து கரைவாரும்—வீட்டுஇறப்பை ௩௩௦

அண்டிக் கலவிசெயும் ஆரம்பம் கேட்டுவெட்டித்
துண்டித்தாற் போலத் துடிப்பாரும்—கண்டனையாள்

ஜோதிமுக மஞ்சள் துவண்டதுகிற் போர்வையுடன்
வீதிதொறும் போய்ப்பிலுக்கி மீள்வாரும்—காதளவும்

மைப்பட்ட கண்ணிசப்ர மஞ்சத்தின் மேற்காலைத்
துப்பட்டி கொண்டு துடைப்பாரும்—செப்பமுள்ள

தெப்பத் திருநாளில் தெப்பக் குளத்துமங்கை
தெப்பத்தே ஏறிவரும் சீராட்டில்—அப்பம்

வடைசுசியன் தோசை வகைகள்பணி யாரம்
கடையிலே கொண்டுமடி கட்டி—சடுதியிற்போய் ௩௩௫

---

௩௩௦. சன்னை: சாடை. கரைதல்: உருகுதல். வீட்டு இறப்பு: வீட்டுத் தாழ்வாரம்.

௩௩௧. அண்டி: நெருங்கி.

௩௩௨. மதனபிஷேகத்தின் மஞ்சள்அப்பிய ஆடையுடன் வீதி வீதியாகச் சென்று இது அவள் மஞ்சள் என்று பெருமை பேசுகின்றார் சிலர். பிலுக்குதல்: பெருமையாகக் காட்டுதல்.

௩௩௩. சப்ர மஞ்சம்: கட்டில். காலை, அவள் காலை. செப்பம்: ஒழுங்கு.

௩௩௪. சீராட்டு: சிறப்பு.

௩௩௫. சுசியன்: ஒரு இனிப்பு உணவுப் பண்டம். சடுதி: விரைவாக.

நாரிகையி லேகொடுக்க நாடிவட மோடும்ஆள்
வாரியிலே ஓடி வருவாரும்—பேராம் நஙகூ

வசந்தன் திருநாளில் மண்டபத்தில் மங்கை
இசைந்து நடம்புரியும் ஏல்வை—கசங்காமல்

மல்லிகைப்பூச் செண்டு மருக்கொண்டு சந்தடியை
மெல்ல விலக்கிவரும் வேளையிலே—நல்லபடைக்

கம்பால் அடிபட்டுக் கத்தியினல் நொந்துடம்பு
செம்பால் ஒழுகத் திரிவாரும்—தம்பிரான்

பல்லக்குக் கூடிப் பதினறு நாழிகைமேல்
வல்லொக்கும் கொங்கை வளைவுக்கு-செல்லுகையில் நசo

குக்கல்வாய் காட்டிக் கொடுக்கத் தலையாரி
கைக்கு ளகப்பட்டுக் கட்டுண்டு—கக்குரத்தம்

மூக்கிட் டொழுக முழங்கைஇடி பட்டுநெஞ்சிற்
சிக்கட்டி கொண்டு திரிவாரும்—தூக்குமஞ்சத் நசஉ

---

நஙகூ. நாரி, இங்கு மதனபிஷேகம். நாடி:விரும்பி. வடமோடும் ஆள்வாரி: தெப்பக் கயறு கொண்டு ஆள் ஓடும் வரிசை. பேர் ஆம்: பெயர் பெற்ற.

நஙஎ. வசந்தன்: காமதேவன். ஏல்வை: சமயம்.

நஙஅ. மரு: மணமுள்ள ஓர் இலை வகை. சந்தடி: கூட்டம். மெல்ல: மெதுவாக.

நஙகூ. செம்பால்: இரத்தம். தம்பிரான்: இறைவன்.

நசo. பதினறு நாழிகை மேல்: நடுச் சாமத்திற்கு மேலாக. வல்: சொற்கேட்டான் ஆடும் காய். வளைவு. வீடு. ''கைப்பிடி நாயகன் தூங்கையிலே'' வன்ற பாட்டில் '' அயல் வளைவில்'' எனப் பட்டினத்தடிகள் பகர்கின்றார்.

நசக. குக்கல்: நாய். குக்கல்வாய்: நாயின் குரல். தலையாரி: காவல்தலைவன். கட்டுண்டு: கட்டப்பட்டு. கக்கு ரத்தம்: கக்கிய இரத்தமானது.

நசஉ. தூக்கு மஞ்சம்: ஊஞ்சல்.

தேஒருவன் வீட்டில் இருக்க அது காணாமல்
போய்ஒருவன் வீட்டில் புகுதவே—ஞாயமற்ற ௩௪௩
பூசல் விளைத்துப் பொருமையினா லேவாது
பேசி வெளியிற் புறப்பட்டு—ரோசமுடன்
மாதொருத்திக் காப்பொருத வாலியும்சுக் ரீவனும்போல்
வீதியிலே மற்கட்டி வீழவாரும்—பாதையில்தீ ௩௪௫
வட்டி வெளிச்சம் மினுமினென வந்தியர்முன்
கட்டியங்கள் கூறக் கடுநடையாய்—தொட்டுவரும்
பாதக் குறட்டில் பவளக் குமிழ்இலங்க
மாது மணவறைக்குள் மன்னர்வரும்—போதில்அந்த
வீட்டிற் பரண்ஏறி மேவுந் தொழில்அமளி
கேட்டுப் பதுங்கிக் கிடப்பாரும்—பாட்டிளஞ்சொல்
மாங்குயிலைப் போல மருவக் கனவுகண்டு
தூங்குகையில் இந்திரியஞ் சோர்வாரும்—ஈங்கிவளுக்கு

---

௩௪௩. அது காணாமல்: அதைப் பாராமல். புகுத: நுழைய.

௩௪௪. பூசல்: சண்டை. விளைத்து: உண்டாக்கிக் கொண்டு. வாது பேசி: தர்க்கம் பேசி.

௩௪௫. மாது ஒருத்திக்காக: சுக்ரீபன் மனைவிக்காக. பொருத: போர் புரிந்த. மற்கட்டி: மல்லுக்கட்டி.

௩௪௬. வந்தியர்: துதி பாடுவோர். கடுநடையாய்: விரைவாக. தொட்டு வரும்: அணிந்து வருகின்ற.

௩௪௭. பாதக்குறடு: கால் கட்டை. பவளக் குமிழ் இலங்க: அக் கட்டையில் பவளத்தால் வைத்துப் பதிக்கப்பட்ட குமிழ் விளங்க. மணவறை: வாசனை வீசும் சயன அறை.

௩௪௮. பரண்: மச்சு. மேவுந் தொழில்: சேர்க்கை. அமளி: ஆரவாரம்.

ஈயவகை காணும் இரதம்பொன் னாக்குவது
பாயம்என்று மித்ரம் பலகூட்டித்—தீயில் ௱௫௰

குகையிலே வைத்துக் குனிந்தூதி வாதப்
புகையிலடி பட்டுப் புகைந்து—திகைதெரியா

மாலைக்கண் ணாகி மதிமயங்கித் தங்கள்தங்கள்
காலைக்கண் ணாக்கிவழி காண்பாரும்—வாலிபத்தில்

பூணார் முலையாட்காப் பொன்திருடிக் கைஇரண்டும்
சாணாகக் கண்டு தளர்வாரும்—வாணுதற்காத்

தாங்கன்னம் இட்டுத் தலையைக் கடைக்காசு
வாங்கென்ன விட்டுடலை மாய்ப்பாரும்—தூங்கிவிழும்

வண்ணான் நரைமயிரும் மாதவிடாய்த் தம்பலமும்
பெண்ணாய்த் தலையோடும் பிள்ளைஒன்றும்—
சுண்ணம்புப் ௱௫௫

பானைபோ லேநரைத்த பாவிபடுக் கைத்தலத்தில்
பூனைபோற் றோண்டிப் புதைப்பாரும்—மானனையாள்

இட்ட மருந்தால் இருமல்பிடித் தோயாமல்
குட்டியிட்ட நாய்போற் குரைப்பாரும்—ஒட்டியபுண்

என்பவர்க்கு நாணி இரசம்தின் றின்கரும்பு
தின்பவர்க்கு நாணித் திரிவாரும்—பொன்சரிகைச் ௱௫௮

---

௱௫௰. இரதம் பொன்னாக்குவது: ரசவாதத்தினால் பிறவற்றைத் தங்கம் ஆக்குவது. உபாயம்: தந்திரம்.

௱௫௧. வாதம்: காற்று. திகை: திக்கு.

௱௫௨. மாலைக் கண்: பார்வை மங்கிய கண். காலைக் கண்ணாக்குதல்: காலினால் தடவித் தடவி வழி கண்டு பிடித்தல்.

௱௫௩. பூண்: நகை. வாள் நுதல்: ஒளியுள்ளநெற்றி.

௱௫௬. பாவி, இடையூறாக இருக்கும் தாய்க் கிழவி.

சேலை கொடுத்ததற்குச் சீமாட்டி என்கொடுத்தாள்
சூலைகொடுத் தாளென்று சொல்வாரும்-மூலஅரை ௩௫௯
ஆப்புக்குச் சத்திரமிட் டாவிகாக் கக்காக்காய்த்
தோப்பிற் கிடந்து துடிப்பாரும்—மாப்பிளைமார் ௩௬௦
வைத்த நகக்குறியை மங்கைஇரு கொங்கையிற்கண்டு
எய்த்து நெடுமூச் செறிவாரும்—முத்துமுத்தாய்ப்
பேசினு லும்போதும் பேதைநமைத் தூஷணமாய்
ஏசினு லும்போதும் என்பாரும்— பாசிழையாள்
கொந்தலரும் பூஅணைமேல் கும்பகர்ண லீலைசெய்ய
இந்திரன்போல் பக்கத் திருப்பாரும்—ஐந்துபத்து
மாடுவிற்றோம் நூறு மறிவிற்றோம் ஏழுமந்தை
ஆடுவிற்றோம் வீட்டில் அடிமைவிற்றோம்—தேடரிய
வெண்கலத்தாற் குத்துவிளக்குவிற்றோம் காணிவிற்றோம்
உண்கலத்தை விற்றோம் உடைமைவிற்றோம்—
பெண்செலவுக்கு ௩௬௫
என்னத்தை கேட்கவந்தால் என்னத்தை
நாம்கொடுப்போம்
என்னத்தைச் சொல்லுவோம் என்பாரும்—முன்னம்இந்த

௩௫௯. சூலை: ஒரு புடக்கு நோய்.

௩௬௦. சத்திரம் இடல்: கத்திகொண்டு கிழித்தல்.

௩௬௨. தூஷணம்: இகழ்ச்சி. ஏசுதல்: வைதல். பாசு இழை: பசுமையான ஆபரணம்.

௩௬௩. கொந்து அலரும்: பூங்கொத்து மலர்கின்ற. பூஅணை: அழகிய: படுக்கை. கும்பகர்ண லீலை: நல்ல. தூக்கம்.

௩௬௪. மறி: மான் இனம். மந்தை: கூட்டம்.

௩௬௫. காணி: நிலம். உண் கலம்: சாப்பிடும் வட்டில். பெண்: மனையாள்.

௩௬௬. என் அத்தை: என் மாமி. என்னத்தை: எதை. என்னத்தைச் சொல்லுவோம்: என்ன சொல்வது.

மின்னுசை கொள்ளாமல் வீணுக்குக் கொண்டோம்இச்
சன்னுசம் என்று தளர்வாரும்—என்னசெய்வோம் ௬௬௭

பங்கைவிற்றும் ஈந்தோம் பணம்இனும்தா போவென்ருள்
எங்கே சுமைஎடுப்போம் என்பாரும்—ரங்குலுக்கு

தித்திலோ னுக்காசு செல்லேனு போங்குலுநாம்
இத்தனையும் தொற்றழிந்தோம் என்பாரும்—அத்தையார்

சூளை மகளுநன்னு சொர்ணவெல்லா தக்கொண்டு
நாளை என்ருள் என்றுமனம் நைவாரும்—நாளிலே ௬௭0

பாண்டிநாட் டிச்சி பணம்உறிஞ்சி னுள்நாங்கள்
ஆண்டியானேம்என் றலைவாரும்—ஆண்டியர்தம் ௬௭௧

௬௬௭. துறவு வேடத்தை முன்னரே ஆராயாமல் கொண்டு விட்ட சிலர், இந்த மதனுபிஷேகம் இருக்கும் உலகில் அவளை அணையாமல் சந்யாசம்கொண்டது வீண் என்று கவலைப்படுகிருர்.

௬௬௮. எங்கே சுமை எடுப்போம்: அவளுக்குக் கொடுப்பதற்குப் பணம் பெற எங்கே போய் மூட்டைதூக்குவது. ரங்குல்: வேசை.

௬௬௯. தித்திலோ...........போங்குலு: இவைகள் தெலுங்கு வார்த்தைகள். இவைகள் உடைமைகளின் பெயர்களாக இருத்தல் கூடும் எனத் தோன்றுகிறது.

௬௭0. சூளை மகள்: வேசி மகள். நன்னு சொர்ண வெல்லா தக்கொண்டு: இவைகளும் தெலுங்கு மொழிகளே. நன்னு: என்னுடைய. சொர்ண வெல்லா: பொன்னை யெல்லாம். தக்கொண்டு: தான் கவர்ந்து.

௬௭௧. பாண்டி நாட்டிச்சி: பாண்டி நாட்டுக்காரி.

தொண்டுபோய் வேடம்போய்த் தோகைக்குடையவரைக்
கொண்டுபோய்க் கையிற் கொடுப்பாரும்—கண்டசெட்டு
மோசமாச் சுக்காண் முதலுக்குப் புல்வாண்டைக்
காசுமில்லை என்று கரைவாரும்—வேசை இவட்கு
ஈந்த பொருளைவட்டிக் கீந்தோமா? நாம்இருக்க
வாய்ந்தமச்சு வீடுகட்டி வைத்தோமா?—கூந்தலிளம்
பேடைமயில் போல்வீட்டுப் பெண்டாட்டிக் கேஉடைமை
சொடிணயாப் பூட்டிச் சுகித்தோமா?-ஆடுகொண்டு நஎரு
விட்டோமா? மாடுகொண்டு விட்டோமா?
தெய்வத்துக்கு
இட்டோமா? தேகிஎன்பார்க் கீந்தோமா?—
அட்டதிக்கும்
நாடிப் புகழ்பெரிய நாகமன்போற் பாமாலை
சூடித் தியாகம் சொரிந்தோமா?—தேடுநிதி
தன்னைக் கொடுத்துத் தரித்திரத்தை வாங்கினோம்
என்ன வியாபாரம் என்பாரும்—இன்னவகை
காமுகரெல் லாமயங்கக் காளத்தி யையன்மகன்
ஆம்ஒருவன் இவ்வூரன் ஆதியையன்—சேம நஎகூ

நஎஉ. ஆண்டியர்க் குரிய தொண்டையும் விட்டு வேடத்தையும் கலைத்து தையலார்தம் இடமிருந்து தூது சென்று பிழைக்கப் புகுந்து விட்டார் சிலர்.

நஎந. புல்வாண்டைக் காசு: சிறு நாணய வகை.

நஎச. மச்சு வீடு: மாடி வீடு.

நஎரு. சோடினை: அலங்காரம். சுகித்தல்: அநுபவித்தல்.

நஎஎ. தியாகம்: கொடை.

நஎகூ. காமுகர். காமப் பித்தர். சேமம்: காவல்.

மதுரைக் கொருநாட்போய் மாசித் தெருவில்
விதிவசத்தால்கண்டான் அம்மின்னை—மதிநுதலாள் ௩௮௦
மையலுக்குள் வீழ்ந்தான் வடுச்செய்த மாமரத்தில்
மெய்உரிஞ்சப் போய்க்கவரி வீழ்ந்தாப்போல்—கையில்
இருந்ததெல்லாம் வீட்டில் இருந்ததெல்லாம் ஆஸ்தி
இருந்ததெல்லாம் தோற்றான் இரந்தான்—மருந்தினால்
கள்ளுண்டார் போலக் கலங்கினான் வாசலிலே
தள்ளுண்டான் ,தன்ஒழுக்கம் தப்பினான்—
விள்ளுவதென்?
ஆதியையன் என்னும்பேர் அன்றேபோய் இப்பால்வி
யாதியையன் என்னும்பேர் ஆயினான்—பாதி
உடலாகி ஒட்டியபுண் உள்ளுருக்க யார்க்கும்
தொடலாகாச் சீச்சிரங்கு சூலை—கொடிய ௩௮௫
அரையாப்பு மேகவெட்டை அண்டத்து வாதம்
புரைவாய்ப் பவித்திரம்பு கைச்சல்—இருமல்
இளைப்புப் பொடுகுமருந் திட்டநோய் பித்தம்
களைப்புமாய்ப் பூனைபோற் கத்தி—கிழக்கே
அடுத்த மனையில் அருகுதிண்ணை தன்னிற்
படுத்துக் கிடக்கின்றான் பாரும்—படித்தவரே ! ௩௮௮

௩௮௦. மின்: மதனாபிஷேக மின்னல்.

௩௮௧ மையல்: காம மயக்கம். மெய் உரிஞ்ச: உடம்பை உரச. கவரி: மான்.

௩௮௨. ஆஸ்தி: சொத்து. இரந்தான்: பிச்சை எடுத்தான்.

௩௮௩. தள்ளுண்டான்: தள்ளப்பட்டான். ஒழுக்கம்: நடை. விள்ளுவதென்: என்ன சொல்ல இருக்கிறது.

௩௮௮. அருகு திண்ணை: ஒட்டுத் திண்ணை.

இப்படியாத் தேடியுண்ணும் எந்திழையாள் வாழ்மதுரைக்கு
எப்படிப்போ வீர்வருவ தெப்படிக்காண்?—செப்பும்அவ
தானியைய ரே!என்று தக்கபுத்தி போதிக்க
ஞானியைய ரைப்பார்த்து நான்விரத்தி—ஆனேன் ௩௯௦

**அவதானி மதுரைநகர் அடைதல்**

இருப்புத்தூ ணிற்கறையான் ஏறுமோ? போம்போம்
நெருப்பிற் புழுவிழுமோ? நீர்என்—கருத்தை
அறியீர்என் றேன்நல்லது ஐயரே என்று
பிறியாமல் வந்தார்என் பின்னே—நெறியினிற்போய்
வையகமேல் எய்தியசீர் வைதிகநூல் மெய்ஒலிசேர்
மொய்திரைநீர் வையையில்யான் மூழ்கியே—உய்யப்
படியுமடி யவர்கொடிய படிறுசெயும் இடர்முழுதும்
அடருமெழு கடலினிடை ஆடி—கிடையாப் ௩௯௪

---

௩௯௦. விரத்தியானேன்: உலக ஆசைகளில் வெறுப்புக்கொண்டு விட்டேன்.

௩௯௨. நெறி: வழி.

௩௯௩. வையக மேல் எய்தியசீர் வைதிக நூல், ஞான சம்பந்தர் தேவாரம். மெய் ஒலி: அப்பாடலின் உண்மை இசை. மொய் திரை: நிறைந்த அலை. உய்ய: கடைத்தேற.

௩௯௪. படிதல்: நீராடல். படிறு: வஞ்சகம். எழு கடல்: மதுரை நகரிலுள்ள ஒரு தீர்த்தம். தடாதகைப் பிராட்டியின் தாயாகிய காஞ்சனமாலை கடலாடக் கருதியமை காரணமாகத் தடாதகைக்குக் கணவனாக வாய்த்த சோமசுந்தரக் கடவுள், கடலேழும் ஒருங்கு திரண்டு மதுரைக்கே வருமாறு அழைத்தார் என்பது திருவிளையாடற் கதை.

பரத்துக்கே விருப்புற்றோர் பவத்துக்கோர்
நெருப்பொப்பாம்
அருட்பொற்ரு மரைக்குட்போய் ஆடி—
உருச்செபிக்கும் ரு௬௫
ஐந்தெழுத்தைச் சிந்தைவைத்திட் டன்பருக்குச்
சஞ்சலத்தைச்
சிந்துசித்திக் குஞ்சரத்தைத் தெண்டனிட்டு—
கந்தபுஷபக்
கற்பகமெ னப்பொலிக டப்பநிழ லிற்குலவும்
அற்புதக யற்கண்உமை யைத்தொழுது—சிற்பரத்தில்
நேசர்மன வாசர்பவ நாசர்கயி லாசர்சக
தீசர்மது ரேசர்அடி யான்போற்றி—நேசமுடன் ரு௬௮

ரு௬௫. பரம்: பரலோக வாழ்வு. பவம்: பிறவி. பொற்றுமரை: மதுரைக் கோவிலுக்குள் உள்ள தீர்த்தக் குளம். உரு: மந்திரம்.

ரு௬௬. ஐந்து எழுத்து: சிவாயநம, அல்லது நம சிவாய என்னும் பஞ்ச அட்சரம். சஞ்சலம்: கவலை. சிந்து: போக்குகின்ற. சித்திக் குஞ்சரம்: சித்தி விநாய கன். தெண்டன் இட்டு: கும்பிட்டு. கந்த புஷ்பம்: மண முள்ள மலர்.

ரு௬௭ கற்பகம் எனப் பொலி கடப்ப நிழலிற் குல வும்: கற்பக மரம்போல விளங்கா நிற்கும் கடம்ப மர நிழ லிலே வீற்றிருக்கின்ற. மதுரைத் தலவிருட்சம் கடம்பு. கயற் கண் உமை: அங்கையற்கண் அம்மை—மீனுட்சி. சிற்பரம்: பேர் அறிவு. அதாவது மெஞ்ஞானம்.

ரு௬௮. மனவாசர்: உள்ளக் கமலத்தில் உறைபவர். பவநாசர்: பாவங்களை அழிப்பவர். கைலாசர்: கைலாயத் திலே இருப்பவர். சக தீசர்: உலகத் தலைவர். மதுரேசர்: மதுரைச் சொக்கர்.

துங்கப்ர காரத்தைச் சுற்றி வடகுடபால்
சங்கப் புலவர் தமைஏத்தி—எங்குமுள்ள ௩௯௯

தியமா பாதகமும் திரத்தீர்த் தம்பருகி
நாயகர்பொற் கோபுரத்தை நான்நீங்கி—ஆயிரக்கால் ௪௦௦

**மதனுபிஷேகத்தைக் கண்டு மருளல்**

மண்டபத்திற் கண்டேன் மதனுபி ஷேகத்தை
விண்டலத்தை விட்டுவந்த மேனகையை—கொண்டைச்

சொருக்கழகும் முத்துத் துராயழகும் செவ்வாய்
முருக்கழகும் சேலே முகப்பில்—கருக்கழகும்

வேலழகு போன்ற விழியழகும் தண்டைஇட்ட
கால்அழகும் பொற்கடகக் கைஅழகும்—ஓலேஇட்ட

காதழகும் வச்ரமணிக் கச்சிறுக்கும் மார்பழகும்
சோதி முகத்தழகும் துங்கரத்ந—மாதுரதி ௪௦௪

---

௩௯௯. துங்கம்: உயர்வு. வட குடபால்: வடமேற்குப் பக்கத்திலே யுள்ள. சங்கப் புலவர்: சங்கத்தார் நாற்பத்து ஒன்பதின்மர்.

௪௦௦. மாபாதகம்: கொடும்பழி. தீர்த்தம் பருகி: மாபாதகத் தீர்த்தம் குடித்து. நாயகர்: சோக்கேசர். ஆயிரக்கால்: ஆயிரங்கால்கள் கொண்ட:

௪௦௧. விண் தலம்: வான் உலகம். மேனகை: விண்ணுலக நங்கையருள் ஒருத்தி.

௪௦௨. முத்துத் துராய்: முத்துப்பதித்த, தலேயில் முன் அணியும் நகை. முருக்கு: முருக்கம்பூ, கருக்கு:கரை.

௪௦௪. வச்ரம்: வைரம். கச்சு: ரவிக்கை. வச்ரமணிக் கச்சு இறுக்கும் மார்பு: வைரமாலே அணிந்த கச்சை இறுக்கும் கொங்கை. துங்க ரத்னம்: மாசற்றமணி. மாதுரதி: ரதிதேவி போன்றவள்.

கட்டழகும் பொட்டழகும் கச்சைகட்டி வந்தகட்டு
மட்டழகும் கண்டு மயங்கினேன்—கிட்டவந்த ௪0௫

நாட்டத்தைக் கண்டு நடந்துசிலைக் காமனும்பூந்
தோட்டத்தைக் கொள்ளைகொண்டு தோன்றினன்—
வாட்டுமதன்

கையம்பு பாயவஞ்சிக் கண்ணம்பு பாயநின்று
தொய்யும்மான் போலத் துவக்குண்டேன்—தெய்வசுதி

கானும் இசைராகம் கைத்தாளம் மத்தளம்கை
வீணைபல கைத்தித்தி வேணுசுரம்—கோணமல்

கூடும் சுருதியுடன் கொம்பனையாள் சங்கீதம்
பாடும் சுருதிஇன்பம் பாலிக்க—ஆடவரை

எய்யுமத வேள்கைக்கு இசையுமலர் ஈவாள்போல்
தையலாள் புஷ்பாஞ் சலிசெய்தாள்-செய்துபிள்ளை ௪௧0

---

௪0௫. கச்சை: நடனமாடக் கட்டுவது. கட்டு மட்டு: கட்டுக்கோப்பு.

௪0௬. சிலைக் காமன்: வில்வேள். பூந்தோட்டத்தைக் கொள்ளை கொண்டு தோன்றினன்: மலர்ச் சோலையை அப்படியே கொள்ளை யடித்துக்கொண்டு வந்துவிட்டான். ஏன்? கூட்டத்தில் உள்ள எல்லோர் மீதும் அம்மலர்களை அம்பாக விடுவதற்குத்தான்.

௪0௭. மதன் கைக்கணை ஒருபால் பாய, அவள் கண் அம்பு ஒருபுறம் குத்த எய்த்து இளைத்தமான்போலச் சோர்ந்துவிட்டேன்.

௪0௮. கைத்தித்தி: கைத்துருத்தி வாத்தியம் வேணு: புல்லாங்குழல்.

௪0௯. கொம்பனையாள்: மலர்கொம்பை ஒத்தவள் பாடும் சுருதி இன்பம் பாலிக்க: பாட்டோசை இன்பம் தர.

௪௧0. இசையுமலர்: பொருத்தமான பூக்கள். புஷ்பாஞ்சலி: பூத்தூவி வணங்கல்.

யார்கவுத்து வங்கொண்டான் ஆட விளையநயி
ஞர்கவுத்து வங்கொண்டு நண்ணினேன்—சேரும் ௪௧௧
நிலைக்கிடைகொண் டாள்மருட்டும் நீலமலர்ச் செங்கண்
வலைக்கிடைகொண் டாள்என் மனத்தை—கலைப்பாத
முந்தோர் எடுப்பெடுத்தாள் மூரிவில்லைப் பூட்டிஎன்மேல்
வந்தோர் எடுப்பெடுத்தான் மன்மதவேள்—நந்திசொன்ன
சொற்கட்டி லாரி தொடுத்தாள்முன் நின்றவரை
மற்கட்டு வாள்போல் மறையநின்றேன்—பொற்கடகக்
கைச்சலாங் கொண்டாள் கனம்பேச லாம்இதற்கே
மெச்சலாம் என்றுரைத்தார் விஞ்சையோர்-மெச்சும் ௪௧௫
தருக்கொண்டாள் மற்றோர் சதிகொண்டாள் கண்டே
மருட்கொண் டிருக்கஎனை வைத்தாள்—விரித்தசுருள்
பாதிநடித் தாள்கீதம் பாடினாள் பூப்போட்டு
வாதில்நடித் தாரும் மயங்கினார்—சூதுமுலை
மாதுபிர பந்தம் வகுத்தாள் இதற்குரைப்பது
ஏதுபிர பந்தம்என எண்ணினேன்—நாதப்
பதசாரி சாரிகொள்ளப் பார்வேந்தர் ஈந்தார்
முதுசாளி கைப்பொன் முடிப்பை—எதிராக
நின்றவின யங்கள்செய்தாள் நிட்டூரி என்மனது
கன்றவினயங்கள்செய்தாள் கண்ணாலே-மன்றிலொரு ௪௨௦
கோப்பெடுத்தாள் வேந்தர்பொன்னைக்கொள்ளைகொள்ளக் கள்ளி இந்தக்
கோப்பெடுத்தாள் என்றார்என் கூடவந்தோர்—காப்பான

---

௪௧௩. மூரி: வலிமை.

௪௧௫. விஞ்சையோர்: விற்பன்னர்கள்.

௪௧௬. மருள் கொண்டிருக்க: மயக்கம் பெற்றிருக்க.

௪௧௭. வாதில் நடித்தார்: தர்க்க நடிகர்கள். சூது: வல்.

௪௧௯. சாளிகை: பணப்பை.

தாரணிகொண் டாள்வோர் தடமகுடம் தம்பிக்கப்
பேரணிகொண் டாள்ஆசைப் பேய்கொண்டேன்—
ஆரணங்கு

சக்கணிநின் ருடச் சபையிலே ஓடிஅந்த
மைக்கணியை முத்தாட வாஞ்சித்தேன்—இக்கணையாள்

செய்லாகு வித்தையினுல் செம்பொனுடல்ஓமெனஎன்
கய்லாகில் ஏந்தக் கருத்தானேன்—மய்வாளும்

கய்வாளும் என்னைவெட்டக் கள்ளிஒரு கூத்துவிதம்
செய்தாள்அம் மான்வலையிற் சிக்கினேன்—
தொய்யாமல் ௪உ௫

தேசிகத்தில் ஓர்நடனம் செய்தாள் கடையிலுள்ள
கோசிகப்பொன் ஆடையெல்லாம் கொள்ளைகொண்டாள்-
பேசும்

நயமங் கலப்பெண் நடம்பல செய்தாள்
செயமங் களம்பாடித் தீர்த்தாள்—மயல்கொண்ட ௪உ௭

---

௪உ௨. தாரணி: உலகம். தட மகுடம்: பெருமுடி. தம்பிக்க: அசைவற்று மெய்ம்மறந்திருக்க.

௪உ௩. மைக்கணியை: மைதீட்டிய கண்ணை. முத்தாட: முத்தம் இட. வாஞ்சித்தேன்: விரும்பினேன். இக்கு அணையாள்: கரும்பு போன்றவள்.

௪உ௪. செம்பொன் உடல்: அவள் செவ்விய பொன் மேனியை. ஓம் என: ஆகா என்று இரைந்துகொண்டு. கைலாகில்: கைத் தாங்கலில். மய்வாள்: மை அணிந்த கண் ஆகிய வாள்.

௪உ௫. கய்வாள்: அவள் கையில் ஏந்தி ஆடியவாள். தொய்யாமல்: தளராமல்.

௪உ௬. தேசிகம்: நடனவகைகளுள் ஒன்று. கோசிகம்: பட்டு. கோசிகப் பொன் ஆடை: பட்டினல் நெய்த தங்கச் சரிகையாடை.

௪உ௭. தீர்த்தாள்: முடித்தாள். மயல்: மயக்கம்.

பேதையேன் தன்மனதும் பெண்களும்பின் னேதொடர ௪௨௮
மாது மனைக்கே வழிக்கொண்டாள்—காதில்விசைப்
பந்தடிபோற் துள்ளிப் பரதவித்தேன் பாங்கனை அச்
சந்தடியிற் கையைவிட்டுத் தப்பினேன்—மந்த்ரசெப ௪௨௯
சுற்றம் எனும்தளையும் தோழனெனும் பாகனும்நல்
புத்திஎனும் அங்குசமும் போக்கியே—மத்தமிஞ்சப் ௪௩௦
பெண்ஆனை யைத்தொடரும் பேரானை யேபோலப்
பண்ணார் மொழியாள்பின் பற்றினேன்—வண்ணமலர்க் ௪௩௧
காலில்இட்ட தண்டை கலின்கலின்என் றேலம்இட
மேலில்இட்ட பூஷணப்பொன் மின்எறிப்ப-வாலிபர்கண்டு ௪௩௨
அண்ணாந்த கொங்கைக்கு அறிவைக் கொடுத்திலையிற்
சுண்ணாம்பி டாமல் சுருட்டியுண்ண-கண்இரண்டும் ௪௩௩

---

௪௨௮. பேதையேன் தன்மனது: புத்தி தடுமாறிய என் மனம். பெண்கள்: தோழிப்பெண்கள்.

௪௨௯. பாங்கன்: புத்திசொல்லிக் கூடவந்த ஞானியையன். சந்தடியில்: கூட்டத்திற்குள்ளே.

௪௩௦. சுற்றம் எனும் தளை: உறவு என்ற பிணைப்பு. தோழன் எனும் பாகன்: நன்பன் ஆகிய யானைப்பாகன். புத்தி எனும் அங்குசம்: அறிவு என்னும், யானையை அடக்கும் அங்குசம். "உரன் என்னும் தோட்டியால் ஓர் ஐந்தும் காப்பான்" என்றார் புலவர். 'உரன்' அறிவு. 'தோட்டி' அங்குசம். மத்தம்: மதம்.

௪௩௧. பேரானை: பெரிய யானை. பண்: இசை.

௪௩௨. கலின் கலின்: ஒலிக்குறிப்பு. மின் எறிப்ப: டால் அடிக்க.

௪௩௩. அண்ணாந்த: மேல் நோக்கிய. அறிவைக் கொடுத்து: அறிவைப் பறிகொடுத்து. இலை: வெற்றிலை. மதனாபிஷேகம் நடனம் முடிந்து மீனாட்சி கோவிலில் நின்றும் தன்வீடு செல்கிறாள், வீதிவழியாக. அவளைக் கண்டு மெய்ம்மறந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்த ஒரு சிலர், சுண்ணாம்பு தடவ மறந்து வெறும் வெற்றிலையைச் சுருட்டி அப்படியே விழுங்குகிறார்.

மங்கைமேல் ஆக வருவாரும் போவாரும்
தங்களிலே தங்கள் தலைமோத—துங்கமத சாச

அத்தியின்மேல் செல்லும் அரசர்இவள் கொங்கைகளும
மத்தகமும் நோக்கி மதிமருள—தத்துபரி சாரு

கால்மீறி னற்போற் கலினம் நெகிழவிட்டு
மால்மீறி னார்எதிரே மாறிவிழ—வேல்விழியாள்

சந்தன கும்ப தனங்கள் சுமந்திடை
நைந்தனம் என்று நடுங்கிட—வந்துதன்

பொன்முகப்பு மாளிகையிற் போய்ப்புகுந்தாள்
நின்றேன்நான்
முன்முகப்பு வாயிலிலோர் மூங்கைபோல்—என்முன்ஓரு
செக்கு வருவதுபோல் சிமாட்டி கைம்மருந்துச்
சொக்கிஎன்னும் பாங்கிவந்து தோன்றினாள்—
மைக்குழலாள் சாகூ

---

சாச. வீதியிற் செல்வோர் அவளையே பார்த்துக் கொண்டு ஒருவரோடொருவர் மோதி வீழ்கின்றார்.

சாரு. அத்தி: யானை. மத்தகம்: கொங்கையை நிகர்த்த யானை மஸ்தகம். மதிமருள: புத்தி தடுமாற. தத்து பரி: தாவிச்செல்லும் குதிரை.

சாகூ. கால் மீறுதல்: கால்தவறிவிடுதல். கலினம்: கடிவாளம். நெகிழ: தளர்ந்துவிட. மால்: மயக்கம்.

சாஎ. நைந்தனம்: தேய்ந்து விட்டோம்.

சாஅ. மூங்கை: ஊமை.

சாகூ. சிமாட்டி: மதனுபிஷேகம். பாங்கி: தோழி. மைக் குழலாள்: மேகம் போன்ற கூந்தலுடைய அந்தக் கைமருந்துச் சொக்கி.

**தோழிகள் சூழ்ச்சி**

ஆர்என்றாள் உங்களூர் யாதென்றாள் ஏதுங்கள்
பேர்என்றாள் அண்டியண்டிப் பேசிட்டாள்—
காரிகையே! ௪௪௦

சீரங்கம் எங்கள்பதி சிங்கையர் என்தகப்பன்
சாரங்க பாணியையர் தம்பிநான்—நாரணையர்

சுப்பையரென் மாமனார் சோமாசிப் பட்டர்பெரும்
அப்பையங்கார் தாம்எங்கள் அத்தம்பி—செப்புகவி
அட்டாவ தானிஎன்பேர் ஆயிழை என்மனைவி
மட்டார் குழலி மனவெறுப்பால்—விட்டேகி
நாடிவந்தேன் உங்கள்பதி நம்பர்சொக்க
லிங்கர்முன்னின்று
ஆடிவந்த பெண்ணரசி யார்என்றேன்—ஆடவரே!
மாணிக்க மாலைபெற்ற வச்சிரத்தைக் கும்பகுடக்
காணிக்கு வாய்த்த கனதனத்தை—ஆணிமுத்தை ௪௪௫
விண்இச்சை கொள்ளவந்த மேனகையைப்பெண்ணுக்குப்
பெண்இச்சை கொள்ளவந்த பெண்அமுதை-எண்ணரிய

௪௪௦. அண்டி அண்டி: நெருங்கி நெருங்கி. "ஏது பதி? ஏது பெயர்? யாவர் உறவு?" என்ற கவிச் சக்கிர வர்த்தி வாக்கை இக் கண்ணி ஒக்கும்.

௪௪௧. பதி: ஊர்.

௪௪௩. மட்டு: தேன்.

௪௪௫. காணி: உரிமை. காணிக்கு வாய்த்த கும்ப குடக் கன தனத்தை என அன்வயப் படுத்துக.

௪௪௬. விண்: விண்ணவர். "பெண்ணுக்குப் பெண் இச்சை கொள்ள வந்த பெண் அமுது" என்பது, "கண் பிற பொருளிற் செல்லா கருத்தெனின் அஃதே கண்ட பெண்பிறந்தேனுக் கென்றால் என்படும்பிறருக்கு"என்று சீதையைக் கண்டு சொல்லும் சூர்ப்பணகையின் கூற்றை நினைப்பூட்டுகிறது.

சாத்ரவித கோக்கோக சாரத்தை மேல்விருது
பாத்திரசி ரோமணியைப் பைங்கிளியை—வாய்த்தமட

மானை மரகதத்தை மன்மதகு டோரியைச்செந்
தேனை மதனபி ஷேகத்தை—நானிலத்தோர்

எல்லாம் அறிந்திருக்க யாமறியோம் என்றவிதம்
சொல்லீரென் றுள்மயலைத் தூண்டினாள்-மெல்லிநல்லாய்!

இன்றைக் கெவர்வருவார் ஏந்திழைக்கென் றேன்அந்தக்
குன்றைப் பொருதமுலைக் கொம்பனையாள்—
அன்றதற்குப் சடுo

பட்டணத்துப் பாரபத்யம் பாஸ்கரைய னோ?கோட்டைக்
கட்டளையா னோ?பாயக் கட்டுபல—பட்டடையிற்

சோலையப்ப பிள்ளையோ? சுற்று தடைகட்டு
மாலையப்ப பிள்ளையோ? வாசல்வழிச்—சாலைஅஞ்சற்

காரமணியம் கனக சபாபதியோ?
பாரணிலா யம்மணியம் பங்காரோ?—சீர்அணவு

ஆனை மணியம் அரசபப னோ? தர்ம
தான மணியம் சதாசிவனோ?—மேன்மைதரும்

கோயில் துறைமணியம் கும்பலிங்கப் பிள்ளையோ?
ஆயத் துறைமணியம் ஆண்டியோ?—ஓய்வறுகா சடுரு
மோட்ட மணியம் முருகப்ப னோ?கிரைத்
தோட்ட மணியம்செட்டைச் சொக்கனோ?—மாட்டுவரிக்

காரனோ? பாசிவரிக் காரனோ? பீரங்கிக்
காரனோ? பொற்கொடிமேற் காதலொடும்—ஓர்இரவில்

---

சசள. கோக்கோக சாரம்: கோக்கோக நூலின்ரசம்.

சசகூ. எல்லாம் அறிந்திருக்க: உலகப் பிரசித்தமாக இருக்க.

சடுo. குன்றைப் பொருத: மலையோடு போர் தொடுத்த.

எத்தனையோபேர்இங்கேஎத்தனையோ பொன்கொடுவந்து
எத்தனையோ சொல்வார்கள் எத்துக்கள்—உத்தமிதான்

அங்கவரி லேஒருவர்க் காளுலும் வாய்நேராள்
சிங்கம் சிறுதேரை தின்னுமோ?—உங்களைப்போல்

நற்குணமுள் ளார்தமையே நாடுவாள் வேந்தர்தரும்
உள்ளம் பொருந்தாள்காண்!—சொற்புலமை—
சசுo
பொற்குவைக்கும் வீறுடைய ராகியநல் வேதியரே!
என்றுசில
கூறிஅதன் பின்னே அக் கோதைஅங்கே—தூறுதலைத்
தூது சவுந்திக்குச் சொன்னுள் பயிலாக
ஏதுக் கழைத்தீர் எனவந்தாள்—மாதுக்கின்று

ஆர்வருவார் சொல்என்றேன் ஆருமில்லைப்
பொன்கொடுத்து
நீர்வருவீர் ஆகில்இங்கே நிற்பானேன்?—வாருமென்ருள்
முத்தனைய முத்துநகை மோகவல்லிக் குப்பணயம்
எத்தனைபொன் சொல்என் றியம்பினேன்—அத்தைக்கு

முன்நூறு பொன்மகட்கு முந்நூறு பொன்எனக்குப்
பின்நூறு பொன்தோழிப் பெண்களுக்கு—
சொன்னது சசுரு
ஒருநூறு பொன்னும் ஒருமுடிப்பாய்த் தந்து
வருவீரேல் வாருமென்ருள் மங்கை—துரைமதுரை சசுசு

---

சருகூ. வாய்நேராள்: உடன்பட மாட்டாள்.

சசுo. பொற் குவை: தங்கக் குப்பை.

சசுக. வீறு: சிறப்பு. வேதியரே; மறை பயின்ற வரே. தூறுதலை: பரட்டைத்தலை.

சசுச. பணயம்: பணம்.

சசுரு. முன் நூறு பொன்: முதலிலே நூறுபொன். மகட்கு முந்நூறு: மதனபிஷேகத்துக்கு மூன்று நூறு.

சசுசு. மங்கை: தூது சவுந்தி என்னும் தோழி.

வெள்ளைப் புதுவெட்டு மின்னலாய் அப்படியே
அள்ளிக் கொடுத்தங் கனுப்பினேன்—உள்ளிருந்து சகூஎ

### பணிப்பெண்கள் வழிபாடு

பைந்தார் அணிகூந்தல் பைங்கனிவாய்ப் பெண்கள்சிலர்
வந்தார் தொழுதார் வரச்சொன்னார்—சந்தனத்தி
கைவிளக்குக் கொண்டுவந்தாள் கால்விளக்க நல்லதண்ணீர்
தெய்விகொண்டு வந்தாள்பொற் செம்பிலே— மைவிழியாள்
அங்கி பிடித்தாள் அடைப்பை வரிசைசின்னத்
தங்கி பிடித்தாள் தனிப்படிக்கம்—செங்கலவை சஎ௦
பூசினாள் பூச்சிவந்து பூமுடித்தாள் பூவிமெல்ல
வீசினாள் பொன்கவரி வெண்கவரி—ராசி
கயிலாகு தந்தாள் என் கால்நோகும் என்று
வெயிலாள்பா வாடை விரித்தாள்—ஒயிலாகப்

### மனைக்குட் சேறல்

பம்புபெரு போனாட் பகட்டறியாப் பாய்புலிபோல்
அம்பொன் நெடுமனைக்குள் யான்சென்றேன்— செம்பவளப் சஎந

---

சகூஎ. வெள்ளைப் புதுவெட்டு மின்னல்; கண்ணைப் பறிக்கும் வெண்மையான புது நாணயங்கள்.

சகூஅ. தார்: மாலை.

சகூகூ. கால் விளக்க: கால் கழுவ.

சஎ௦. அடைப்பை: வெற்றிலைப் பை. கலவை: சந்தனம்.

சஎஉ கைலாகு தரல்: கை கொடுத்தல். பாவாடை விரித்தல்: நடப்பதற்குத் துயில் பரப்புதல்.

சகூஅ முதல் சஎஉ வரை. சந்தனத்தி, தெய்வி, அங்கி, சின்னத் தங்கி, பூச்சி, பூவி, பொன் கவரி, ராசி, வெயிலாள் ஆகிய பெயர்கள் பூண்ட பணிப் பெண்கள்.

போதிகைக்கால் ஏந்துசிங்கப் பொங்கல்தங் கச்சவுக்கை
மீதுரத்னக் கம்பளவி சாலத்தில்—மோதுகரிக் ௪௯௪
கோட்டாரக் கொங்கையார் கொண்டுவந்து திண்டருகு
போட்டார் துரைப்பாங்கு போலிருந்தேன்—
வாள்தடங்கண் ௪௯௫

மதனுபிஷேகத்தின் வரவேற்பு

வட்டமிட்ட கொங்கை மதனுபி ஷேகமும்நான்
கட்டிவிட்ட பொன்முடிப்பைக் கைக்கொண்டே—இட்ட
தருக்குடையேன் தன்னைவந்து சந்திக்க ரண்டு
பருக்குமள வு மிச்சம் பழங்கள்—மருக்கொழுந்துச்
செண்டுகொண்டு தன்னிடத்திற் சென்றிருந்த
என்மாதும்
கொண்டுகொண்டு வந்துநின்று கும்பிட்டாள்—
ஒண்டொடியாள்
காதலரைச் சேர்ந்தறியாக் கன்னிபோல் சூதறியாப்
பேதைபோற் கூசிமெள்ளப் பேசினள்-"மாதவரே! ௪௯௬

௪௯௩, ௪௯௪. பம்பு: நெருங்கிய. பெரு: பெரிய. போன்: மலைக்குகை. பகட்டு: வஞ்சனை. பாய் புலி: பாயும் புலி. செம்பவளப் போதிகை: சிவந்த பவளத்தால் ஆக்கப்பட்ட போதிகை. போதிகை என்பது தூணின் தலையிலே பொருத்தப்படும் ஒரு கட்டை. பொங்கல்: பொலிவு மிகுந்த. சவுக்கை: சவுக்கமாகக் கட்டப்பட்ட ஓர் கூடம். மோது கரி: போர் யானை.

௪௯௫. கோட்டாரக் கொங்கையார்: தந்தம் போன்ற மாலை அணிந்த ஸ்தனத்தையுடையார். அருகு: பக்கத்தில். துரைப் பாங்கு போல்: துரை மாதிரியாக, ஆடம்பரமாக.

௪௯௬. கட்டிவிட்ட: கட்டி அனுப்பிய.

மண்டபத்தில் ஆடினேன் வந்துநின்றீர் உம்மைநான்
கண்டுமய லாகிஎன்பக் கத்துளவோர்—

ஒண்டொடியை ௪௮௦

மெள்ளப்போய்க் கூட்டிவா வீட்டிலென்றேன் மாரீசக்
கள்ளி குழப்பிக் கழப்பிவிட்டாள்—தெள்ளுதமிழ்ப்

பாட்டிலே வல்லீர்!என் பங்கிற் குலதெய்வம்
வீட்டிலுமைக் கூட்டிவந்து விட்டதே—வீட்டில்வரத்

தாங்கலேன் வாசல் தலைக்கடையில் நிற்பானேன்?
பாங்கியேன்? வந்தாற் பணயம்ஏன்?—நீங்கள்நல்ல

பூவைக்கண் டேமுடித்துப் போவோம்என் றெண்ணினீர்!
மேவிச்சென் றால்நான் விடமாட்டேன்!—தேவரீர்!

சித்தமெங்கள் பாக்ய"மென்று செப்பினாள் சாலவித்தை
அத்தனையும் மெய்என்றே யான் இருந்தேன்—

கைத்தலத்தால் ௪௮௫

மின் இருக்கும் நுண்இடையாள் மென்கமலக் கைபிடித்து
முன்இருத்திக் கொண்டு முகம்பார்த்தேன்—

கின்னரத்தைக்

கூட்டினாள் ஏந்துமுலைக் கோட்டினாள் தந்திரியை
மீட்டினாள் சங்கீத வெல்லச்சாறு—ஊட்டினாள் ௪௮௭

---

௪௮௦. மயலாகி: மயங்கி.

௪௮௧. வீட்டில்: வீட்டிற்கு.

௪௮௨. தாங்கல்: தடை. பணயம் ஏன்? பணம் இதெல்லாம் ஏதுக்கு.

௪௮௪. மேவிச் சென்றால்: அணைந்து விட்டுப்போவதானால்.

௪௮௫. கைத்தலத்தால்: என் கையினால்.

௪௮௬. மென் கமலக் கை பிடித்து: மெல்லிய பூப் போலும் அவள் கையைப் பிடித்து. கின்னரம்: யாழ்.

௪௮௭. தந்திரி: யாழின் நரம்பு. மீட்டினாள்: தடவினாள். வெல்லச்சாறு: வெல்லத்தில் பிழிந்தெடுத்த ரசம்:

சொக்கேசர் மேற்கவியும் சொக்கேசர் தம்பாதி
மிக்கான அங்கயற்கண் மேற்கவியும்—தக்கபுகழ்ப் ௪௮௮

பாண்டித் துரைமீதிற் பாட்டும் படித்ததற்பின்
ஆண்ட நிலைக்கோட்டை யாதிபன்மேல்—தூண்டுபுகழ்ச்

சிங்காச னாதிபதி சிந்தமகூ ளேந்த்ரனருள்
எங்கோன் பெரியநா கேந்திரன்மேல்—மங்கை ௪௯௦

பதம்படித்தாள் வண்ணம் படித்தாள்என் காதுக்கு
இதம்படைக்கும் தேன்போல் இனிக்க—விதம்படைக்கும்

முற்கட்டும் பாகமும்சீர் மோனை களும்பொருளும்
பிற்கட்டும் முன்முரணும் பின்முரணும்—நற்கட்டாம்

சொற்கட்டும் கண்டுவிலை தொண்ணூறு
பொன்பெறுமோர்
கற்கட்டு மோதிரத்தைக் கையிலிட்டேன்—விற்பிடித்து

### மாமியாரின் முகமன்

வாங்கினாற் போல வளைந்த வறட்டுடலும்
தாங்கிவைத்த காலும் தடிக்கம்பும்—தேங்காய்க்

குடுக்கைபோல் வாயும் கொடுவாயும் சற்றே
நடுக்கும் தலையும் நரையும்—பொடிக்கொசுகு ௪௯௫

---

௪௮௮. அங்கயற்கண்: மீனாட்சி.

௪௮௯. பாண்டித் துரை: பாண்டி நாடாண்ட தலைவன்.

௪௯௦. மங்கை: மதனாபிஷேகம்.

௪௯௩. கற்கட்டு மோதிரம்: கல் இழைத்த மோதிரம்.

௪௯௪. வாங்குதல்: வளைத்தல். வறட்டு உடல்: பசையற்ற மேனி.

௪௯௫. கொடுவாய்: வடியும் வாணீர். பொடிக் கொசுகு: சிறு கொசுகு.

மொய்த்தகண்ணும் காற்றுமுட்டி முன்பறியப் பின்பறியக்
குத்திருமல் போட்டலைக்கும் கோப்புமாய்—வித்துக்கு

விட்டசுரைக் காய்போல் விழுந்துமுழங் காலதனைத்
தொட்டமுலைத் தாய்க்கிழவி தோன்றினாள்—கிட்டவா

நாணமுற்றாள் மாமிஎன்று நான்அறியத் தன்உடம்புக்
கோணலுக்குள் ளேசற்றே கோணினாள்—தூண்ஒதுங்கி

"வந்தீரோ! எங்கள் வரிசைத் துரையே! நீர்
சந்தோஷ மாகஇங்கே தான்வரவே—இந்தமனை

என்ன தவம் செய்ததோ என்பேதை முன்பிறப்பில்
என்ன தவம்செய் திருந்தாளோ?—கன்னிமுந்தா ரு௦௦

நாள்இரவு கண்டகனா நன்மையும்என் பேதைமணித்
தோள்இடது பக்கம் துடித்ததுவும்—ஆள்வரத்தில்

காகம் கதறியதும் கட்டைச்சி தும்மியதும்
தோகைக் கொருகுறத்தி சொன்னதுவும்—யோகம்வரப்

பல்லி நிமித்தம் பலகால் இயம்பியதும்
நல்லவரைச் சேர்க்கும்என்று நங்கையுடன்—
சொல்லிவைத்தேன்

அப்படியே வந்தீர்என் ஆசை மகள்குணத்தை
இப்படியென் றேஅறியீர் இன்னமுநீர்—பொய்ப்புரட்டுச்

---

சகூஅ. தூண்ஒதுங்கி: தூணின் புறத்தே மறைந்து நின்று.

சகூகூ. இந்த மனை: இவ் வீடு.

ரு௦௦. கன்னி: என் மகளாகிய கன்னி.

ரு௦க. நன்மை வருவதற்கு அறியும் குறியாகப் பெண்களுக்கு இடது தோள் துடிக்கும் என்பர்.

ரு௦௨. பலகால்: பலமுறை.

ரு௦ச. இப்படி: இன்ன விதம்.

சாலவித்தைப் பெண்கள் தடத்தில் மிதித்தறியாள்
மாலவித்தைப் பெண்கள் மனைக்கேகாள்—நாலு ருoரு
பரத்தையரைப் போலே பணங்காசு தேடும்
கருத்துண்டோ காயக்கம் காணேன்—ஒருத்தர்கிட்ட
மானுளை விட்டேனே? மாயக் கிரந்திவந்த
தானால் ஒருகாசுக் காகுமோ?—நான்ஈன்ற
மாதுக்கு ராஜ வளர்ச்சியே அல்லாமல்
ஏதுமறி யாள்சிறியாள் இன்னங்காண்!—பேதைக்குக்
கொஞ்சவய தானாலும் கூடி உமைக்கலந்து
கொஞ்ச வயதுகாண் கொற்றவரே!—வஞ்சிநல்லாள்
தன்மனதுக் கேற்கச் சவதரித்தாற் பொன்கோடி
மன்மதன்தந் தாலுமினி வாங்காள்காண்!—
என்மகட்குப் ருகo
பாலிலே மெள்ளப் பழம்நழுவி வீழ்ந்தவிதம்
போலவந்து வாய்த்தீர் புலவரே!—நீலிஒரு
பேய்ப்பிள்ளை பெற்றேன் பிடிப்புவிடா மற்கொண்ட
மாப்பிளையும பெண்ணுமாய் வாழ்ந்திருங்கள்!—
மாப்பிளைக்கு ருகஉ

---

ருoரு. தடத்தில்: அடி பட்ட இடத்தில். மாலவித்தைப் பெண்கள்: மயக்குக் காரிகள்

ருoசு. பரத்தை: தேவடியாள். காயக்கம: மோக மயக்கம்.

ருoகூ. கொஞ்ச வயது: சிறுவயது. கொஞ்ச வயது காண்: கொஞ்சுவதற்குப் பொருத்தமான வயதே.

ருகo. சவதரித்தால்: ஒத்து நடந்தால்.

ருகஉ. பிடிப்பு விடாமல்: கட்டு நீங்காமல். ''கவவுக்கை ஞெகிழாமல்'' என்றார் இளங்கோ அடிகள். ''சேர்த்தியகை ஞெகிழாமல் சேர்ந்து சேர்ந்து'' என்றுரைத்தார் பாரதம் பாடிய வில்லிபுத்தூரார். ''வளி: இடை போழப் படாஅமுயக்கு.'' என்று இயம்பினர் புலவர். வளி: காற்று. காற்றுக்குக்கூட இடையே புகுந்து பிரிக்க முடியாத சேர்க்கை.

நித்திரைக்கு மெத்த நெடுநேரம் ஆகுதுபோ
தத்தைமொழி யாய்!'' என்று சன்னைசொல்லி—
அத்தையரும் ௫௪௩

போயினர் பாங்கியரும் போயினர் செம்பவள
வாயினள் உள்வீட்டில் வாருமென்றாள்—சேயிழையாள்

**படுக்கை அறை அலங்காரம்**

முன்சென்றாள் பின்சென்றேன் முன்முகப்பு வாசலிலோர்
பொன்கொண் டிழைத்தரத்னப் போதிகையோ?—
மின்கொண்ட ௫௪௫

சித்ரக் கொடுங்கையோ? செம்பொன்நிலை யோ?கதவிற்
பத்திஇட்ட கண்ணாடிப் பட்டமோ?—சுத்திரிப்பு

வேலை நிரைத்தபுது மேற்கட்டி யோ?சிறந்த
மாலை நிறைத்த வரிசையோ?—கோலவச்ரக்

காலிட்ட தூங்குமஞ்சக் காந்தியோ? பட்டாடை
மேலிட்ட மல்லிகைப்பூ மெத்தையோ?—ஏல்வைகண்டு

௫௪௩. சன்னை சொல்லி: சாடையாகச் சொல்லி.

௫௪௪. உள் வீடு: உள் அறை. சேய் இழை: செவ்விய அணி பூட்டிய மதனாபிஷேகம்.

௫௪௫. பொன் கொண்டு இழைத்த ரத்னப் போதிகை: பொன்னினால் செய்து நவமணிகள் பதிக்கப்பெற்ற தூணின் சிகரங்கள்.

௫௪௬. கொடுங்கை: வளைந்த தொங்கல்.

௫௪௭, ௫௪௮. வச்ரக் காலிட்ட தூங்கு மஞ்சக் காந்தி: வைரக்கால் வைத்த தொங்குகின்ற ஊசலின்ஒளி. பட்டாடை மேல் இட்ட மல்லிகைப்பூ மெத்தை: மல்லிகை மலர் பரப்பப்பெற்ற வில்வெட்டு மெத்தை. ஏல்வை: சமயம்.

தாங்கியதி வட்டிக்குத் தானே தயிலம்விடப்
பாங்கில்வைத்த சூத்திரப்பொற் பாவையோ?—
தூங்குமஞ்சப் ருகக

பக்கத்தில் வெள்ளிப் படிக்கமோ பள்ளியறைத்
திக்குக்குத் திக்குமதிற் சித்திரத்தில்—
மைக்கருங்கண் ருஉ0

பெண் இரதி போல்ஆறு பேர்க்கொருவ னேவிலை
பண்ண எழுதிவைத்த பாவனையோ?—தண் அளியோன்
மேற்கொண் டொருமடந்தை மிக்காம லீலைசெயக்
கார்க்கொண்டை பின்சரியக் கால்எழுப்பி—போர்க்கலவி
ஆட்டத்திற் சூதகமும் ஆகஎழு திக்கழுவில்
போட்டவிதம் போலிருந்த பொங்கமோ? வாட்டமுற
மோடிவைத்த பெண்கமல முன்கைபிடித் துக்கடைக்கண்
நாடிவைத்தாள் என்று நயம்பேசச்—சூடகக்கை
தன்னைக் குவித்துத் தலைவன் தலையில்அந்த
மின்னனையாள் தாடனஞ்செய் விந்தையோ?-பின்ஒருபால்
அம்பனைய கண்ணியும்ஓர் ஆளும் தலைமாறிச்
சும்பனங்கள் செய்யும் தொழில்விதமோ?—சம்பரமங்கள்

---

ருகக. தயிலம்: நெய். பாங்கு: பக்கம். சூத்திரப் பொற்பாவை: தங்கத்தால் செய்த விசைப் பொம்மை.

ருஉ0. திக்குக்குத் திக்கு: எல்லாப் பக்கமும். மதில் சித்திரத்தில்: சுவரில் எழுதப்பட்ட ஓவியத்தில்.

ருஉக. பாவனை: மாதிரி.

ருஉஉ. கார்க்கொண்டை: முகில் அனைய கூந்தல்.

ருஉங. பொங்கம்: மகிழ்ச்சி.

ருஉச. மோடி: மகுடி. சூடகம்: வளையல்.

ருஉரு. தாடனம் செய்தல்: அடித்தல்.

ருஉகூ. சம்பரமங்கள்: சிறப்புகள்.

சொல்ல முடியாது தூங்குமஞ்சத் தேறினேன்
மெல்லவிழும் கொப்பத்தில் வேழம்போல்—நல்லதங்கத்

### மாமியின் சீர்வரிசை.

தட்டிலே பாக்குவெள்ளித் தட்டிலே வெள்ளிலைபொற்
பெட்டியிலே மல்லிகைப்பூ பிச்சிப்பூ—வெட்டிவேர்
தந்தச் சிமிழிற் சவாதுகுர்ணுப் பட்டைதனில்
கெந்தப் பொடிபவளக் கிண்ணத்திற்—சந்தனங்கள்
கூறுங் கிளிமொழியைக் கூடின் விடாயாறித்
தேறும்பொழுதிலுண்ணச் சிற்றுண்டி—வேறுசில ருஙo
பீங்கானிற் பன்னீர் பிடிசெம்பி லேவெந்நீர்
தேங்காய் முலையார் சிலபேர்கொண்டு—ஆங்குவந்து
மாமிவர விட்ட வரிசைஎன்று வைத்துநின்றார்
காமி அவர்களைக்கண் காட்டினாள்—சேமமணி

### படுக்கை சேர்ந்தமை.

வாசற் கதவடைத்தாள் மங்கைநல்லார் போனதற்பின்
பேசிக் குணாலமிட்டுப் பேதைபோற்—கூசி ருஙங

---

ருஉஎ. கொப்பம்: யானை பிடிக்க வெட்டும் குழி. வேழம்: யானை.

ருஉஅ. வெள்ளிலை: வெற்றிலை.

ருஉகூ. பவளக் கிண்ணம்: பவளத்தைத் தோண்டிச் செய்யப்பட்ட கிண்ணம்.

ருஙo. விடாய்: களைப்பு. சிற்றுண்டி: பலகார வகைகள்.

ருஙக. பிடி செம்பு: கைப்பிடி வைத்த செம்பு.

ருஙஉ. காமி : மதனாபிஷேகம். சேமம்: காப்பாக அமைந்த.

ருஙங. மங்கை நல்லார் போனதற்பின் வாசற்கதவு அடைத்தாள் என மாற்றிப் பொருள் கொள்க. குணாலம் இட்டு: ஆனந்தக் கூத்து ஆடி.

மதிவதனம் கோட்டி வளை திருத்தி நின்றாள்
புதிய மணவறைப்பெண் போலே—மதனுபி ௫௩௪

ஷேகமே! என்பிராண ஸ்நேகியே! தாங்காதென்
மோகமே! என்றவளை முந்திபிடித்து—ஏக ௫௩௫

சயனத் திருத்திமுகம் தன்னில்முகம் சேர்த்து
நயனத்தில் வைத்தேன் நயனம்—தயவுவரப்

பேசிமலர் மல்லிகைவேர் பிச்சிமுடித் துக்கலவை
பூசிச்சவ் வாது புனுகணிந்து—நேசம்

பிடிக்கக் கொடுத்தாள் பிளவுதாம் பூலம்
மடித்துக் கொடுத்தாள் தன் வாயாற்—கடித்துக்

கொடுத்தாள் சிலசுருளைக் கொஞ்சிமடி மீதிற்
படுத்தாள் புளகம் படைத்தேன்-எடுத்தணைத்துக்

**போகம் நுகர்தல்**

கொங்கை முகம்பிடித்துக் கொங்கைவாய்த்
தேன்குடித்துச்
செங்கை கொடுநெகிழ்த்தேன் சேலைதனை—
அங்கவள்என் ௫௪௦

சோமன் உரிந்தாள் துடைமேல் துடைபோட்டாள்
காமம் ஒழுகவிட்டாள் காமியத்தை—காமக்

கலைமுறையே ஆலிங் கனங்கள் ஐந்து செய்தோர்
முலைசுவைத்து மற்றோர் முலையை—மெலநெருடிக் ௫௪௨

---

௫௩௪. மதி வதனம் கோட்டி: சந்திரன் அனைய முகத்தை வளைத்து. வளை திருத்தி: கை வளையை ஒழுங்கு செய்வது போல் தடவி.

௫௩௬. நயனம்: கண்.

௫௩௯. புளகம்: மெய்ச் சிலிர்ப்பு.

௫௪௧. சோமன்: வேட்டி.

௫௪௨. ஆலிங்கனங்கள்: தழுவுதல் வகை.

கைமூலம் உண்டு கவுள்மாங் கனிசுவைத்து
மைவிழியில் நாவைவைத்து வாங்கிநகம்—பையத் ருசங

தலைஅழுத்தி உந்தி தனில்மகரம் கீறி
கலவைக் கழுத்தணைத்துக் கட்டி—நிலைமைபெறச்

சாதி குணங்குறிகள் தத்துவங்கள் தேர்ந்துசுக
மாது பருவ வகைகண்டு—சோதித்து ருசரு

அறிந்து பதினைந் தமுதநிலை ஆராய்ந்து
இறங்குமிடம் ஏறு மிடம்கண்டு—அறிந்துவிடத்

தானம் அகற்றிஉள்ளந் தானை வருடிஇன்ப
மான விரல்சுவைத்துள் அந்தரங்கத்—தேனிருல்

மெல்லமெல்ல நீவி விரல்கொண்டு சுற்றிஅந்த
வல்லிமேல் என்கண் வரிசிலையிற்—சொல்லும்

அகார உகார எகார ஐகார
இகாரக் கணைகளைவைத் தெய்து—மகாசுகநீர்

பாய்ந்தொழுகச் சேர்ந்தணையிற் பஞ்சகர ணத்தின்மல்
லாந்த கரணமுத லாங்கரணம்—வாய்ந்தமகிழ் ருருo

அந்தக் கரணம் அவட்கும் எனக்கும் ஒன்ருய்
முந்தக் கலவிப்போர் மூளவே—சந்தனப்பொற் ருருக

---

ருசங. கை மூலம்: உள்ளங்கை. கவுள் மாங்கனி: கன்னமாகிய மாம்பழ அலகு.

ருசச. உந்தி: கொப்பூழ். மகரம் கீறி: மகரம் போலத் தடவி.

ருசரு. தேர்ந்து: ஆராய்ந்து.

ருசஎ. அந்தரங்கத் தேன் இருல்: ரகசியமான தேன் ராட்டு.

ருசஅ. நீவி: தடவி.

ருருo. அணை: படுக்கை.

குங்கும கும்பகு டங்களை வென்றத
னங்கள்பு யங்கள் த தும்பிஞெ—முங்கிட ருருஉ
மங்கை குறங்கென் மருங்கில் நெருங்கஎன்
அங்கை நகங்கள் அழுந்தம யங்கி

அணைந்து குழைந்துமெய் அன்றில் இரண்டு
பிணைந்த விதங்கள் பிணைந்து—மணங்கமழ்

ஆகமும் ஆகமும் ஆவியும் ஆவியும்
மோகமும் மோகமும் மூரலும்—ஆகவொர் ருருரு
எட்டுடன் எட்டை இரட்டிசெய் தத்தொகை
ரட்டிசெய் திட்ட வகைத்தொழில்—இட்டமுடன்

கண்ணாடி யில்ரதியும் காமனும்கற் கின்றதெனக்
கண்ணா டியில்ஒருபால் காண்பிக்கப்—பெண்ணரசி

தண்டரளப் பூண்மார்பு தாங்கிஉயர்ரதியின்
மண்டலம்போல் முன்இருத்தி வார்குழல்மேல்—
வண்டெழுந்து ருருஅ

---

ருருஉ. ததும்பி: மலர்ந்து. ஞெமுங்குதல்: அழுந்துதல். குங்கும கும்ப குடங்களை வென்ற தனங்கள் புயங்கள் ததும்பி ஞெமுங்கிட எனப் பதம் பிரிக்க.

ருருங. மங்கை குறங்கு: அவள் துடை. என் மருங்கு: எனது இடுப்பு.

ருருச. பிணைந்து: பின்னி.

ருருரு. ஆகம்: உடல். ஆவி: உயிர். மோகம்: ஆசை. மூரல்: புன்முறுவல்.

ருருசா. எட்டுடன் எட்டு: பதினாறு. அதனை இரட்டி செய்தால், முப்பத்திரண்டு. அத் தொகையை இரட்டித்தால் அறுபத்து நான்கு. அறுபத்து நான்கு வகையான கலவித் தொழில்.

ருருஅ. தண் தரளப் பூண்: குளிர்ந்த முத்துமாலை.

சங்கீதம் பாடத் தனங்கள் தாளம்போடச்
செங்கனிவாய்மென்குதலை தீங்குழல்போற்-பொங்குஅமுத

மங்கைநல்லாள் ஆயிரக்கால் மண்டபத்தில் ஆடினள்
போல்
அங்கும்ஒரு மன்மதக்கூத் தாடினாள்-பைங்குழலாள் ௫௬௦

கற்ற கழைக்கூத்தும் காட்டி வலசாரி
சுற்றி இடசாரி சுற்றினாள்—மற்றுமந்தப்

பைந்தொடிக்கைத் தானம் பளீல்பளீல் என்றுவிழக்
கந்தமலர்க் கைவளைக லீல்என்னக்—கந்தரத்தில்

ஒன்று குகுகுஎன ஒன்று குமுகுமென
ஒன்றுகுங் குங்கென்ன ஓசைதரக்—குன்றாத

புள்ஒலிஎட் டுங்குமுறப் போதாக் குறைக்குவித்தைக்
கள்ளி நொடிப்பின்வகை கைநொடித்தாள்—மெள்ளமத

பீடத்தில் வைத்தேன் பெருங்காம வாரிதியில்
ஓடத்தில் வைத்தமயில் ஒப்பானாள்—கூடுகின்ற ௫௬௫

---

௫௫௯. மென்குதலை: மெல்லிய மழலைமொழி: தீங்குழல்: இனிக்கும் குரல் ஓசை.

௫௬௦. மன்மதக் கூத்து: காம நாடகம்.

௫௬௧. கழைக் கூத்து: மூங்கிலின் மேல் நின்று ஆடும் கூத்து. சாரி: பக்கம்.

௫௬௨. பளீர் கலீல் ஒலிக் குறிப்பு. கந்தரம். கழுத்து.

௫௬௩. குன்றாத: குறையாத.

௫௬௪. புள் ஒலி: பறவை ஓசை. கைநொடித்தல்; சுடக் கொடித்தல்.

௫௬௫. பெரும் காமவாரிதி: காமப் பெருங்கடல்.

மின்அனையாள் தன்அறிவும் மெய்யும் புதுமலரும்
தன்நலனும் பொன்மருங்கும் தள்ளாடச்—சின்னபின்னக்

கோவை வடந்திருத்திக் கூந்தல் புறத்தொதுக்கி
வேர்வை வழித்துமெள்ள வீசியே—காரிகையை

முத்தமிட ஒட்டாத மூக்குத்தி யைக்கழற்றி
முத்தமிட்டேன் மெச்சிஎனை முத்தமிட்டாள்-முத்தையன்

ஆமடா கொங்கைகளுக்கு ஐந்துகிரும் வைத்தக்கால்
நோமடா மன்மதநல் நூல்படித்த—சாமி

இறுகிறுகு சமயமென இனியமொழி குழறஇள
முறுவலது வெளிறமுலை முனைபருக—மறுகுகொடி ௫௭௦

இடைதுவள நுதல்நெளிய இலகும்இதழ் பதறஇரு
துடைகள்பட படெனவரு சுகசலதி—கடலுடைத்துக்

கொண்டபெருக் கென்னக் குபீலென்று பாயஅதில்
ஒண்டொடியும் நானும் உருவிலியும்—தண்தரள ௫௭௨

---

௫௬௬. மெய் : உடம்பு. நலன்: அழகு. மருங்கு: இடை. சின்ன பின்னம்: அலங்கோலம்.

௫௬௭. கோவைவடம் திருத்தி: கோத்தமாலையை ஒழுங்குப்படுத்தி.

௫௬௮. முத்தம் இட ஒட்டாத மூக்குத்தியைக் கழற்றி : முத்தம் கொடுக்க விடாமல் தடுக்கும் மூக்குத்தியைக் கழற்றி விட்டு. மெச்சி எனை : என்னைப் பாராட்டி.

௫௬௯. ஐந்து உகிர் : ஐந்து நகங்கள்.

௫௭௦: முனை : நுனி. பருக : சுவைக்க.

௫௭௧. இதழ் பதற : உதடு துடிக்க. சுக சலதி : இன்பக் கடல்.

௫௭௨. ஒண்தொடி: மதனபிஷேகம். நான்: அவதானி. உருவிலி : மன்மதவேள்.

மெத்தையும்கைந் நீச்சும் மிதப்புமா கச்சோப
நித்திரைபோய்ச் சற்றே நினைவுவந்து—தத்திரமாய்௱எ௩

எனகலையைச் சுற்றி இடுக்கி முகங்கோட்டிப்
பொன்கதவைத் தள்ளிப் புறப்பட்டாள்—முன்புசெலும்

மோகினிபின் செல்லும் முனிபோல யான்சென்றே
போகநீர் பன்னீரால் போக்கியே—நாகரிக ௱எரு

மங்கை யுடன்திரும்பி வந்தேன் மலரணையிற்
செங்கை வளைநெறிந்து சிந்தியதும்—அங்கவிழ்ந்த

மாலைஒரு பக்கம் வதங்கிக் கிடந்ததும்பொன்
ஓலைஒரு பக்கம் ஒதுங்கியதும்—கோலமுத்தம்

சிந்தியதும் செம்பவளம் சிந்தியதும் கண்டேஎன்
சிந்தை அறிவைஅங்கே சிந்தினேன்—வந்திருந்த

குன்றைப் பொருதமுலைக் கொஞ்சுமொழிக் கிஞ்சுகவாய்
மன்றற் குழலி மடிசாய்ந்தேன்—என்தலையைச்

**கலவிப் புகழ்ச்சி**

சுற்றிக் கிரணத் தொடிவளைக்கை யாற்றனது
நெற்றிக்கொருபால்நெரித்திட்டாள்-கற்றதொழில் ௱அ௦

காட்டினீர் ஐயாஎன் கண்திட்டி பட்டதின்பம்
பூட்டினீர் கண்டேன் புருஷரையும்—நாட்டிலே ௱அ௧

---

௱எ௩. சோப நித்திரை: அயர்ச்சித் தூக்கம். தத்திரம்: சாமர்த்தியம்.

௱எ௪. என்கலை: என்னுடைய வேட்டி.

௱எரு. நாகரிகம். இங்குக் கண்ணோட்டம் என்னும் பொருளில் இல்லை; தற்கால நாகரிகமே.

௱எ௯. குன்றைப்பொருத: மலையோடு போர் இடட. கிஞ்சுகம்: சிவப்பு. மன்றல் குழலி: மணம் தங்கிய கூந்தலாள். மடி சாய்ந்தேன்: மடியிலே படுத்தேன்.

உங்களைப்போ லேகலவிக் குத்தரிக்க வல்லவர்யார்?
இங்குவரக் காணேன் இதுவரைக்கும்—தங்காத ருஅஉ
கோழிப்போ கக்காரர் கோட்டைவா சற்காரர்
சூழத் திரிவார் தொடருவார்—பாழறுவார்

தன்போகம் முந்தவிட்டுத் தப்புவரே அல்லாமல்
என்போகம் முந்துவிப்பார் இல்லையே—அன்பரே!

ஆணெல்லாம் உம்மைப்போல் ஆணுகு மோமுருங்கைத்
தாணெல்லாம் நல்வயிரத் தூணுமோ?—வீணே ருஅரு

முருக்கமலர் ஆர்தாம் முடிப்பார்? முடித்தால்
மருக்கொழுந்தின் வாசம் வருமோ?—ஒருத்தர்முகம்

பாரேன் இனிஎனக்குப் பள்ளியறை மாப்பிளையும்
நீரே சரிஎன்றுள் நேசம்போற்—காரானைக்கு

**புணர்ச்சி வருத்தம் போக்கல்**

ஊட்டும் கவளம்போல் உண்ணக் கனிகொடுத்தாள்
கோட்டும் குழலி குழம்புப்பால்—நாட்டம்
விரும்பக் கொடுத்தாளம் மின்னாள் அதரக்
கரும்பைப்போ லேருசிக்கக் காணேன்—திரும்ப ருஅகூ

---

ருஅசு. பாழறுவார்: பாழாகப் போவார்.

ருஅஎ. நேசம்போல்: அன்புடையவள் போல. கார் ஆனைக்கு: கரிய யானைக்கு.

ருஅஅ. கவளம்: உருண்டை. கோட்டும் குழலி சுருண்ட கூந்தலாள். குழம்புப்பால். பாசந்தி: நாட்டம் கண்.

ருஅகூ. அம் மின்னாள் அதரக் கரும்பு: அம்மின் அனையாளின் இதழ்க் கரும்பு ருசி. இதழ்ச்சுவைக்கு இணையாக வில்லை பாற்குழம்புச் சுவை. திரும்ப: மறுபடியும்.

நடந்த கலவிசொல்ல நாலுநாட் செல்லும்
விடிந்துதயம் எய்தினன் வெய்யோன்—மடந்தைநல்லாள்

**விடிந்தபின் மயக்கம்**

மேலிலங்கு மஞ்சள்பட்டு வெண்பூணூல் பொன்பூணூல்
போலிலங்கக் கண்டுமனம் பூரித்தேன்—சால

அழுந்து நகக்குறியை ஆடவர்கண் டேங்கச்
செழுந்திரைநீர் வையையில்யான் சென்றேன்—தொழுங்
குலத்து

நான்அவள்மேல் ஆசையினல் நாயுருவி என்றுகுப்பை
மேனிபிடுங் கிப்பல் விளக்கினேன்—மோனமந்த்ர

தர்ப்பணத்தை நீக்கித் தலைமுழுகி னேன்கலவி
உற்பனத்தை எண்ணி உருச்செபித்தேன்-பொற்புடைய

மாயத் திரியைவிட்டு வந்துநெடு நேரமென்று
காயத் திரியைவிட்டேன் காமிபோல்—தூயமணி ருகூரு

தூவுதிரை வையையிலோர் சோமன் மறந்தேன்முன்
காவிரியிற் போட்ட கலக்கம்போல்—தீவிரமாய்ப் ருகூசு

---

ருகூ௦. வெய்யோன்: சூரியன்.

ருகூக. மஞ்சள் அப்பப்பட்ட பூணூல், வெள்ளி தங்கமாக மாறியமையால் ஒரு பூரிப்பு. சால: நன்றாக.

ருகூ௨. ஆடவர் கண்டு ஏங்க: ஆண்பிள்ளைகளெல்லாம் பார்த்து ஏக்கம் அடைய

ருகூரு. மாயத்திரி: மாயக்காரி. காயத்திரி: காயத்திரிஜபம்.

ருகூசு: முன் திருவரங்கத்திலிருந்து திரிசிராப்பள்ளிக்கு இன்பரச வல்லியிடம் போங்கால் காவிரியில் உத்தரியம் போக்கடித்தது போல தூவுதிரைவையையிலோர் சோமன் மறந்தார் அவதானியார். "ஓடத்தில் ஏறினர் உத்தரியம் போக்கடித்தார், நாடிச் சிரகிரியை நண்ணினர்" என்பது இந்நூலின் கககு-ம் கண்ணி.

போனேன் அவள்மனையிற் பொற்கொடியாள் சொற்படிஓர்
மானுள் எனை அழைத்து வாரும்என்று—மீனாட்சி ௫௯௭

ஆயிவீட் டிற்சமையல் ஆச்சுதுபோம் என்றாள்நான்
போயிருந்து சாப்பிட்டேன் போஜனத்திற்—காய்கறிகள்

இன்னதெனஅறியேன் இன்னரசம் என்றறியேன்
கன்னிமேல் வைத்த கவனத்தால்—என்னுடைய

கைகாரம் ஆறுமுன்னே காதலியை வந்தணைந்து
சையோக வைபோக சம்போக—மெய்போகம் ௬௦௦

ஆகச் சுகித்தேன் அகப்பட்டேன் பாய்மரத்திற்
காகத்தை ஒத்தேன்என் காதலால்—மோகவலைப்

பூட்டுக்குள் ளானேன்அப் போழ்வாய்ச்சி கைம்மருந்துக்
கூட்டுக்குள் ளேஅடைக்கக் கோப்பிட்டாள்—காட்டு

---

௫௯௯. இன்ன ரசம் என்றறியேன்: இன்ன சுவை என்றே தெரியவில்லை; உறைப்புப் புளிப்பு இனிப்பு வேறுபாடு கூட விளங்கவில்லை. காரணம்? கவனம் எல்லாம் கன்னிமேல்.

௬௦௦. கை உலரும் முன்பே காதலியை வந்து அணைந்து அனுபவித்தேன்.

௬௦௧. பாய்மரத்தில்அகப்பட்டகாகமானேன்; கடலில் கப்பலின் பாய்மரத்தில் அகப்பட்ட காகத்துக்கு வேறு புகல் இடம் இல்லை. "எங்கும் போய்க் கரைகாணாது எறி கடல்வாய் மீண்டேயும் வங்கத்தின் கூம்பேறும் மாப் பறவை போன்றேனே." என்றார் குலசேகர ஆழ்வார். வங்கம்: கப்பல். கூம்பு: பாய்மரம்.

௬௦௨. போழ்வாய்ச்சி: கிழவி. கோப்பு இட்டாள்: திட்டம் போட்டு விட்டாள்.

மூலிகை சேர்த்தல்

மருந்துவகை நாவடக்கி வாதம் அடக்கி
கருந்துவரை பாடவரை கஞ்சா—பெருந்தும்பை சுOரு

ஆதளைமேற் புல்லுருவி ஆவிரைமேற் புல்லுருவி
மாதளைமேற் புல்லுருவி வல்லாரை—தாதுவளை

பேய்ப்பீர்க்குப் பேய்முசுட்டை பேய்ச்சிமிட்டி பேய்ப்புடலை
நாய்ப்பாகல் நாயுருவி நாய்வேளை-நாய்க்கோட்டான் சுOடு

புன்னைப்பூ வன்னிப்பூ பூளைப்பூ தாழைப்பூ
முன்னைப்பூ மாம்பூ முருக்கம்பூ—சின்னிப்பூ

பூலாவேர் சங்கவேர் புங்கவேர் தைவளைவேர்
வேலாவேர் நெட்டிவேர் வெட்டிவேர்—பாலைவேர்

அத்திக்காய் துத்திக்காய் அல்லிக்காய் நெல்லிக்காய்
கத்தரிக்காய் பேய்ச்சுரைக்காய்காஞ்சிரங்காய்-மத்தங்காய்

நின்று சிணுங்கி நிலம்புரண்டி ஆலின்கீழ்க்
கன்று பணமுறிஞ்சிக் காஞ்சோறி—குன்றி இலை

பின்தொடரி முன்தொடரி பெண்தொடரி ஆண்தொடரி
பொன்தொடரி ஐவாய்ப் புலிதொடரி—இன்பூறல் சுகO

ஆனை வணங்கி அழுகண்ணி தொழுகண்ணி
பூனை வணங்கிப் புளிமடலை—ஊனு

தலைசுருளி நன்னாரி தான்றிவெள்ளைத் தோன்றி
மலைகலக்கி தேட்கொடுக்கு வாகை—இலைக்கருநா

ரத்தங்காய்ப் பிஞ்சுதம ரத்தம்பூப் பிஞ்சுமலை
நத்தைச்சூ ரிக்கொழுந்து நாட்டகத்தி—சித்தகத்தி

தோதகத்தி வட்டநரைத் தோதகத்தி பஞ்சமா
பாதகத்தி சூரியனைப் பாம்பணையும்—போதிற் சுகச

---

சுOரு, முதல் சுகச முடிய மூலிகைகளின் பெயர்.

சுகச. சூரியனைப் பாம்பு அணையும் போதில்: சூரிய கிரணம் உண்டான சமயத்தில்.

### கடைச் சரக்குச் சேர்த்தல்

கருத்துவகை யாய்த்தேடிக் கடையில்
மருத்துவகை கஸ்தூரி மஞ்சள்—அரைத்தசித்ர ௬௧௫

மூலம் செவிட்டாதி மூலம் கடையினிற்றக்
கோலம்தாம் பூலம் குரோசாணி—ஏலம்வெங்

காரம்சீ னக்காரம் கற்பூர சாரம்அரி
தாரம்நவ சாரம் சவுக்காரம்—காரீயம்

துத்தம் துரிசு துருசா வசப்படுத்தும்
கொத்தமல்லி வெய்விளக்கம் குங்குமப்பூ—முத்தக்கா

செட்டுப் பணவிடைஇந் துப்புவெடி வாணஉப்புக்
கட்டுப்பு வீட்டிற் கறியுப்பு—மட்டிப்பால்

இஞ்சி லவங்கம் இதன்பத்ரி சிங்களத்தோர்
கஞ்சியிலே போடும் கசகசா—மஞ்சள் ௬௨௦

அதிமதுரம் ஆசை அதிமதுரம்—ஆக்கும்
சதகுப்பி சாதிக்காய் பத்ரி—அதிவிடயம்

பாக்குச் சிறுதேக்குப் பாஷாணம் வேப்பம்புண்
ணாக்கு நிருவிஷமுள் ளாவியும்புண்—ணாக்குபச்சை

நாபி அபினிமுதல் நாலுமுழம் நாலுமுலைப்
பாவி சவதரித்துப் பாரிலுள்ள—சீவன் ௬௨௩

---

௬௧௫. மருந்து, மருத்து என எதுகை நோக்கி வலித்தல் விகாரம் பெற்றது.

௬௨௦. சிங்களத்தோர்: இலங்கைத் தீவிலுள்ள சிங்களவர்.

௬௨௩. நாலு முழம் நாலும்: நாலு முழம்தொங்கும். சவதரித்து: தேடிச் சேர்த்து.

௬௧௫, முதல் ௬௨௩ முடியக் கடைமருந்துவகைகள்.

### பிராணிகளின் உறுப்புச் சேர்த்தல்

மருந்துவகை செவ்வரணை வால்ஆந்தைப் பிச்சு
பருந்து நகம்முதலைப் பல்லு—குரங்கிற் ௯௨௪

திரியம் மாஅட்டை செவ்வட்டை பெட்டை
நரிமுதுகுத் தோல்உடும்பு நாக்கு—குருகு ௯௨௫

முனைவாய் கருஞ்சேவல் முள்ளுவெள்ளைப் பல்லி
சினவலியாண் காடைச் சிறகு—பனையடியிற்

குன்னுன்கண் வாகைமேற் கூகைகீழ் வாய்அலகு
செந்நாய்ப் பவனவாய் தேவாங்கு—கன்னம்

வலியான் கழுத்து மணிக்காடை முட்டை
எலிமூளை பன்றி இறைச்சி—புலிமீசை

வல்லூற்று வல்எலும்பு மாடப்புருவினெச்சம்
கல்லூரிக் கொம்பு கவரிமயிர்—நல்லபாம்பு

ஈரல் அலோற்றெருமை இளங்கொடிசெம்
பூர முசற்புழுக்கை புற்றின்மேல்—தேரைக்கால் ௯௩௦

தூக்கணங் குஞ்சு சுழல்வண்டு நண்டுகருங்
காக்கைநிணம் காராக் கருமுலைப்பால்—நாக்குப்

புழுப்பூனைப் பீசம் பொலிப்புக் கடாவின்
கொழுப்புப் பெருச்சாளிக் குட்டி—பழுத்தமர

வவ்வாற் றலைகுதிரை வாயின் நுரைகரடிச்
சவ்வுகிழ வானைமதம் சங்கிலூன்—நவ்விரத்தம்

கன்னிகழி யாதபிள்ளை காதிற் சிறுகுறும்பி
தன்னை அறியாள் தலையிற்பேன்—சின்னஅட்டை

வாற்குருவிச் சந்தெலும்பு வானம்பா டிக்குடலுள்
ஊர்க்குருவிக் கொக்கரை தன் ஊருக்கு—மேற்குக் ௯௩௫

---

௯௨௪. முதல் ௯௩௯ முடியப் பிராணிகளின் அங்கங்கள்.

கரட்டோரித் தொண்டை கரட்டோந்தி மண்டை
வரட்டோரி தேடி வகையால்—நிறுத்து ௯௩௯

### மருந்து கலந்து கொடுத்தல்

வனமருந்தெல் லாம்தயிலம் வாங்கிக் கடையில்
கனமருந்தெல் லாம்பேய்க் கரும்பு—தனில்வடித்த
சாற்றில் அறைத்துத் தசையூனைத் தாழியிலே
ஊற்றியசா ராயத்தில் ஊறவைத்துச்—சோற்றடுப்பிற்
செம்மிப் புதைத்துமறு திங்களிலெல் லாமருந்தும்
அம்மியிலே இட்டுமகள் அங்குலிநீர்—செம்மைதரும்
நாக்கில் அழுக்கு நகத்தழுக்குக் காலடிமண்
மூக்கில் வியர்வும்விட்டு மூன்றுநாள்—தாய்க்கிழவி ௯௪௦
மைப்போல் அறைத்துருட்டி மங்கைநல்லாள் இந்த உண்டை
தப்பா தெனக்கொடுத்தாள் சர்ப்பனையால்-அப்பளத்தில்

### மருந்துண்டு மதிமயங்கல்

இட்டாள் பழத்திலே இட்டாள்சுண் ணும்பிலே
இட்டாள் மதிமயக்கம் எய்தினேன்—விட்டிருக்கக்
கூடாது கண்ணுறக்கம் கொள்ளாது சாப்பாட்டைத்
தேடாது வேறுமனம் செல்லாது—பேடனையாள்
மோக சமுத்திரத்தில் மூழ்குவதல் லாதுபிர
வாக நதியை மறந்துவிட்டேன்—மோகனஞ்செய் ௯௪௪

௯௩௯. வரட்டு ஓரி: வரட்டு நரிபோன்ற தாய்க் கிழவி.

௩௮. தாழி: பாத்திரம்.

௯௩௧. மறு திங்களில்: மறுமாதத்தில்.

௯௪௧. சர்ப்பனை: வஞ்சனை.

௯௪௩. பேடு அனையாள்: பெண் பறவையை நிகர்த்தவள்.

௯௪௪. பிரவாக நதி: பெருக்கெடுத் தோடும் வையை ஆறு.

சித்தசனன் மந்த்ரகலே தேர்ந்தறிவ தல்லாது
நித்தியசெப மந்திரத்தை நீக்கினேன்-தத்துவரிக் கூசரு

கண்ணிசெயும் மோடிக்குக் கால்பிடிப்ப தல்லாது
புண்யநமஸ்காரங்கள்போட்டுவிட்டேன்-பெண்அணங்கின்

செங்களபக் கொங்கை தெரிசனமல் லாதுசிவ
லிங்க தெரிசனத்தை நீக்கினேன்—அங்கசவேள்

மாபூஜை வேளேயவள் வாயமிர்தம் உண்பதல்லால்
தேபூஜை மேற்கவனம் தீர்ந்துவிட்டேன்—சோபமுற்ற

**வஞ்சகச் சதி**

நாட்டமறிந் தென்னே நரைக்கிழவி மெல்லஒரு
பூட்டகந்தான் பேசிஞள் பொன்பறிக்க—தாட்டிகரே.

ஆடித் திருநாள் அழகருக்கின் ருகுதந்த
வேடிக்கை பார்க்க வெகுஜனங்கள்—கூடியே கூரு௦

செல்கின்ருர் நீங்களும்போய்த் தீர்த்தத்தில் ஆடிவந்தால்
நல்லபலன் எங்களுக்கு நண்ணுதோ ?—கல்வியீர் !

என்ருள்அவ் வார்த்தைக் கிருந்தால் அறிவிலியாம்
சென்ருலும் மங்கைமேல் தேட்டமாம்—என்றுசெழுந்

---

கூசரு. சித்தசனன் மந்த்ரகலே: காம ரகஸ்ய சாஸ்திரம். தேர்ந்து: தேர்ச்சி பெற்று. நித்ய ஜெபமந்திரம்: நித்திய கர்மா நுஷ்டானம். தத்துதல்: தாவுதல். வரி: ரேகை.

கூசகூ: மோடி: ஊடல்.

கூசஎ. களபம்: சந்தனம். அங்கசவேள்: மன்மதன்.

கூசஅ. தே பூஜை: கடவுள் வழிபாடு. சோபமுற்ற: மெலிவு பெற்ற.

கூசகூ. பூட்டகம்: வஞ்சகம்.

கூரு௦. அழகர்: அழகர் கோவில் இறைவர்.

கூருக. நண்ணுதோ: வரமாட்டாதா.

தேனே! மதனபிஷேகமே! நீவருவை
ஆனால் திருநாட்கு அழகென்றேன்—நானும்உம்மைக்

**திருவிழாக் காணச் செல்தல்**

காணு திருந்தாலென் கண்ணுறங்கு மோஎன்று
பூணுர் முலையாள் புறப்பட்டாள்—பாணிப்பாப்

பித்தளையி ஞல்உடைமை பெண்ணுக்குப் பூட்டிவிட்டே
அத்தை தொடர்ந்தாள் அடிப்பிறகே-பத்துப்பேர் ௬௫௫

பாங்கியரும் இன்றிவரும் பாவையுடன் சென்றழகர்
ஓங்குமலைத் தீர்த்தம் உவந்தாடிப்—பூங்குழலாய்!

மானும் கலையும்நரை மந்தியும்போ லேஇறங்கித்
தேனுந்து பூந்துளவச் செங்கண்மால் தானேறும்

தேருக்குப் பின்னுக்சென்றேம்ஓர் பாணஇசைத்
தாரத்தே ஞானியையன் தோன்றினன்—தேருக்குப்

---

௬௫௪. பாணிப்பா:; பொருத்தமாக.

௬௫௬. பாங்கியரும் இன்றி: தோழியரே இல்லாமல். ஓங்கு மலைத்தீர்த்தம்: உயர்ந்த மலை அருவி நீர். உவந்து ஆடி: மகிழ்ந்து குளித்து. பூங்குழலாய், என்பது இங்கு விறலியைப் பார்த்துச் சொல்வது.

௬௫௭. மானும் கலையும் நரை மந்தியும் போலே இறங்கி: பெண்மானும் ஆண்மானும் நரைத்த குரங்கும் போல, அவளும் நானும் கிழவியும் மலையினின்றும் கீழே இறங்கி. மான் என்பது இங்கு பெண்மானைக் குறிக்கிறது. கலை: ஆண்மான். ''மயிலும் பெடையும் உடன் திரிய மானும் கலையும் மருவிவர'' என்கின்ருர் கம்பர்.

௬௫௮. பாண இசைத் தாரத்தே: இசைக் கோஷ்டியோடு சிறிது தாரத்தில்.

பக்கத்தி லேஒதுங்கிப் பாந்தினேன் அப்புறத்தோர்
தக்கமறை யோன்மனையில் தங்கினேன்—கக்கத்தில்

தூக்கிட்ட தோசைச் சுமையும் மடிதனிலே
பாக்கிட்ட கைவாளப் பையுமாத்—தாய்க்கிழவி ௬௬௦

மாதைத் தொடர்ந்துவர மங்கைஎனைப் பின்தொடரப்
பாதைவழிக் கொண்டேன் பரிசுடனே—பாதை

**திரும்புகையில் செய்த மோசம்**

அரைநாழி கைக்கப்பால் அத்தை குறுகி
வரைமா முலையாய்! மறந்தேன்—சரிகைஇட்ட

சேலைஎன்றாள் ஓடித் திரும்புகிறேன் நில்லுமென்று
வாலிபப்பெண் மேலென் மனங்கிடக்கக்—காலிற்

கடுமையுள ஓட்டமெலாம் காட்டினேன் என்பின்
குடுமியிலே தட்டக் குதிக்கால்—விடுதியிற்போய்

மீளுமுன்னம் மங்கையிட்ட வேற்றுடைமை யைக்கழற்றிப்
பீளை தள்ளும் கண்ணி பிழைகேடி—ஆளுடனே ௬௬௫

போனாள் மதுரைக்குப் போய்த்துகிலை நானெடுத்து
மானாளைத் தேடி வரும்வேளை—தேனனையாள் ௬௬௬

---

௬௫௬. பாந்தினேன்: பதுங்கினேன். ஏன்? முன்னே புத்திசொன்ன ஞானியையன் கண்ணில் படாமல் இருப்பதற்காகத் தான்.

௬௬௦. தூக்கிட்ட: தொங்க விட்ட. தோசைச் சுமை: பெயர்பெற்ற அழகர் கோவில் தோசை மூட்டை. கைவாளப்பை: வெற்றிலைப்பை.

௬௬௨. அரை நாழிகைக் கப்பால்: அரைநாழிகை நேரம் நடந்தபிறகு. குறுகி: குறுக்கிட்டு. வரை: மலை.

௬௬௫. மீளுமுன்னம்: திரும்புவதற்கு முன்னே. வெற்றுடைமை: வெறும் பித்தளை நகை. பீளை: கண் அசடு. பிழைகேடி: தவறானவள்; கேடுகாரியும் கூட.

௬௬௬. துகில்: சேலை. வரும் வேளை: வருஞ் சமயம்.

ஊரின் முருங்கை உருவியகோல் போல்நின்ருள்
மாரியெனக் கண்ணீர் வழிந்தோடக்—காரிகையே! சூசூஎ

என்என்றேன் விம்மிவிம்மி ஏக்கம்போல் நாக்குழறி
முன்னின்று மெள்ள மொழியலுற்ருள்—அன்னே

வருவார்நம் ஐயர் வழியிற் பறியார்
திருநாட் சனத்துடனே செல்வோம்—அரிவையே!

வாஎன்ருள் விட்டுவர மாட்டேன்நான் நீபயந்தாற்
போஎன்றேன் கோபமாய்ப் போயினுள்-கூஎன்ருற் சூஎ௦

கேள்வியுண்டோ வந்தான் கிழவன் ஒருவன்ஐயோ
போழ்வாய் நரைத்ததலைப் பூண்கட்டு—நீளத்

தடிக்கொம்புக் காரன் தனிவழியில் என்னே
அடித்துப் பறித்தான் அகன்ருன்—திடுக்கிட்டேன்

என்ருளைத் தேற்றிஅதற்கு எண்ணமேன்உன்அதிர்ஷ்டம்
ஒன்றுமேல் லட்சம் உடைமையாம்—நின்று

வருந்தாதே என்று மதுரைக்கு வந்து
திருந்திழையாள் வீட்டிலே சென்றேன்—மருந்துருட்டி

சூசூஎ. ஊரின் முருங்கை உருவிய கோல் போல் நின்ருள்: ஊராருக்கெல்லாம் பொதுவான இலை முழுதும் உருவப்பெற்ற முருங்கைக் குச்சிபோல ஒரு நகையும் இல்லாமல் நின்ருள். மாரியென: மழை நீர் போல.

சூசூஅ. என்: என்ன நடந்தது.

சூசூகூ. விட்டு: அவரை விட்டு.

சூஎங. அதற்கு எண்ண மேன்: அதற்காக ஏன் யோஜிக்கிருய். உன் அதிர்ஷ்டம்: உன் அதிர்ஷ்டத்தாலேயே இது நடந்தது. லட்சம் உடைமையாம்: ஏராளமான நகைகள் உனக்கு வரும்.

சூஎச. மருந்து உருட்டி: மருந்து உருட்டும் தொழிலுடைய தாய்க்கிழவி.

அங்கேவந் தாள்மகளை ஆவலாய்ப் பார்த்துடைமை
எங்கேஎன் ருள்பறிபோச் சென்றுரைத்தாள்—செங்கை

### கிழவி பொய்ப் புலம்பல்

நெரித்தாள் பதறி நெரித்தகையை விட்டுப்
பிரித்தாள் வயிற்றைப் பிசைந்தாள்—ஒருத்தருமில்

லாத இடத்துடைமைக் காசையாய் உன்னுயிரைச்
சேதப்படுத்திலென்ன செய்குவேன்?—பேதை

மகளே எனக்கதறி வாய்விட் டழுது
வெகுவாய்ப் பரிதவித்து விம்மி—நகைகளெல்லாம்

போச்சுதே கோவிலுக்குப் போக வரத்தடையொன்று
ஆச்சுதே ஊரும் அறிந்ததே—ஏச்சொன்று ௱௭௯

வந்ததே பண்ணி மறித்தும்இடக் காசுபணம்
சிந்துதோ கண்டேன்உன் தேட்டைநான்—வந்தடித்துக்

கள்ளர் பறித்தநகை கைக்குவரு மோஉடைமை
உள்ளதெல்லாம் ரத்த உடைமையே—அள்ளிஅள்ளி

எண்ணிஇட்ட செம்பொன் இருநூறு நான்கொடுத்துப
பண்ணிஇட்ட கொப்பும் பறிபோச்சோ!—புண்ணியவான்
திக்கடைய வெற்றிகொண்ட சிந்தமகூ ளேந்த்ரனிட்ட
கைக்கடகம் போலும்இனிக் காண்பேனே!—விக்ரமகோ

---

௱௮௦. பண்ணி மறித்தும் இட: திரும்பச் செய்து போட. காசு பணம் சிந்துதோ: பணம் காசு கிடந்து இரையுதா. கண்டேன் உன் தேட்டை நான்: உன் சம்பாத்தியம் எனக்குத் தெரியுமே.

௱௮௧. ரத்த உடைமையே: ரத்தம் சிந்திச் சேர்த்த பொருள்கள் அல்லவா.

௱௮௩. திக்கு அடைய: திசை முழுதும். சிந்தம கூளேந்திரன்: கூளப்ப நாயக்கனின் தந்தை.

தண்டசர பாணிதுரைச் சாமரா யன்கொடுத்த
கண்டசரம் ஏன்இவட்குக் காட்டினேன்!—அண்டலரை
வெட்டியவாள் வீரன் விருபாட்சி யான்கொடுத்த
ஒட்டியா ணம்போல உண்டாமோ!—சிட்டர்புகழ் ௧௮௫
ஆணிக் கனகநிதி அப்புரா யன்கொடுத்த
மாணிக்க மாலையைப்போல் வாய்க்குமோ!—வாணர்புகழ்
அம்மைரா யன்கொடுத்த ஆணிமுத்துத் தாழ்வடத்தைக்
கொம்மைமுலை யாட்கேன் கொடுத்தேனன்!—நம்முடைய
வல்லக்கொண் டையனருள் வச்சிரக் கணையாழிக்
கல்லுக் கொருவர்விலை காண்பாரோ!—வல்லிசெய்த
கின்னரிப்பாட் டுக்குக் கெடிக்காமை யன்கொடுத்த
பொன்னரைஞாண் போற்கிடைக்கப் போகுதோ!—
மன்னர்புகழ்
கச்சுமுலை யாளுக்குக் காளிங்கன் முன்கொடுத்த
பொற்சிமிக்கி போற்கிடைக்கப் போகுதோ!—
குச்சிலியக் ௧௯௦

---

௧௮௪. அண்டலர்: தன்னை அடையாதவர்.

௧௮௫. சிட்டர்: மேலோர்.

௧௮௬. ஆணிக் கனகநிதி: மாற்றுயர்ந்த பொற் குவியல். மாணிக்கமாலை: சிகப்பு மணியாலாய சரம். வாணர்: கவி வாணர்.

௧௮௭. கொம்மை: இளமை, வட்டம், திரட்சி முதலிய எல்லாப் பொருளிலும் வரும் சொல்.

௧௮௮. வச்ரக் கணையாழிக் கல்: பெரிய ஒற்றை வைரமோதிரம். ஒருவர் விலை காண்பாரோ: யாராவது விலை மதித்து விடுவார்களா?

௧௮௯. கின்னரிப்பாட்டு: வீணையோடுகூடியபாட்டு. கெடிக்காமையன்: ஒருவன் பெயர்.

௧௯௦. சிமிக்கி: ஒரு நகை. குச்சிலியம்:கூர்ஜரநாடு.

கெங்காசி ராவளித்த கெம்பிழைத்த மோதிரம்போல்
இங்கார் கொடுப்பார்சொல் ஏந்திழையே!—மங்கைபுரி
நாட்டியத்தைக் கண்டுமெச்சி நத்தத்து லிங்கேந்த்ரன்
போட்டகொலுசு எண்ணூறு பொன்பெறுமே!—
வாட்டமில்லாக்

கோக னகவதனன் கோபால ராயனருள்
மோகனப்பொன் மாலேமுற்றும் மோகனமே!—போகத்

திருமலே கண்டமன்னன் தந்தருள்சிந் தாக்கை
இருமுலேயாட் கேன்கழுத்தில் இட்டேன்—கருணேநிதி

பூசாரி ராயனிட்ட பொற்சவளி போலவும்ஓர்
ஆசாரி பண்ண அறிவானே!—தேசமெச்சும் கூகூரு

போடிமகி பன்கொடுத்த பொற்சுட்டி கட்டிவிட்டுப்
போடிஎன்றேன் என்னமதி போனேனுன்!—தாடகையை

அம்பிற் பொருராம பக்ததுரை அன்றுதந்த
தும்பிப் பதக்கவிலே சொற்பமோ!—சொம்புபெறும்

நாடகத்தைக் கண்டுமெச்சி நம்முத்தை யன்அளித்த
பாடகத்தைக் கண்டாற் பசிபோமே!—நாடுபுகழ் கூகூஅ

---

கூகூக. கெம்பு: சிகப்பு. மங்கை புரி: மகள் செய்த

கூகூ௨. கோகனக வதனன்: தாமரை முகத்தான். மோகனமே: மயக்கத் தக்கதே. போகம்: இன்பம்.

கூகூச: திருமலேகண்ட மன்னன்: திருமலே நாயக்கன் மால் எழுப்பிய மன்னன். சிந்தாக்கு: அட்டிகை.

கூகூரு. சவளி: கழுத்தணி நகை.

கூகூகூ. போடிமகிபன்: போடிநாயக்கனூர் ஜமீந்தார்.

கூகூஎ. தும்பிப்பதக்கம்: யானேமுகப் பதக்கம். சொம்பு: அழகு.

கூகூஅ. பாடகம: காலில் அணியும் அணி.

தொட்டராயன்கொடுத்த சோடுவச்ர ஓலையும்பொற்
பட்டைஅரைஞாணும்விலை பண்ணுவதோ!-வெட்டுகின்ற
வாளுலவும் செங்கண் மடந்தைபொட்டுக் காறைஎந்த
ஈனாவன் வீட்டில் இருக்குதோ!—தாளவட்டப் ௭௦௦
பூணார் முலையாட்குப் போட்டவெள்ளித் தண்டைஎந்தச்
சாணான் வளவிற்போய்ச் சார்ந்ததோ!—வீணேஎன்
மானாளைக் கொள்ளைகொண்டோன் வச்ர முருகைஎந்தக்
கோனான்தன் கையிற் கொடுத்தானே!—ஆனாலும்
மூவைந்தாம் பாட்டிகண்ட மூக்குத் தளுக்கைஎன்ன
பூவென்றெங் கேளறிந்து போட்டானே!—பாவைநல்லாய்
என்னசெய்வோம் நாமினிமேல் என்றாள் கிழவியையும்
கன்னியையும் தேற்றிக் கணக்கேற்றி—அந்நேரம்

**நகை செய்து கொடுத்தல்**

ஐயா யிரம்பொன் அவல்போலப் பார்வையிட்டுக்
கையாரத் தட்டான் கடையிலிட்டுச்—செய்த ௭௦௫
உடைமைஎல்லாம் அந்த உருப்படியே இட்டு
வடிவைஎல்லாம் பார்த்து மகிழ்ந்தேன்—கொடிஇடையை
மஞ்சத்திற் கூடி மகிழ்ந்திருக்கும் போதொருநாள்
பஞ்சொத்த கூந்தலாள் பையவந்து—வஞ்சியே! ௭௦௭

---

௬௯௯. சோடு வச்ர ஓலை: இரண்டு வைரக்கம்மல்.

௭௦௦. காறை: ஓர் நகை.

௭௦௧. வளவு: வீடு; வளைவு என்னும் சொல்லின் சிதைவு.

௭௦௪. கணக்கேற்றி: கணக்கைக் கூட்டி.

௭௦௫. கையார: கை நிறைய.

௭௦௬. அந்த உருப்படியே: பழைய நகை மாதிரியே. வடிவு: அழகு.

௭௦௭. பஞ்சு ஒத்த கூந்தலாள்: பஞ்சுபோன்ற நரை மயிர்க் கிழவி. பைய: மெதுவாக.

கோயிலுக்குப் போஎன்றாள் கோடியில்லை சேலைஎல்லாம்
சாயமில்லை என்று சலிப்பாளுள்—பேயே! ௭௦அ

பிறந்தவூ ருக்குப் புடவைஏன் நம்மை
அறிந்தவரே அல்லால்மற் றூர்காண்—நறுங்குழலாய்!

பொன்னின் குடத்துக்குப் பொட்டிடலேன் போஎன்றாள்
அந்நேரம் மாதை அழைத்துப்போய்-நன்னிசெட்டி ௭௧௦

**ஆடை வாங்கிக் கொடுத்தல்**

கட்டுவர்க்கச் சேலைக் கடையில் இடைக்கிசைந்த
பட்டுவர்க்கம் பார்த்துப் பளபளப்பாம்—மட்டுவர்க்கப்

பாவாடை இட்டமொழிப் பாவைக்குப் பொன்ரவிக்கை
பாவாடை வர்க்கம் பதினாறு—மேவி இரு

செப்புவர்ணப் பூமுலைக்குச் செம்பருத்திப் பூநிறத்துக்
கொப்புவர்ண மாத்தீர்ந்த கோப்புவர்ணம்—இப்புவியில்

ஆதிவண்ணம் போலும் அழகுடையா ளுக்கிசைந்த
வீதிவண்ணச் சேலைஒன்று விந்தையாம்—வாதுமத

பாணத் தார்க்கூந்தற் பவளவாய்ப் பைந்தொடிக்கு
வாணத்தார்ச் சேலை வகைமூன்று—வேணுமணி ௭௧௫

முத்துவண்ண மூரல்நல்லாள் மூலைக்குள் வைத்துடுக்க
முத்துவண்ணச் சேலையிலே மூன்றுவகை—வைத்ததிருச்

---

௭௧௦. நன்னிசெட்டி, ஒருவன் பெயர்.

௭௧௧. வர்க்கம்: வகை. மட்டு: தேன்.

௭௧௨. பாவாடை: பாட்டு மணம்.

௭௧௫. தார்க் கூந்தல்: மாலையணிந்த குழல். வேணு மணி: மூங்கில் ஈன்ற முத்து.

௭௧௬. மூரல்: பற்கள்.

சூரணவர் ணத்திலகு சுட்டிநுத லாட்கிசைந்த
நாரணவர் ணச்சேலை நாலைந்து—போரிற் எகஎ
படைமுறிச்சுக் குத்தியகட் பாவையாள் கட்ட
உடைமுறிச்சுக் குத்தியிலே ஒன்று—தொடையல்
சொருகு மணிக்குழலாள் சோடினையாக் கட்ட
அருகுமணிச் சேலையிலே அஞ்சு—பிரிவுகொண்டு
செல்லாச்சேலைப்பொருங்கட் சேயிழையாள் கட்டநல்ல
சல்லாச்சேலைத்தரமாய்த் தானிரண்டு—
மெல்லமெல்ல எஉ௦
வாள்எழுத்தோள் ஆடவரை மாலழுத்து வாள்உடுக்க
ஆள்எழுத்துச் சேலையிலே ஆறேழு—நீள்எழில்சேர்
சுந்தரத்தோள் மங்கைக்குத் தொட்டிழுத்துக் கட்டநல்ல
சந்திரகாந் தக்கச்சுத் தானைந்து—அந்தரத்தில்
இந்திரகா விற்குலவு ரம்பையனை யாட்கிசையச்
சந்திரகா விச்சேலை தானிரண்டு—சிந்துமழை
மாரிக் கொடிமின் மருங்கிற் கிணங்கியகஸ்
தூரிக் கொடிச்சேலை சோடிரண்டு—காரிகைக்குக்
காங்குசரி கைச்சேலை கம்பா வரித்துகில்பட்
டாங்குகம்பிச் சேலை அரைவர்ணம்—தாங்குசிலம்பு எஉ௫

---

எகஎ. சுட்டி நுதல்: சுட்டியென்னும் நகையணிந்த நெற்றி.

எகஅ. தொடையல்: மாலை.

எஉ௦. செல்லா: சென்று. சேலைப் பொருங்கண்: மீனோடு போர் செய்யுங் கண்.

எஉக. வாள்: ஒளி. எழுத்தோள்: தூண் போன்ற தோள். மால்: மயக்கம்.

எஉஉ. கச்சு: ரவிக்கை. அந்தரம்: விண்ணுலகம்.

எஉ௩. இந்திரகா: தேவநாட்டுப் பொழில்.

எஉ௫. பட்டாங்கு: சேலை.

எச்சரிக்கை என்னும் இடைக்குச் சரிதென்றற்
குச்சரிகை வர்க்கமெல்லாம் கொண்டுந்தேன்—
உச்சிதமாத் எஉகூ

தாய்க்கிழவி கேட்டாள் தனக்கிரண்டு சேலைஅந்தப்
பேய்க்குதவா விட்டாற் பிழைப்பேது?—பாக்களந்த

**பலவகைக் கடன் தீர்த்தல்**

வன்னிஎன்றும் பாலளந்த மாரியென்றும் நெய்யளந்த
சின்னிஎன்றும் நெல்லளந்த செல்லிஎன்றும்-எந்நேரம்

வைவதுவும் போவதுவும் வாசலிலே நின்றலம்பல்
செய்வதுவும் போலிட்டாள் தித்திரிப்பு—கைமேலா

அந்தக் கடன்காரர்க் கென்றேநான் ஐம்பதுபொன்
இந்தக் கடன்காரிக் கீந்துவிட்டேன்—அந்திசந்தி எஙo

தாய்குடிக்கப் பெண்குடிக்கச் சாராயம் ஊற்றிவெறிப்
பேய்பிடிக்க விட்டநெட்டைப் பிச்சிவந்து—ஞாயமோ

தப்பறைக் காரிஎன்று சண்டைக்கு வாய்திறந்தாள்
முப்பதுபொன் போட்டுவாய் மூடிவிட்டேன்—செப்புமுலை

**சாமி பூஜைக்குக் கொடுத்தல்**

மங்கை வயிற்றை வலிக்குதென்று மார்க்கமிட்டாள்
அங்கைதொட்டக் காலதிகம் ஆகுதென்றாள்—எங்கள்

---

எஉரு, எஉசு. "சிலம்பு எச்சரிக்கை என்னும் இடை" என்பது "உபயதனம் அசையில் ஒடியும் இடை நடையை ஒழியும் ஒழியும் என ஒண் சிலம்பு. அபயம் அபயம் என அலற நடையயிலும் அரிவையீர் கடைகள் திறமினோ" என்ற கலிங்கத்துப் பரணிப் பாட்டோடு ஒக்கும்.

எஉகூ. அலம்பல்: கலகம். தித்திரிப்பு: கபடம்.

எஙஉ. தப்பறை: சூது.

குலதெய்வம் பண்ணு திந்தக் கோட்டாலை என்றாள்
கலைகுலைந்து சோர்வடையும் கண்ணாள்—சிலைநுதலாய்!
தெய்வக் குறைக்கென்ன செய்யவேணும்சொலென்றேன்
கையில் அரிவாளும் கட்டளையாச்—செய்த ௭௫௫
உருவேணும் பொற்குச்சு உறுமாலை வேணும்
இருகாலுக் குச்சிலம்பும் ஈனாப்—புருவைகளும்
செஞ்சேவலும்வேணும் சேவிக்கும் பம்பைக்கோர்
அஞ்சாறு பொன்வேணும் ஆடிவரக்—குஞ்சமிட்டுப்
பூங்கப் பரையெடுத்துப் பூசையிட வேணுமென்றாள்
ஆங்கப் படிக்கிந்தேன் ஐம்பதுபொன்—தாங்கருங்கண்

**தன்னிடம் மிச்சமிருந்ததைக் கொடுத்து வைத்தல்**

வாளை தாவுங்காது மாதுநல்லாய் நான்கேட்ட
வேளை தா என்றவள் தன் வீட்டிலே—ஆழாக்கு
முத்துவைத்து வைத்தேன் முடிப்பாஓர் ஆயிரபொன்
வைத்துவைத்தேன் பின்னுமொரு மாணிக்கம்—
சித்திரக்கால் ௭௬௦

---

௭௫௪. கலை: ஆடை.

௭௫௫. உரு: வடிவம். பொற்குச்சு உறுமாலை: தங்கக் குஞ்சம் கட்டிய தலைப்பாகை. ஈனாப் புருவை: குட்டிபோடாத ஆடு.

௭௫௭. பம்பை: பறைக்கொட்டு. குஞ்சம்: பூங்கொத்து.

௭௫௮. கப்பரை: பிச்சைப்பாத்திரம். தாங்க அருங்கண்: பாயப் பெற்றோரால் பொறுக்க முடியாத நிலையை உண்டாக்கும் கண்.

௭௫௯. வாளை: மீன். வேளை: சமயம். தா: தருவாயாக.

௭௬௦. மாணிக்கம்: சிகப்பு.

**பலவகையாகப் பணம் பிடுங்கல்**

கட்டிலென்றும் கட்டிலின்மேற் கட்டிசக லாத்தென்றும்
வட்டிலென்றும் சிப்பு வகைஎன்றும்—கட்டுமட்டாம்

குத்துவிளக் கென்றும் குடப்பால் எருமைஎன்றும்
பத்தணையேர்என்றும்பசுக்களென்றும்-மெத்தைஎன்றும்

மச்சுவீ டென்றும் மணிக்குதிர்கள் என்றுமங்கை
மெச்சிவிளை யாடிநிற்க மேடைஎன்றும்—கச்சிறுக்குங்

கொங்கைச் சிமிழ்மாது கூடப் பிறந்தசின்னத்
தங்கச்சி கால்களுக்குத் தண்டைஎன்றும்—இங்கிதமாய்

ஆடவிட்ட நட்டுவனார்க்கு அங்கிஎன்றும் சங்கீதம்
பாடவிட்ட பாடகற்குப் பாகைஎன்றும்—சேடியர்க்குக்

கம்பிகுறிச் சேலைஎன்றும் காதோலை என்றும்வெள்ளித்
தம்பிக்கை என்றும் தவலையென்றும்—செம்பென்றும்

தந்தச் சிமிழிற் சவாதென்றும் ஆண்டியப்பன்
கந்தபொடி என்றும் கதம்பமென்றும்—சந்தனங்கள்

என்றும்ஆ டிக்கழிவுக் கேற்றதென்றும் தைப்பொங்கற்கு
என்றும் சிவராத் திரிக்கென்றும்—நின்று எசஅ

---

எசக. சகலாத்: ஒருவகைத் துணி. வட்டில்; உண் கலம்.

எசஉ. குடப்பால் எருமை: குடம்பால் கறக்கும் மேதி.

எசங. குதிர்: நெல்கொட்டி வைக்கும் பெரியபாத் திரம். மேடை: செய் குன்று.

எசரு. அங்கி: சட்டை. பாகை: தலைப்பாகை.

எசகூ. தம்பிக்கை: சிறு செம்பு.

எசஎ. ஆண்டியப்பன் கந்தபொடி, அக்காலத்தில் மிகவும் பேர்பெற்றிருந்த ஒரு பொடி போலும்.

தலை தடவி மூளை தனை உறுஞ்சு வார்போல்
பலவிதமாய் ஏய்ச்சுப் பசப்பிக்—கலவைஅணிந்து ௭௪௬

ஓங்கும் இளமுலையாள் ஊனிருக்க வேஉயிரை
வாங்குவது போற்பொருளை வாங்கிவிட்டாள்—
சோங்கிலிட்டுக் ௭௫௦

கட்டியசெம் பொன்னைக் கடலிற் கவிழ்த்ததுபோல்
ஓட்டொழியத் தோற்றுவிட்டேன் உள்ளதெல்லாம்-இட்ட
மருந்தால் இருளும் மருளுங்கொண் டாற்போல்
இருந்தேன் கொடுக்கவகை இன்றி—உரிந்து

**மீதிவைய விற்று வெறுங்கையன் ஆதல்**

கலைவிற்றேன் காதிற் கடுக்கனையும் விற்றேன்
மெலிவுற்றேன் தாய்க்கிழவி வீட்டுச்—செலவுக்குத்

தத்திரமாய்க் கேட்டாள் தலைகவிழ்ந்து நான்துரும்பு
குத்துவதைக் கண்டாள் குறிப்பறிந்தாள்-எத்திஎன்னைத்
தாரைவிட்ட வேல்விழியாள் தாய்க்கிழவி வார்த்தை
யைக்கேட்டு
ஊரைவிட்டுப் போக்க உபாயமிட்டாள்—சேரஎன்றும்

---

௭௪௬. ஏச்சுப் பசப்பி: தழுக்குப் பண்ணி ஏமாற்றி.

௭௫௦. ஊன் இருக்க உயிரை வாங்குவது போல்; உடம்பு இருந்தபடி இருக்க உயிரைக் கவர்வது போல. சோங்கு: கப்பல்.

௭௫௧. ஒட்டு ஒழிய: கொஞ்சமும் இல்லாமல்.

௭௫௨. இருள்: அறியாமை. மருள்: மயக்கம்.

௭௫௩. கலை: வேட்டி.

௭௫௪. தத்திரம்: எதுகை நோக்கி தந்திரம தத்திரமாயிற்று. துரும்பு குத்துவது, கீழ் நோக்கி எதையாயாவது கிளறிக்கொண்டிருப்பது.

௭௫௫. தாரைவிட்டவேல்: ஒழுங்காக வடித்துச் செய்யப்பெற்ற வேல். அவ்வேல் போலும் விழியாள், மதனபிஷேகம். உபாயமிட்டாள்: தந்திரம் செய்தாள்.

### துரத்த வழி தேடல்

மின்புறங்காட் டும்சயனம் மேற்படுத்தால் என்புறத்தில்
பின்புறங்காட் டிப்படுப்பாள் பேசாமல்—அன்புடனான்

செய்யா உபசாரம் சேய்யப்போ னாலும்முழுங்
கையால் இடிப்பாள் கடுகடுப்பாய்—பையவே

அன்னைவந்து தன்னை அழைக்கச் செறுமுமந்தச்
சன்னையறிந் தென்னைவிட்டுத் தானாகி—பொன்முடிப்பு

வாங்குவதும் கூடுவதும் வந்தெனரு கிற்படுத்துத்
தூங்குவது மாகத் தொழில் எடுத்தாள்—பாங்கியரிற்

### மதனாபிஷேகம் தன்னை ஏசுதல்

கோப்புடைய மாயக் குருவியைவிட் டுப்பழைய
மாப்பிளைமார் தம்மை வரச்சொல்லி-"பேய்ப்படுவாய் ௭௬௦

அன்னியர்கள் வந்தால் அருகிற்போய் நானிருந்தால்
சன்னைதெரி யாதோ சவுங்கலை!—என்னடா!

போடா வெளியிற் புதுமண்ட பத்திருந்து
வாடா!" எனச்சொலுவாள் மட்டுமிஞ்சி—ஓடியங்கள்

சொல்லத் தொடுத்தாள் துரத்திடினும் பூட்டியசெக்
கெல்லைவிட்டுப் போகா எருதானேன்—மெல்ல ௭௬௫

---

௭௫௬. மின் புறங்காட்டும் சயனம்: மின்னல் பயந்து முதுகுகாட்டி ஓடத்தக்க ஒளிபெற்ற படுக்கை.

௭௫௮. சன்னை: ஜாடை.

௭௬௧. சன்னை: குறிப்பு.

௭௬௨. புது மண்டபத்திருந்து வாடா: கொஞ்சம் புதுமண்டபத்திலே போய் உட்கார்ந்திருந்து விட்டு வாடா. மட்டு மிஞ்சி: அளவு கடந்து. ஓடியங்கள்: கேலிப் பேச்சு.

**தாய் மகளை ஏசல்**

மகளை அழைத்து மருட்டுருட்டி சொல்வாள்
" தகல்பாசிப் பார்ப்பான் சதமோ—முகமாயம் ௭௬௪

என்னசெய்தான் நீஅவனுக் கேற்ற உடன்படிக்கை
என்னசொன்ஞய் பார்த்தவருக் கேற்குமோ—மின்னே

கொடுக்குமட்டும் வாங்கிக் கொடாதிருந்தால் விட்டு
முடுக்கலல்லோ வேசி முறைமை—எடுப்பார்கைப்

பிள்ளையோ நீயுமென்ன பேய்ப்பிள்ளாய் ! மாப்பிளைமார்
கள்ளரைப்போ லேதிரியக் காரணமேன்—மெள்ளமெள்ள

ஓடங் கடக்கவிட்டால் ஓடக்கா ரன்தலையிற்
போடுவது சொட்டென்பார் பூதலத்தோர்—வாடீ

சிலைநுதலாய் ! நானுனக்குச் சேர்த்தமருந் துக்கு
மலையும் நகர்ந்து வருமே—முலைவயிற்றைத்

தொட்டதோ கன்னம் சுரித்ததோ கூந்தல்நரை
இட்டதோ மேனி இளைத்ததோ—தொட்டவனை ௭௭௦

விட்டுப் பிரிந்தக்கால் வேறுபிழைப் பில்லையோ
முட்டிவாங் கிப்பயலோ மோப்பாச்சு—கெட்டிகெட்டி

ஊரைவிடப் பற்று "என்ருள் ஊதாரி வீட்டிறப்புக்
கூரையில் ஒன்றிக்கேட்டுக் கொண்டேஞன்—மேரைதப்பி

---

௭௬௪. மருட்டி உருட்டி, தாய்க் கிழவி. தகல்பாசி: புரட்டன்.

௭௬௫. உடன்படிக்கை: ஒப்பந்தம்.

௭௬௬. முடுக்கலல்லோ: விரட்டுதல் அல்லவா.

௭௬௮. சொட்டு: குட்டு.

௭௭௨. பற்று: துரத்தியடி. ஊதாரி: வாயாடி. இறப்பு: தாழ்வாரம். மேரை: மேன்மை.

**சண்டை போடல்**

நன்றிமறந் தாரை நடுக்கேட்கு மோதெய்வம்
என்றுசொல்லி வந்தேன் எதிரேநான்—என்றவுடன்

ஆங்காரம் இட்டாள்என் ஆஸ்தியெலாம் தன்கையால்
வாங்காமல் வாங்கிவிட்ட மாமியார்—ஆங்குவரும்

பேய்மடயர் பொன்னும் பெருங்குளத்து நீரைத்தன்
வாய்மடையா லேஉறிஞ்சும் மாமியார்—ஈயாரைப் எஎ௫

புல்வாயைக் கண்ட புலிபோலப் போய்ப்பிடிக்கும்
வல்வாய்க் கிழநெட்டை மாமியார்—பல்லுவிழும்

கோப்புளதன் மூப்பைக்கொடுத்திளமை வாங்கமொட்டை
மாப்பிளைமா ரைத்தேடும் மாமியார்—கேப்பைக்கும்

பிஞ்சுமாங் காய்க்கும் பிளவுக்கும் வெற்றிலைக்கும்
மஞ்சளுக்கும் சஞ்சரிக்கும் மாமியார்—மஞ்சத்தே

தேற்றித் தனைமுன்பு சேர்ந்தபணக் காரர்முறை
மாற்றிமக ளுக்கிணக்கும் மாமியார்—போற்றிவைத்த

காசழியா மல்திரியும் காவிப்பற் காரரைத்தன்
வாசல் மிதிக்கவொட்டா மாமியார்-ஆசைகொண்டு எஅ௦

சேயிழையைச் சேர்ந்தவரைத் தேற்றிக் கழுத்தறுக்கும்
ஆயுதம்போ லுங்கருநாக் கத்தையார்—மேயஒரு எஅக

எஎச. ஆங்காரம்: கடுஞ்சினம்.

எஎ௫. பேய்மடயர்: பேய்பிடித்தது போன்ற அறியாமை நிரம்பியவர்.

எஎசு. புல்வாய்: மான். வல்வாய்: வலியவாய்.

எஎஅ. பிளவு: பாக்கு. சஞ்சரித்தல்: முறைதவறி நடத்தல்.

எஎகூ. இணக்கும்: பொருத்துகின்ற.

செம்பிலே தண்ணீரும் சீலைப்பா யுங்கொடுபோய்
அம்பலத்தி லேபடுக்கும் அத்தையார்—வெம்புலிபோல்

தாட்டிகரை யும்பிடித்துத் "தாலதத்திம் மா" என்று
ஆட்டிப் பணம்பறிக்கும் அத்தையார்—மோட்டுப்

பொலிப்பாட்டைப் போலே புறப்பட்டாள் அன்று
பொலிப்பாட்டுப் பாடப் புகுந்தாள்—வலுத்தவர்போல்

"என்னசொன்னாய் பார்ப்பான்நீ இன்னம்ஒருக் காற்
சொல்லு
கன்னத்தி லேஅறைவார்க் காணேனே—சின்னம் எஅ௫

சிறுக்கி உனக்குநன்றாச் சிக்கினே னோநான்
கிறுக்குப் பிடித்த கிழவி—உறுக்கி

வசமாக்க வல்லோ வகைசெய்தாய் வைப்பு
நிசமாச்சோ குல்லாலி நீயோ—பசிவேளைக்கு

ஏது கொடுத்தாய்நீ இத்தனைகா லந்திரிந்தாய்
போதுமினிப் போஎன்றாற் போகாயோ—மாதுனக்குத்

தாய்மாமன் பிள்ளையோ தாலிகட்டித் தந்தேனே
நீமாத் திரமகட்கு நேசமோ—மாமிகிட்டத்

தந்தபணம் சேதமுண்டோ சாண்வயிற்றுப் பிச்சைக்கு
வந்தவனும் பெண்ணுக்கு மாப்பிளையோ—சொந்தமாக்

---

எஅ௩. தாட்டிகர்: பலம்வாய்ந்தவர். தாலக்க திம்மா: ஆட்டக் குறிப்பு. மோடு: உயரம்.

எஅ௪. பொலிப்பு ஆடு: மாப்பிளைக்கடா. பொலிப் பாட்டு: வசைப்பாட்டு.

எஅ௬. உறுக்கி: அதட்டி.

எஅ௯. நீமாத்திரம்: நீமட்டுந்தானா.

கிட்டக் கிடக்கக் கிடைப்பாளோ தேவடியாள்
இட்டொருவ னைச்சேர்வ தெத்தனைநாள்—குட்டுணிஉன்

வாணனை வாங்கிடுவேன் வாயைமூ டுன்வயிறு
சாணே முழமோ சவுங்கலே—நாணமற்ற

மூடாஇ தேது முழக்கம் வெளியிலே
வாடா ஒருகால் மதிகேடா—நாடலாம்''

என்று புடவை இறுக்கினாள் நானவளைத்
தின்றுவிடத் தக்க சினமானேன்—''நன்றியற்ற

பாவிநீ கேளாய் பழங்கதைசெந் தீஇடைப்பட்டு
ஆவிவிடும் பாம்பைஎடுத் தாதரிக்கத்—தாவி எகூரு

நளன்கரத்திற் றீண்டியது நன்மைசெய்யக் கர்மம்
விளைந்தகதை என்னளவும் மெய்யே—உளம்பதறிப்

பேசலா மோநீ புறம்விடலா மோதுடுக்காய்
ஏசலா மோகொடுத்த தில்லையோ—ராசியமேன்

செட்டிகளுக் கெல்லாம் தெரியாதோ நான்கொடுத்த
கட்டி வராகன் கணக்குண்டோ—தட்டார்

அறியாரோ ஊரார் அறியாரோ உன்னெஞ்சு
அறியாதோ தோஷம் அலவோ—மறுபடிஉன் எகூகூ

எகூக. குட்டுணி: மற்றவரால் குட்டுப்படுபவன்.

எகூஉ. வாணள்: உயிர்.

எகூரு. நாடலாம்: பார்க்கலாம் ஒரு கை.

எகூசு. என் அளவும் மெய்யே: என் வரையும் உண்மையே.

எகூஎ. புறம் விடலாமோ? தள்ளலாமா. கொடுத்த தில்லையோ: நான் தந்தது ஒன்றுமே இல்லையா. ராகிய மேன்: ரகசியம் என்ன.

எகூஅ. செட்டிகள்: வியாபாரிகள்.

கிட்டவைத்த என்முடிப்போ கேளாய் கிழப்பிணமே
எட்டுத் தலைமுறைமட் டிங்குண்டே—கெட்டபுத்திக்
கந்தலே" என்றேன் "கவட்டில் நுழையடா
சந்தையின்மாங் கொட்டாய் சரசம்போல்—முந்துன்
வளவிற் சிலஉடைமை வைத்துவைத்தேன் என்றாய்
களவாணி யப்பயலே கண்ணைக்—கிளறட்டோ
பின்ஆசை வேண்டாம் புறப்பட்டுப் போ"என்றாள்
அந்நேரம் ஓர்வடுகன் ஆயுதமும்—கன்னப்
பரிசையும்தன் காலிலே பாப்பாசும் போட்டுப்
பெரியபட்டை நாமமும்தன் பின்னே—ஒருவனுமாய்க்
கக்கத்தில் வாளிடுக்கிக் காச்சுமூச் சென்றுவந்தான்
பக்கத்தி லேசலுகை பாராட்டி—வெட்கமறந்து
ஆடாத கூத்தெல்லாம் ஆடியே அம்பலத்தில்
வாடாஎன் றென்னை வறட்டுத்தோய்ப்—பாடி
மடியைப் பிடித்தாள் மயிரைப் பிடித்தேன்
தொடையிலடி பட்டதவள் தோற்பை—மடிநழுவித்
தொங்கியகை வாளமென்று தூக்கிச் சுருட்டியெடுத்து
அங்கையினுற் கக்கத் தடக்கினேன்—மங்கைஎன்னைத்

அ0க. சரசம்போல்: விளையாட்டுப் போல.

அ0உ. வளவு: வீடு. கண்ணைக் கிளறட்டோ: கண்ணைத் தோண்டி எடுத்து விடவா.

அ0ங. வடுகன்: தெலுங்கன்:

அ0ச. பாப்பாசு: செருப்பு.

அ0ரு. காச்சு மூச்சு, பேச்சொலி.

அ0சு. அம்பலம்: சபை.

அ0அ. கைவாளம் என்று: வெற்றிலைப்பை என நினைத்து.

தள்ளினாள் அஞ்சாறு தாக்கினேன் பொக்கைவாய்க்
குள்ளி பிடித்தாள் குடுமியை—உள்ளூரார் அ0கூ

**பஞ்சாயத்துச் சபை புகல்**

கூடி விலக்கிவிட்டார் கூகூஎன் றம்பலத்தில்
ஓடினாள் நானும் உடன்சென்றேன்—தாடகைபோற் அகo

போயப் பொழுதே புதுமண் டபத்திலந்தக்
கோயிற் தலத்தாரைக் கூட்டமிட்டாள்—வாய்விட்டு

அழுதாள் மகளை அருகே நிறுத்தித்
தொழுதாள் மடைமாறி சொல்வாள்—பழியஞ்சிப்

**கிழவி அறிவிப்பு**

பட்டரே! தேவேந்த்ர பட்டரே! மீனாட்சி
பட்டரே! காமாட்சி பட்டரே—இட்டநர

சிங்கையரே! நாராயண தீட்சதரே! செவ்வந்தி
லிங்கையரே! எங்கள்சொக்க லிங்கையரே! சங்கராச்

சாரியா ரே!அனந்த சாஸ்திரியா ரே!கைவிஸ்
தாரியா ரே!கோவில் ஸ்தானிகரே!—ஊருக்குள் அகடு

ஞாயம் இலையோ நடுவிலையோ பார்ப்பாரப்
பேய்பிடித்த தேளனது பெண்பிளையைக்—கோயிலுக்குள்

அஞ்சாறு மாதமாய் ஆடிப்பா டித்திரியச்
சஞ்சாரம் கண்டீரோ சர்ப்பனையாய்—பஞ்சமா

பாவிஇந்தப் பார்ப்பான் பணயம் கொடுத்தொருநாள்
மேவி இருந்தான் விடிந்தவுடன்-போவானென்று அகஅ

---

அ0கூ. தாக்கினேன்: கொடுத்தேன்.

அகo. அம்பலம்: வழக்குரை மன்றம்.

அகஉ. மடைமாறி: புரட்டுக்காரி.

அகஎ. சஞ்சாரம்: நடமாட்டம். சர்ப்பனை: வஞ்சகம். பஞ்சமா: ஐம்பெரும்.

எண்ணினேன் என்னமருந் திட்டானே என்னவகை
பண்ணினனோமத நூல் பாடமோ—பெண்அணங்கை
வைப்பென்று பேரிட்டான் வட்டிலிற்கஞ் சிக்குமகள்
உப்பென்று கேளாது உபாயமிட்டான்—
கைப்பிடித்துக் அஉ0

கொண்டானைப் போலக் குடிலமிட்டான் ஆண்பூண்டு
கண்டாலும் பேசாமற் கட்டிவிட்டான்—ஒண்தொடிக்கு
வாடைப் பொடியிட்டான் வாய்ப்பூட் டெனக்குமிட்டான்
கோடைச் சுழித்துவைத்துக் கொள்ளையிட்டான்—
மாடாயோர்

பட்டிவைக்கி றேன்பலதொம் பைக்கூட்டாற் சம்பாநெல்
கட்டிவைக்கி றேன்பொற் கடாரங்கள்—எட்டேழு
தூங்கவைக்கி றேன்என்றான் சோற்றுக்குத்
தூங்கவைத்தான்
ஏங்கவைத்தான் அம்பலத்தில் ஏற்றிவைத்தான்—
வீங்கலிவன்

இங்குவந்த நாள்முதலா ஏதுகொடுத் தான்தனக்குக்
குங்குமச்சம் பாஅரிசி கொள்ளஎன்றும்—
பொங்கலுக்குப் அஉரு

---

அககூ. மதநூல் பாடமோ: காமக்கலையை அப்படியே உருப்போட்டவனோ.

அஉக. கொண்டானைப்போல: மணந்துகொண்டவனைப்போல். குடிலமிட்டான்: வஞ்சித்துவிட்டான்.

அஉஉ. கோடைச் சுழித்துவைத்து: ஒரு கோடு கிழித்து அதற்குள் எங்களை அடக்கி.

அஉங. பட்டி: கொட்டில் நிறைய. தொம்பைக்கூடு: நெற்குதிர். கடாரம்: கொப்பரை.

அஉச. தூங்க: தொங்க. வீங்கல்: தடியன்.

பாசிப் பயறென்றும் பாலென்றும் நெய்என்றும்
தோசைக் குளுந்தென்றும் சோமனென்றும்-பூசுவதுக்கு

ஆனசவ்வா தென்றும் அலகுபாக் கென்றும்ரச
பானவர்க்கம் என்றும் பகலிரவாய்—ஏனே

படுக்கைக்கு வாழைப் பழமென்றும் கேட்பான்
கொடுக்கும் கடன்போற் கொடுத்தேன்—மடக்கொடியாள்

பொட்டொழியக் காதிற் பொகட்டவொரு தோடொழிய
ஒட்டொழியத் தோற்றேம் உடைமைஎலாம்—பட்டிமகன்

மோகினி மந்த்ரம் முழுதுமறி வான்மதனன்
ஆகமங்கள் எல்லாம் அவதானம்—நாகரிகப்

பொட்டறிவா னும்தண்டுப் பூச்சறிவா னும்போகக்
கட்டிறிவா னும்ஒருநாள் கைவாளக்—தட்டறையிற்

சோதித்தேன் சின்னமயிர்த் தோலும்நரிக் கொம்பும்வி
பூதிக் கிழியும் பொடியுமதில்—ஏதுக்கு

உருட்டிவைத்தா னேசில உண்டையும்நான் கண்டேன்
திருட்டுப் புரட்டனென்று தேர்ந்தேன்—அரைக்காசுத்

தொண்டனிவன் அம்பலத்திற் சோதிப்பார் என்றிங்கே
கொண்டு வருவானே கொண்டுவரான்—வண்டனிவன்

மானேர் விழியணங்கு மாதவிடாய் ஆனக்கால்
தானே விடவருவான் தண்ணீரை—மானுடமோ

---

௮௨௭. அலகுபாக்கு: இலைப்பாக்கு.

௮௨௯. பொகட்ட ஒரு தோடு: போட்ட ஒருதோடு. ஒட்டொழிய: முழுதும் போகுமாறு.

௮௩௦. மதன் ஆகமங்கள் எல்லாம் அவதானம்: காமலீலை நூல்கள் அனைத்தும் தலைகீழ்ப்பாடம்.

௮௩௨. விபூதிக்கிழி: திருநீற்றுப்பை.

௮௩௫. மானுடமோ: மனிதன்தானா இவன்.

அல்லும் பகலும் அடைத்தகத வைத்திறவான்
மெல்லியலைச் சற்றும் வெளியில்விடான்-சொல்லுவதென்

பத்து விசையாம் பகலுக்கும் ராத்திரிக்கும்
பத்து விசைக்கும்என்றன் பாவைபோல்—உத்தரிக்க

ஆர்க்கு முடியுமிவன் ஆனாலும் முன்பிறப்பில்
ஊர்க்குருவி யோபெண் உடம்பிலே—தீர்க்கஒண்ணு

நோவொதுங்க விட்டானே நூறுவய துப்பயிர்க்குப்
பூவொதுங்க விட்டான் பொறுபொறென்று—பாவிமகன்

சொன்னங் கொடுப்பனென்று சொன்னதுஉண்டல்லாமல்
என்ன கொடுத்தான் இதுவரைக்கும்—என்மகட்கு ௪௨௦

மோகங் கொடுத்தான் முளையரையாப் புக்கொடுத்தான்
மேகங் கொடுத்தான் மெலியவிட்டான்—ஆகம்

சிரங்கானுள் தம்பிஇட்ட திமருந்தால் மாது
குரங்கானுள் குத்திருமல் கொண்டாள்—மருந்து

கொடுப்பவரார் புண்ணுக்குக் கூசாமற் கிட்டப்
படுப்பவரார் என்மகளைப் பாவி—கெடுத்தானே

தேட்டுவந்து சேரும் சிறுவயதிற் போக்கறுவான்
வீட்டிற் புகுந்தான் விடுதிபோல்—நாட்டமாய் ௪௨௪

---

௪௧௬. சொல்லுவதென்: என்ன சொல்ல இருக்கிறது.

௪௧௭. பத்துவிசை: பத்துத்தரம். உத்தரித்தல்: ஈடுகொடுத்தல்.

௪௧௮. ஊர்க்குருவி, காமத்தொழில் வல்லது போலும். தீர்க்க ஒண்ணு: தீர்க்கமுடியாத.

௪௧௯. நோவு ஒதுங்க: பிணி தங்க.

௪௨௦. சொன்னம்: தனம்.

௪௨௧. ஆகம்: உடம்பு.

௪௨௪. தேட்டு: சம்பாத்தியம். போக்கறுவான்: போக இடம் அற்றவன். விடுதிபோல்: விடுதிமாடுபோல.

கூடவந்தங் கிந்தக் குடுமித் தலையைக்கண்டு
ஆடவர்கள் எல்லாம் அகன்றுவிட்டார்-தேடாமல் அசரு

நித்திரைக்குப் பொன்நூறு நித்தம் கொடுத்துவந்த
முத்திரைப்பண் டாரமோ மோடிவைத்து—மெத்தக்

கறுப்பானுன்; மாலைகட்டிக் கன்னியப்பன் முற்றும்
வெறுப்பானுன்; மெய்காவல் வேலன்—சிறுக்கிமேல்

ஆசைவைத்த வாத்தியார் ஐயர்முறை தப்பிதமாப்
பாஷைவைத்துப் போனுர் பகையானுர்—காசுபணம்

மாரி எனச்சொரிந்த மாரியப்பன் சண்டைஇட்டு
வீரிவள விற்போனுன் மீள்வானே—தேரேறப்

பொன்னுடைமை பூட்டிவிட்ட பொன்னப்பன் அந்திசந்தி
சன்னையிட்டுப் பார்த்தான் சலித்துவிட்டான்—
பின்னை அரு௦

வரத்துமில்லைத் தானும் வழக்கானேர் சேலை
தரச்சொன்னுள் இன்றைக்குச் சண்டைக்கு—
ஒருப்பட்டான்

வைதான் எனையும் மயிர்பிடித்தான் செய்யாது
செய்தான் மகளைச் செவியிலே—கையால்

அடித்தான் விலக்கு மவரைமுழங் கையால்
இடித்தான் கரத்தினுல் என்னை—இடுப்பொடியப் அருந

---

அசரு. அகன்று விட்டார்: சென்று விட்டனர்.

அசஅ. பாஷைவைத்து: வைதுவிட்டு.

அசகூ. மாரி என: மழை போல. சொரிந்த: கொட்டிய. வீரி வளவு: வீரி என்னும் வேசி வீடு. தேர் ஏற: தேரிலே ஏறி இருக்க. சுவாமி தேரில் வருங்கால் முறைத்தாசியும் தேரில் ஏறியிருப்பது மரபு.

அருக. ஒருப்பட்டான்: வந்து விட்டான்.

போட்டானங் கேமூர்ச்சை போனேன் எழுந்திருந்தேன்
கேட்டார் சிரிக்கவல்லோ கீர்த்திவைத்தான்—
ரூட்டிசெய்தது அருச

ஏதென்று நீர்கேட்டால் என்னசொல்வான் தாய்க்கிழவி
சூதென்பான் வாரிச் சொரிந்தபொருட்—சேதம் அருரு

கணக்குண்டோ என்பான களரிமெச்ச இந்தத்
துணுக்குண்ணி யோகொடுப்பான் சொர்ணம்—
பணக்கவளம்

மாந்தரிட்டுக் கட்டி வளர்த்தகடாக் கையிலே
பாய்ந்தகதை மெய்யாய்ப் பலித்ததே—ஈந்ததில்லை

தாயும் மகளும்ஒரு தாமரையில் நீரானேம்
பேயும் இரங்குமே பெண்ணென்றால்—தூயவரே

கண்டநடுப் பேசிக் கணக்குப்பார்த் தும்பொருளைத்
தெண்டித்து வாங்கிஇந்தச் சேமனைநீர்—கண்டிப்பா

மெட்டுக் கடக்க வெருட்டிடுமென் றுள்ளன்ற
சட்டித் தலைப்பேயைத் தானமர்த்திப்—பட்டன்மார் அசூ௦

நில்என்றார் உன்வழக்கை நிர்ப்பாக்கி யாநீயும்
சொல்என்றார் சொல்லத் தொடங்கினேன்—கல்லும்

**அவதானி அறிவிப்பு.**

கரையுமே மாயமாக் கள்ளிசொன்ன வார்த்தைக்கு
உரையும் எதிர்வழக்கும் உண்டோ—ஒருநாள் அசூஉ

---

அருச. மூர்ச்சை போனேன்: மயக்கம் போட்டு விழுந்து விட்டேன். ரூட்டி: அட்டூழியம்.

அருகூ. களரி: அம்பலம். துணுக்குண்ணி: அகப்பட்டதைப் பொறுக்கித் தின்பவன்.

அருக. கண்டநடு: அறிந்த நியாயம். தெண்டித்து: இவனுக்குத் தண்டனை தந்து. சேமன்: அயோக்கியன்.

அசூ௦. மெட்டு: கவுரவம்,

அசூஉ. ஒரு நாள்: ஒரு காலத்தில்,

நடந்தகதை கேளீர் நடுக்காட்டு நீலி
தொடர்ந்தாளோர் செட்டிதனைச் சூதாய்-நடந்தவன்கைப்

பத்திரத்தால் தப்பிப் பழையனூர் அம்பலத்தில்
மொய்த்திருந்த வேளாளர் முன்சென்றான்—சத்துருப்போல்

ஆலங்காட் டுப்பேய் அதோவருகு தென்மனையாள்
கோலங்காட் டிப்பகட்டிக் கொண்டென்றான்—நீலியெனும்

கள்ளி முலைப்பாலும் கண்ணீரும் கால்கழுவக்
கள்ளியொன்றைப் பிள்ளையாக் கையேந்தி—மெள்ளவந்து

நாட்டிலே கண்டதுண்டோ நல்லோரே! என்னை நடுக்
காட்டிலே விட்டார் கணவனார்—மீட்டுமவர்

கிட்டவந்தார் நான்பயந்து கெஞ்சிவந்தேன் வாளுருவி
வெட்டவந்தார் முன்னாள் விதிப்படியோ—முட்டமுட்டப்

பேயென்றார் என்னை இந்தப் பிள்ளைகள்ளிக்கொப்பென்றார்
தாயென்றார் இல்லை தமர்இல்லை—தூயவரே!

பீர்விட்ட பால்முலைக்கீழ்ப் பிள்ளையைவிட் டாலதுதான்
ஆர்கிட்டப் போமென் றறியலாம்—பாருமென அஎ௦

விட்டாள் சபையிலது மெள்ளத் தவழ்ந்துமடி
தொட்டேறச் செட்டி துணுக்கென்றான்—ஒட்டாரம்

---

அகூ௩. நடந்த கதை: நடந்த பழங் கதை.

அகூ௪. பழையனூர் அம்பலம்: பழையனூர் என்ற ஊர்ச்சபை.

அகூ௫. கோலம்: வடிவம்.

அகூ௬. கள்ளி: கள்ளிச்செடி.

அகூ௯. தாய் என்றார் இல்லை தமர் இல்லை: எனக்குத் தாயும் இல்லை; சுற்றமும் இல்லை.

அஎக. மடி: வணிகனின் மடியை. துணுக்கு: அச்சக் குறிப்பு. ஒட்டாரம்: பிடிவாதம்.

பண்ணுகிறான் செட்டிஎன்றார் பார்த்தவரெல்லாமவள்என்
கண்ணுணை நீலிஎன்றான் கால்நடுங்கி—பெண்ணலது
சத்துருப்பேய் ஆகிச் சதிசெய்தால் நாங்களுனக்கு
இத்தனைபே ரும்பழிகாண் என்றுரைத்துப்-பத்திரத்தை
வாங்கி வணிகனையும் மார்க்கமிட்ட நீலியையும்
பாங்கிலொரு வீட்டில் படுக்கவைத்து—தூங்குமெனப்
பூட்டிக் கதவடைத்துப் போயினர் பேய்மதியோர்
வாட்டமிட்ட நீலிபழி வாச்சதென்றே—ஊட்டி அஎரு
பிடித்தாள் வணிகன் பிடரிதனைக் கையால்
ஒடித்தாள் கடித்தாள் உதிரம்—குடித்தாள்பின்
நீண்டாள் பிளந்தெறிந்தாள் நெஞ்சிற் குடர்மாலை
பூண்டாள் எழுந்தாள் பொருள்வணிகன்—மாண்டதற்பின்
கண்டார் வழக்கையெந்தக் கற்பனையாற் சற்பனைகள்
விண்டாலும் பெண்வார்த்தை மெய்யேகாண்—
அண்டினர்க்கூறு அஎஅ

---

அஎச. மார்க்கம் இட்ட நீலி: வழக்குரைத்த நீலி என்பவள். பாங்கில்: பக்கத்தில்.

அஎரு. பேய் மதியோர்: பேய்ப்புத்தியுடையார். ஊட்டி: குரல்வளை.

அஎசா. உதிரம்: ரத்தம்.

அஎஅ. கற்பனையால் சர்ப்பனைகள் விண்டாலும் பெண்வார்த்தை மெய்யே: வஞ்சனையாகக் கற்பித்துச் சொன்னாலும பெண்பேச்சை உண்மை என்று கொள்வது இயல்பாகி விட்டது.

அசாரு முதல் அஎஅ முடியத் தமிழ் நாட்டில் நீண்ட காலமாக வழங்கிவரும் பழையனூர் நீலி என்பவளின் கதை சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வணிகனைப் பழி வாங்க எண்ணிய நீலியின் கூற்றை நமபித் தீர்ப்பளித்து வணிகன் உயிரைப் போக்கக் காரணமாக இருந்த சபையார் அத்தனை பேரும் அப்படியே நெருப்பில் வீழ்ந்து இறந்தனர் என்பது கதை. அதனைச் சேக்கிழார் புராணம் பாடிய சைவப் பெரியார் உமாபதி சிவம் பின்வரும் சிறந்தபாடலால் செப்புகின்றார்:

ஆக்கி நடுக்காட்டில் அடித்துப் பறித்தூரிற்
கூக்குர லும் இட்டாற்பின் கூறுவதென்—வாய்க்கலினம்

பூண்ட பரிஎடுத்துப் போட்டதுமல் லாதுகுழி
தோண்டுதென்ருல் நானினிமேற் சொல்வானேன்—
ஆண்டமறை ௮௮௦

அந்தணரே நானிவள்மேல் ஆசைகொண்டேன்
மோசமதாய்
இந்த விதிவருமென் றெண்ணுமல்—முந்தமுந்தக்

கூனி மருந்தைஇட்டுக் கூறுகொண்டாள் அன்றுமுதல்
மேனி ஒடுங்கினேன் மெய்மறந்தேன்—நானிவட்கு ௮௮௨

---

''மாறுகொடு பழையனூர்
நீலிசெய்த வஞ்சனையால்
வணிகன்உயிர் இழப்பத் தாங்கள்

கூறியசொற் பிழையாது
துணிந்துசெந்திக் குழியில்எழு
பதுபேரும் முழுகிக் கங்கை

ஆறணிசெஞ் சடைத்திருவா
லங்காட்டப்பர் அண்டமுற
நிமிர்ந்தாடும் அடியின் கீழ்மைப்

பேறுபெறும் வேளாளர்
பெருமைஎம்மாற் பிரித்துஎவிட்டு
இவளவெனப் பேசலாமோ''

௮௭௯. கூக்குரல்: கூச்சல். வாய்க்கலினம்: வாய்க் கடிவாளம்.

௮௮௦. குதிரை தூக்கிப்போட்டதுமல்லாமல் குழி தோண்டியது போலிருக்கிறது இவள் செயல்.

௮௮௨. கூறுகொண்டாள்: அவள் பக்கம் என்னை ஆக்கிக்கொண்டு விட்டாள். மேனி: உடல்.

முன்னுட் கடனை முதலிடுவார் போற்கொடுத்த
பொன்னேபொற் பூந்துகிலோ பூஷணமோ—
சொன்னசெலவு அஅங

அத்தனைக்கும்வீணே அழித்ததெல்லாம்யான் கணக்கிட்டு
எத்தனையென் றுங்கட்கு இயம்புவேன்—நித்தநித்தம்

வல்லார் தனத்திசொந்த வைப்பென்று பேரெனையும்
அல்லாமல் போக்குவரத் தாயிரம்பேர்—
நல்லவள்போல் அஅரு

உள்ளதெலாம் மெள்ள உபாயமா வாங்கிஎனைத்
தள்ளிவிடக் கள்ளி தளமெடுத்தாள்—உள்ளுடையப்

பேசினுள் சும்மா புறப்பட்டுப் போடாஎன்று
ஏசினுள் நீகொடுத்த தென்என்றுள்—கூசாமல்

முந்தி மடிபிடித்தாள் முன்தானை யைக்கிழித்தாள்
சந்தியிலே பூணூல் தனை அறுத்தாள்—இந்தநரைத்

தாட்டானை வந்தென் தலையிலொரு குட்டுப்
போட்டாளென் குட்டெல்லாம் போச்சையா—மோட்டு

வடுகனை என் மேல்விடுத்தாள் மற்றொருவ னுனல்
விடுவானே புண்ணியவான் விட்டான்—இடுதூருய் அகூo

அஅங. துகில்: ஆடை. பூஷணம்: நகை.

அஅரு. வல் ஆர் தனத்தி: சூதுக்காய் போன்ற கொங்கையுடையாள். வைப்பென்றுபேர். எனக்கு அவள் வைப்பாட்டி என்று பெயர் மட்டும்.

அஅகூ. உபாயமா: தந்திரமாக. தளம் எடுத்தாள்: படையெடுத்தாள். உள் உடைய: மனம் ஒடியும்படியாக.

அஅஅ. முந்தி: விரைந்து. முன்தானை: வேட்டி முனை.

அஅகூ. தாட்டானை: கிழக்குரங்கு. என் குட்டு: எனது மரியாதை.

அகூo. இடு தூருய்: அவதூறு செய்து.

அந்தக் கிழவி அலக்கழிக்கப் பார்த்திருந்த
இந்தக் குமரியென் என்றுளோ—சந்த்ர அகூக

கலைவாள் நுதலணங்கே காதலென்மேல் உண்டோ
இலையோ உனக்கென்றேன் எட்டித்—தலைமேற்

சளக்கென் றடித்தாள் சதிகாரி வீட்டு
விளக்கில் அடித்தாள்பின் வெள்ளி—முளைக்குமுன்னே

முந்திபோட் டுன்மேலே முக்காலும் ஆசைஎன்று
சந்திவீ ரப்பன்முன்னே தாண்டினாள்—வந்தொருவன்

முத்தம் கொளுவாய்க்கு முன்னொருவன் தான்கொடுத்த
அத்தம் பலங்கொடுப்பார்க் காணையுண்டோ—வித்தகரே!

மேனியிட்டு நல்ல மெருகுபிள்ளை யார்போலே
யானிருந்த தீர்க்கம் அறியீரோ?—கூனிஎனக்கு

இட்டமருந் தாலும் இவள்கொடுத்த புண்ணாலும்
ஓட்டி உலர்ந்த உடலானேன்—மட்டைக்கு

இறுத்ததெல்லாம் போகட்டும் என்பொருள்ஈ தென்று
மறித்துமொரு பொன்முடிப்பு வைத்தேன்—நிறத்தமுழு

அகூக. அலக்கழித்தல்: மானத்தை வாங்குதல்.

அகூஉ, அகூங, அகூச. முன் கூடிய காலத்தில் அவள் செய்த சத்தியங்கள்.

அகூரு. ஒருவனிடம் முத்தம் கொண்டவாய்க்கு இன்னொருவன் தன்வாயில் போட்ட வெற்றிலையை இடுவார்க்குச் சத்தியம் ஏது.

அகூசா. மெழுகு பிள்ளையார் போலே: மெழுகு தீற்றிய பிள்ளையாரைப் போல வழுவழுப்பாகப் பருமனாக.

அகூஅ. இறுத்தது: கொட்டியது. நிறத்த: நிறம் விளங்குகின்ற.

மாணிக்கம் ஒன்று மணிமுத் தொருசிறங்கை
பேணிவைக்கச் சொல்லிவைத்தேன் பெண்ணிடத்தில்
—ஏணியைவைத்து அகூகூ

ஏறவிட்டு வாங்கிஎனை இக்கோலம் கண்டசுழல்
மாறிகிட்ட வாங்கி வழங்குவீர்—வேறெனக்குத் கூ௦௦

**தாய்க்கிழவி மறுப்பு**

தஞ்சமில்லை நீங்களே தஞ்சம்என்றேன் அந்நேரம்
தொஞ்சமுலைக் காரி துடிதுடிப்பாய்—வஞ்சத்

திருடனிவன் கூத்திச் செலவுக்கும் போக்கி
ஒருமுடிப்பை வைத்ததுவும் உண்டோ—மருதம்

குடியிருக்கு தேஅழகர் கோவில்பதி னெட்டாம்
படியிருக்கு தேமுதலைப் பள்ளம்—நடுஞாயம்

சொல்லுதே சிங்கம் பிடாரி துடியாமல்
கொல்லுதே தீர்த்துக் கொடுக்கிறோம்—அல்லஎன்றால்

என்னைக் கிடத்தி எனதுமகள் தாண்டமகள்
தன்னைக் கிடத்திநான் தாண்டுகிறேன் - சொன்னதென்ன

தெள்ளிமையோ முற்பிறப்பிற் சீர்கேடன் என்மகட்குப்
பிள்ளையோ என்றாள் பெரியோர்முன்—கள்ளிசொல்லைக்

---

அகூகூ. மாணிக்கம்: சிகப்புக்கல். சிறங்கை: கைப்பிடியளவு:

கூ௦௦. சுழல் மாறி கிட்ட: முடிச்சு அவிழ்க்கி இடம்.

கூ௦க. தஞ்சம்: புகல் இடம்.

கூ௦௨. மருதம்: மருதாயி.

கூ௦௩. பதினெட்டாம்படி: பதினெட்டாம்படிக் கறுப்பன். முதலைப் பள்ளம்: முதலைப் பள்ளச்சாமி.

கூ௦௫. தெள்ளிமை: சாமர்த்தியம். முன்: முன்பாக.

### சபையார் விசாரணை

கேட்டு நகைபுரிந்தார் கிட்டஅழைத் தென்னை அவர்
கூட்டத்துக் குள்இருத்திக் கூறுவார்-வாட்டமுற்ற ௩௦௭

மாதவரே வேசி மருந்திட்டாள் என்றீர்அச்
சேதிஉமக் கெங்கே தெரிந்ததென்றார்—காதல்தந்த

### மருந்திட்டது அறிந்த வகை கூறல்

முத்தனையாள் நேற்றிரவு மூலைக்குள் வைத்துநிறை
குத்திஅரக் குக்குடித்துக் கூட்டமிட்டிவ்—அத்தைமுதல்

வெள்ளாட் டிகளும் குடித்து வெறிபிடித்துத்
துள்ளாட்டம் ஆடமங்கை தூஷணித்து—தள்ளித் ௩௧௦

தலைக்கடையில் விட்டாளென் தன்னை ஒருத்தன்
விலக்கெருது போற்புகுந்தான் வீட்டில்—மலக்கமாய்த்

திண்ணைத் தலையிற் படுத்திருந்தேன் குண்டுணிவாய்க்
கண்ணியங்கே வந்தாள் கலைநெகிழ்த்து—உண்ணும்

அரக்கு வெறியால் அவள்என்மேல் வீழ்ந்து
குரக்குவெறி போற்குறியில் குய்யம்—பொருத்தினளைப்

பண்ணாத கோலமெலாம் பண்ணினாள் ஆர்க்குமொரு
பெண்ணாசை யானாற் பிடிக்குமே—அண்ணர்களைச்

சம்போகம் செய்வதுபோல் தன்னாலே ஆவதெலாம்
அம்பாரும் கண்ணிபார்த் தாகாமல்—வெம்பியே ௩௧௫

---

௩௦௯. அரக்குக் குடித்து: மருந்துண்டு.

௩௧௦. வெள்ளாட்டி: வேலைக்காரி.

௩௧௧. மலக்கம்: வருத்தம்.

௩௧௨. திண்ணைத்தலை: திண்ணை ஓரம். கலை நெகிழ்த்து: ஆடையை உரிந்து.

௩௧௩. குய்யம்: குறி.

காட்டு மருந்தும் கடைமருந்தும் ஊன்மருந்தும்
கூட்டியிட்டால் ஆசைஒரு கோதைமேல்—நாட்டம்வர

ஒட்டுமோ என்றுள் உடந்தையா கத்திரித்த
வட்டமுலை யாள்சொல் வகைவகையாற்—சிட்டரே

இந்தவிதம் நானறிந்தேன் என்றுரைத்தேன் கேட்டுநல்ல
விந்தை எனச்சிரித்தார் மேலோர்கள்—சிந்தைநொந்த

**சபையார் ஆறுதல் மொழி**

பூசுரரே வேத புனிதரே அம்பலத்தில்
தாசியுடன் ஏறத் தகாதுகாண்—வேசிஒரு

செய்யமறை வேதியனைச் சென்னியிற்கல் இட்டகதை
ஐயரே நீர்தாம் அறியீரோ?—கையில்

திரவியத்தை வாங்கிஉமைச் சீவனுடன் விட்ட
மரியாதைக் குண்டோ வழக்கு—பெரியோரே

வேதியராய் உள்ளவர்கள் வேசியரைக் கண்டாக்காற்
காத வழிவிலகல் காரியங்காண்—ஓதுமறை

மந்திர நூல் வாயால் மதுவாய் ரசம்கொள்ள
எந்த வகைதுணிவாய் எண்ணினீர்—சிந்தைமயல்

---

௩௧௭. ஒட்டுமோ: விடுமா.

௩௧௮. விந்தை: வேடிக்கை.

௩௨௨. விலகல்: விலகுதல்.

௩௨௫. மதுவாய் ரசம்: தேன் வாய் அமுது. "ஓது மறை மந்திர நூல் வாயால் மதுவாய் ரசங்கொள்ள" என்பது "ஆரணவாயினர் மாடு ஆடு கோழி அடித்து அவித்துப் பாரணம் செய்யப் பழகிக்கொண்டார் மது பானத்திலும் பூரணர் ஆயினர்." என்ற அறிஞர் வேத நாயகம் பிள்ளையின் பாட்டோடு ஒருவாறு பொருந்துவது.

தீர்த்தவா சிக்குத் திரவியமெல் லாங்கொடுத்துத்
தீர்த்தவா சிக்கடனைத் தீர்த்துவிட்டீர்—கீர்த்தியா கூ௨௪

நாமறியாக் கூத்து நடித்துவிட்டீர் உம்மளவோ
மாமறையோர்க் கெல்லாம் வசையாச்சே-சேமநிதி கூ௨௫

தன்னைப் பறித்தாள் தரச்சொல்லும் என்றீர்அப்
பொன்னை இனிக்கேட்கப் போகுமோ—பொன்னைப்போற்

கூட்டியசெந் தேனெடுத்துக் கொண்டபேர் தம்மைஅவர்
ஓட்டியாத் தெண்டிப்ப துண்டோகாண்—சூட்டரவின்

வாய்க்குள் அகப்பட்ட மண்டுக மும்யானை
வாய்க்குள் அகப்பட்ட வான்கரும்பும்—தீக்குள்ளே

விட்டநறு நெய்யும் வெயின்முகத்தி லேவெடிக்கப்
பட்ட கமரில்விட்ட பாற்குழம்பும்—கட்டுபுகழ்

பாங்கினுல் தேடாப் பரமலுத்தர் கைப்பொருளும்
வாங்கினுல் இப்பொருளும் வாங்கலாம்—
நாங்கள் சொன்ன கூ௩௦

புத்திவழி நின்ருற் பொருளரிதோ நீர்கற்ற
வித்தையிலே செம்பொன் விளையுமே—எத்தும் கூ௩௧

---

கூ௨௪ தீர்த்தவாசிக்கு: தீர்த்த வகைக்கு.

கூ௨௫. உம் அளவோ: உம் வரைக்குத்தானு. வசை: இகழ்ச்சி. சேமநிதி: பாதுகாப்புப் பொருள்.

கூ௨௭. சூட்டரவு: கொண்டையுடைய பாம்பு.

கூ௨௮. மண்டுகம்: தவளை.

கூ௨௯. கமர்: பிளவு.

கூ௩௦. பரமலுத்தர்: பெரும் லோபிகள்.

கூ௩௧. அரிதோ: அருமையோ. விளையும்: உண்டாகும்.

பரத்தையருக் கிந்ததிலும் பத்தத் தனையாய்
வரத்தக்க யோகம் வருங்காண்—கருத்திலே கூ௩௨
எண்ணி இடையாது இருக்கும்ஊர்க் கேகுமென்று
புண்ணியர்தாம் தம்மனையிற் போயினார்—பெண்
அணங்கைப்

**தான் கலக்கமுற்றுத் தெளிதல்**

பின்னடத்திச் செல்லினவள் பின்அழகைப் பாரேனோ
முன்னடத்திச் சென்றாள் முழுப்பாவி—நன்னீர்க்கட்டு
ஆகும் குளத்தில் அனுபவித்து வற்றியபின்
ஏகும் பறவைகள்போல் ஏகினாள்—மோகமுற்ற கூ௩௫
என்னைக் கிழவி இடர்செய் தெனைப்பிரியாக்
கன்னி தனைப்பிரிவு கண்டாளே—இந்நாட்டில்
மாட்டுமதித் தாய்க்கிழவி மாமிதலை யிற்கல்லைப்
போட்டுப் புறப்பட்டுப் போவேனோ—நாட்டமுற்ற
ஊர்எங்கே தோழர்எங்கே உற்றார்எங் கேமனைவி
யார்எங்கே அட்டாவ தானிஎனும்—பேரெங்கே
நானா விதமுமெண்ணி நட்டாற்றுக் கோரையைப்போல்
ஆனேனும் எனக்கலக்கம் ஆயினேன்—யானே

**கோயில் வழிபாடு**

எனைத்தேற்றிக் கொண்டுபோய் எங்கள்சொக்க லிங்கம்
தனைப்போற்றி என்கவலை சாற்றி—அநுக்கிரகம் கூ௪0

---

கூ௩௨. பத்தத்தனை: பத்துப்பங்கு.

கூ௩௩. இடையாது: வருந்தாமல். இருக்கும் ஊர்: சொந்த ஊர். பெண் அணங்கு: மதனாபிஷேகம்.

கூ௩௪. முழுப்பாவி, தாய்.

கூ௩எ. மாட்டுமதி: தடிப்புத்தி.

கூ௩கூ. நானாவிதம்: பலவகையாக.

கூ௪0. சாற்றி: சொக்கலிங்கத்திடம் சொல்லி

பெற்றிரண்டாம் செம்பொற் பிரகாரம் யான்வலமாச்
சுற்றி வயிரவசு வாமியையும்—முற்றும் கூசக

வணங்கியம்பொற் கம்பம் தனக்கு வடபால்
இணங்கும் திருவாசற் கிப்பால்—மணங்கமழ்பூ

மாலை நிரைத்த மணிவாசல் முன்முகப்பிற்
சேலை நிரைத்த திருவிளக்கும்—பாலரவி

காந்தி தரநிரைத்துக் கட்டளைக்குக் கட்டளையாய்
வாய்ந்ததெலாம் சொர்ண மயமாக்கி—தேய்ந்தமுனை

நெட்டிலைவேற் சங்க நிதிக்கரசன் ஆபரணப்
பெட்டி திறந்தபிர காசம்போல்—சட்டப் கூசரு

புழுகு மணக்கப் பொலிந்தஅறை கண்டு
தொழுதேன் அதிசயமும் தோன்றப்—பழுதில்

மறையோன் மணியம் வரதையன் என்போன்அவ்
அறைவா சலில்இருந்தான் ஐயா—நெறியுடையாய்

**கூளப்ப நாயக்கன் கட்டளை காண்டல்**

ஆருபயம் ஈதென்றேன் ஆடலப யன்முல்லைத்
தாருலவு மேருத் தடம்புயமால்—பாராளும் கூசஅ

---

கூசஉ. அம் பொற் கம்பம்: அழகிய தங்கக் கொடி மரம். வடபால்: வடக்குப் பக்கம்.

கூசந. நிரைத்த: வரிசையாகத் தொங்கவிட்ட. சேலை நிரைத்த: திரிகளை வரிசையாகப்போட்ட. பாலரவி: இளஞ் சூரியன்.

கூசரு. நெட்டிலைவேல்: நீண்ட இலைபோன்றவேல். சங்கநிதிக்கரசன்: குபேரன்.

கூசஅ. ஆடல்: போர்வல்ல. அபயன்: காப்பாற்று பவன். தார்: மாலை. மேருத்தடம்புயமால்: மகாமேருவை ஒத்த விசாலமான தோளுடைய திருமால் அனையான்.

யோக மகராஜன் ஒன்பதூர் வாழ்பெரிய
நாகமகூ ளேந்த்ர நரபாலன்—தோகைமயில் கூசகூ

மீனாட்சி அம்மைக்கும் மிக்கசொக்க லிங்கருக்கும்
தானாட்சி யானஉப சாரமா—மேன்மைஅபி கூருo

ஷேகமது மாலை சிறப்பமுது தீபமுதல்
ஆகநடப் பிக்கும் அறைஎன்றான்—மோகம்நமக்கு

### இழந்த பொருளுக்கு வருந்தல்

இட்டணையும் கன்னிக்கு இறைத்ததெல்லாம்இப்படியோர்
கட்டளையாச் செய்துபலன் கண்டோமோ - சிட்டர்தொழும்

அங்கயற்கண் அம்மைக்கு அழகுதிரு வாச்சியொன்று
தங்கத்தி னாலே சமைத்தோமோ—சங்கரர்சொக்

கையர்மகிழ்ந் தேற அபிஷேக பண்டாரம்
செய்ததிருத் தேர்போலச் செய்தோமோ—வைபோகம்

பெற்றபுது மண்டபத்தில் பின்புறமும் முன்புறமும்
பொற்றகடு கொண்டழுத்திப் போட்டோமோ—
மற்றுமெங்கள் கூருரு

மாலழக ருக்கு வயிரத்தால் மின்எறிந்தாற்
போலழகாம் அங்கிபண்ணிப் பூட்டினமோ—சாலைஅறம்

---

கூசகூ. யோக மகராஜன்: நல்ல யோகமுள்ள மன்னர் மன்னன்.

கூருக. மதுமாலை: தேன் பிலிற்றும் மலர் மாலை. சிறப்பமுது: சிறந்த பொங்கல். தீபம்: திருவிளக்கு. நடப் பிக்கும் அறை: நடத்திவைக்கும் அறை. மோகம்: ஆசை.

கூருஉ. கன்னி: மதனாபிஷேகம்.

கூருரு. அங்கயற்கண் அம்மை: மீனாட்சித்தாய்.

கூருசா. சாலை அறம்: ரோடு போடும் தர்மம்.

செய்தோமோ கோதானம் செய்தோமோ பூதானம்
செய்தோமோ சத்திரங்கள் செய்தோமோ—துய்யநிதி

ஆரிடத்தில் வாங்கி அரும்பலனைத் தேடுவோம்
பேர்படைத்த பெஞ்சைப்ர தாபன்ஒன்ப—தூர்படைத்த

**கூளப்ப நாயக்கனிடம் செல்லத் துணிதல்**

ஐயன் ெ...ரியநா கையனிடம் செல்வோமோ
செய்யுமறை வேதியரே செப்புமென்றேன்—எய்துதிருப்

பாற்கடலுக் கேகினவர் பால்குடியா ரோஇதற்கு
மேற்புத்தி யுங்கேட்க வேணுமோ—சூற்கொண்டு கூகூ௦

பெய்யும் மழைக்கு நணையாத பேருமவன்
கையிலேற் காதவரும் காணேன்நான்—ஐயமின்றிப்

போம்எனவெண் ணீறுதந்து பூசிவிட்டார் சந்தனத்தை
ஆம்எனச்சொக் கேசர் அடிபணிந்து—மாமேவு

கூடலழ கர்மதன கோபாலர் பூந்துளவ
ஏடலரும் தார்வீர ராகவமால்—மாடேறும்

நல்லாண் டவர்யார்க்கும் இம்மையிலே நன்மைதரு
மல்லாண் டவர்பாதம் வாழ்த்தியே—செல்வ

மடந்தைஅங்க யற்கண்ணி வாசல்அறச் சாலை
கடந்துமறு வீதி கடந்து—நடந்துவரப் கூகூரு

---

கூருஎ. கோதானம்: பசுத்தானம். பூ: பூமி.

கூருஅ. பெஞ்சைப் பிரதாபன்: பெஞ்சை நகர்ப் பிரபலவான்.

கூகூக. அவன் கையில் ஏற்காதவர்: அவன் கையினல் ஏதேனும் வாங்காதவர். ஐயம்: சந்தேகம்.

கூகூஉ. மா: திருமகள்.

கூகூரு. கூடல்: மதுரை. ஏடு அலரும்: இதழ் விரிகின்ற.

கூகூரு. கடந்து: நீங்கி.

### மதுரை விட்டுச் செல்லல்

பின் இழுக்கும் ஓர்காலைப் பெண்ணாசை மாமிசினம்
முன் இழுக்கும் ஓர்காலை மூன்றுதரம்—பின்னே கூசுசு

திரும்புவதும் மீள்வதுமாய்ச் சிமாட்டி ஆசைக்
கரும்பை நினைந்தேன் கருத்தில்—விரும்புமவள்

குன்றிருக்கும் மென்முலைமேற் கூடிக் கலந்தசுகம்
இன்றொருத்தன் பாங்காய் இருக்குமோ—மன்றலர் தார்ச்

சுற்றுட நான்படுத்த தூங்குமஞ்ச மீதிலொரு
பற்றுப் பயலும் படுப்பானோ—மற்றுமந்தச்

சந்தியிலே மாமி இட்ட சண்டையிலே வந்தஒரு
தொந்தி வடுகன் சுகிப்பானோ—முந்திவிளை கூஎ௦

ஆடி அநுராகம் பாடிவிளை யாடிநான்
கூடியதெல் லாம்நினைத்துக் கொள்வாளோ
—மேடையின்மேல்

கிண்ணமுலைமேற்பதித்தகிள்ளைப்பார்த்தென்னையும்சற்று
எண்ணி நெடுமூச் செறிவாளோ—எண்ணிற்

படாதபா டித்தனையும் பட்டேன்என் பாவம்
இடாதோ பிரமனுக் கென்றே—தடாமல்

வடக்கு முகக்கோட்டை வாசல்நடுக் கட்டு
முடக்கில்வரும் போதெனக்கு முன்னே—அடக்கமுள்ள

### ஞானியையரை மறுபடியும் காண்டல்

மானு பரஞானி ஐயன் மதுரைக்கன்று
ஏனோவந் தான்என் எதிராக—நானவனைக் கூஎரு

---

கூசுஅ. பாங்கு: பக்கம்.

கூஎஉ. கிள்ளு: நகக்குறி அடையாளம்.

கூஎரு. மானுபரன்: மானத்தையே அணிந்தவன். ஏனோ: எதற்காகவோ.

காணும் அளவிற் களவாண் டவன்போலென்
சாணுடம்பும் குன்றிஒரு சாணானேன்—நாணயமாய் கூஎகூ

மாமிதனைக் கண்ட மருமகள்போல் ஆனேனைச்
சாமிஎனை அன்பாய்த் தழுவினான்—நாமறிய

ஆணைபோ லேஇருந்தீர் ஐயரே உம்உடம்பு
பூணைபோ லேஒடுங்கிப் போவானேன்—ஆனஇது

என்னவகை என்றான்மற் றேதுவகை நீர்முதலே
சொன்னவகை கேளாத தோஷவகை—முன்உமது
கையைவிட்டு வேசிமகள் கால்பிடிக்கச் சென்றேன்நான்
மையைஇட்ட கண்ணிக்கு மாலானேன்—பையஉண்டை
கூட்டியிட்டாள் கைப்பொருளைக் கொள்ளையிட்டாள் கைக்குரங்கா
ஆட்டியிட்டாள் இக்கோலம் ஆக்கிஇட்டாள்—கேட்டார்

ஞானியையர் தேறுதல் கூறல்

நகைப்பாரென் றேனிதற்கு நாணமேன் யார்க்கும்
வகைதப்பா மோசம் வராதோ—பகுத்தறிவாம்

இந்திரன்மெய் யோனிக்கண் ஈரைஞ்ஞா றானதுவும்
அந்தணனார் சென்னியிலொன் றற்றதுவும்—சுந்தோப
சுந்தர் மடிந்ததுவுஞ் சுக்ரீவ னால்வாலி
முந்த முடிந்ததுவும் முன்ஒருநாள்—கந்தன்
மரமா னதும்இலங்கை வாழ்வேந்தன் சிந்து
சிரமா னதுவும்வச்ர தேகத்து—உரம்படைத்த கூஅரு

---

கூஎகூ. வகை: காரணம்.

கூஅஉ. மெய்: உடம்பிலே. யோனிக்கண்: யோனியாகிய கண். ஈர் ஐஞ்ஞாறு: ஆயிரம். அந்தணனார்: பிர்மதேவர். சென்னி: தலை.

கூஅரு. இலங்கை வாழ் வேந்தன்: இராவணன். சிந்து சிரமானது: தலையற்ற உடலானது.

கீசகனுர் மாண்டதுவும் கேட்டீர் இலேயோபெண்
ஆசையால் என்ப தறியீரோ—பூசுரரே கூஅசு

கைப்பொருள்போச் சென்று கவலேயேன் கல்விஒன்ருல்
மெய்ப்பொருளாம் பாவலர்க்கு வேளாண்மை-இப்புவியில்

"மன்னனும் மாசறக் கற்ருேனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்ருேன் சிறப்புடையன்—மன்னனுக்குத்

தன்தேசம் அல்லாற் சிறப்பில்லேக் கற்ருேர்க்குச்
சென்றஇடம் எல்லாம் சிறப்பு" என்று—நன்றிபெற

அவ்வைசொன்ன நீதி அறியீரோ நீரினிமேல்
இவ்விடம்விட் டுங்களூர்க் கேகுமென்று—தெய்வ கூகூ௦

மறைவல்லோன் என்னே வழிவிடுத்துப் பார்த்துத்
தறுகினின்ருன் என்மேல் தயவால்—நெறியுடனே

ஐம்பதூர்க் கேகி அலேந்துபலன் ஏதென்றே
ஒன்பதூர்க் கேக ஒருமித்தேன்—முன்புகருங்

காகம் இடத்திருந்து கைக்கு வலப்புறத்தில்
ஏகக் கருடன் இடமாக—யோகபலம் கூகூச

**திரு ஏடகம் கண்டமை**

இன்றுவந்த தாகும்நமக்கு என்றுவந்தேன் ஏடகத்திற்
சென்றுவந்தே அந்தச் சிவனுரை—அன்றுதெரி

---

கூஅசு. பூசுரர்: இவ்உலகத்தேவர்.

கூஅஅ. மாசு அற: சிக்கு நீங்க. சீர்தூக்கின்: நிறுத்துப்பார்த்தால். மன்னனில்: அரசனேவிட.

கூஅகூ. நன்றிபெற: நன்ருக.

கூகூக. மறைவல்லோன்: வேதம் அறிந்தவன்.

கூகூ௨. ஒருமித்தேன்: முடிவு செய்தேன்.

கூகூ௩. வாசி வலம், கருடன் இடம் நல்ல சகுனம் என்பர்.

கூகூச. ஏடகம்: திருவேடகம் என்னும் பாண்டி பதினன்கில் ஒரு ஸ்தலம். அந்தச் சிவனுர்: அங்கே எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்.

சித்தேன்என் பூர்வ ஜெனனதோ ஷங்களெலாம்
எத்தேசம் கண்ட தெனஅறியேன்-அத்தலத்தில் கூகூரு

வேம்பு கரும்பாமாம் வெண்மணலோ நீருமாம்
தாம்புவிடு நீர்அமிர்தம் தானுமாம்—தேம்பும்

வறியேன் மருந்தின் மயக்கமும்நோ யுந்தீர்த்து
அறிவாளன் ஆக்கிவிட்டது அவ்வூர்—நெறியுடனே

அற்றைநாள் தங்கி அருணோ தயத்தெழுந்து
மற்றைநாள் மேற்கு வழிகொண்டேன்—வெற்றிபுரி

கோடுகொண்ட மால்யானைக் கூளேந்த்ரன் ஒன்பதூர்
நாடுகண்டேன் என்கவலை நான்காணேன்—ஆடகவான்

### நாட்டு வளம்

எட்டியபூஞ் சோலை எழிற்கமுகும் வாழைகளும்
கட்டியபூங் காவணமாக் காண்பிக்க—விட்ட க000

வருக்கை பலாக்கனியை மந்தி இரு கைக்கொண்டு
இருக்குமது மத்தளக்கொட் டென்ன—உருக்கும்இசை

---

கூகூரு. எத்தேசம் கண்டதென அறியேன். எந்தத் தேசத்தை நாடி ஓடிவிட்டதெனத் தெரிய வில்லை.

கூகூசா. தாம்பு: கயிறு. தேம்பும்: கலக்கமுற்ற.

கூகூஎ. வறியேன்: வறுமையுற்றேனது. அவ் ஊர்: ஏடகம்.

கூகூஅ. அருணோதயம்: காலைச் செவ்வானத் தோற்றம்.

கூகூகூ. கோடு: தந்தம் மால்: பெரிய. ஆடகவான்: பொன் உலகம்.

க000. எட்டிய: அளாவிய. கமுகு: பாக்கு.

க00க. வருக்கை பலா ஒரு பொருளன. வருக்கை என்றாலும் பலாவே. மந்தி: குரங்கு.

வண்டுதித்தி கூட் வரிக்குயில்கள் பண்பாடக்
கண்டு கிளிகள் கவிபாடத்—தண்டாத கoo௨

மன்றலந்தார் அல்லிமலர் வாடைக்காற் றூலடிபட்டு
ஒன்றொடொன்று தாளம்போல் ஒத்திசைப்ப-நின்றுலகில்

நீலவன்னத் தோகை நெடுஞ்சிறகை மேல்விரித்துக்
கோல வனிதையர்போற் கூத்தாடச்—சோலைக்குள்

ஆங்குநதி பாயும் அலரோடை வாளைவாள்
வாங்கிய வீச்சு வளங்காட்டப்—பூங்காவில் கoo௫

வந்து நுழைந்துசெல்லும் வாளிரவி கூத்துக்குப்
பந்தம் பிடிக்கும் படிசிறப்ப—முந்த

முகைத்திருக்கும் முல்லைமலர் மொய்த்திருந்துபார்ப்போர்
நகைத்திருக்கும் பாவனையாய் நண்ண—மிகுத்தபொறி

வண்டாடும் செங்காந்தள் வாடையா லேஅசைந்து
கொண்டாடு வோர்கைக் குணம்காட்டக்—கண்டெதிர்புன்

---

கoo௨. தித்திகூட: துருத்தி வாத்தியம் வாசிக்க. தண்டாத: குறையாத.

கoo௩. மன்றல்: மணம். அம் தார்: அழகிய மாலை.

கoo௪. நீலவன்னத் தோகை: நீல நிற மயில். கோல வனிதையர்: அழகிய மங்கைமார்.

கoo௫. அலரோடை: பூ மல்கிய நீர் நிலை. வாளை வாள்: மீனுகிய கண்.

கoo௬. இரவி: சூரியன். பந்தம்: தீவர்த்தி. படி: மாதிரி.

கoo௭: முகைத்திருத்தல்: அரும்பி யிருத்தல். மொய்த்து: கூடி. பொறி: புள்ளி.

கoo௮. வாடை: வடகாற்று.

நாக மலரும் நறுங்கொன்றைப் பூவிதழும்
த்யாகமெனப் பொன்னுமுத்தும் சிந்திநிற்பத்—தோகைவிரித்து

ஆடுகின்ற மஞ்ஞைஎதிர் அன்னம் பறந்துவந்து
போடுகின்ற வெண்தூசு போற்படிய—நீடுவயற் ௧௦௧௦

சாலிக் கதிர்க்குலையும் தாமரையும் அந்தநறுஞ்
சோலைக்குள் மன்னர்குழாம்சூழ்ந்ததொக்கும்-சோலைவளம்

எதென்று சொல்வேன் இருதோளும் பூரித்தேன்
வேதன் தொழுங்கோயில் மேட்டிலே—சிலைதயுடன்

**திம்மராயரை வணங்கல்**

மாதவனைக் கண்டேன்என் வல்வினையெல் லாமுடனே
ஆதவனைக் கண்டபனி ஆக்கினேன்—பாதம்

தொழுதுதிம்ம ராயர் துதித்துலைப்பா டாமல்
பழுதிலே வேசையரைப் பன்னி—முழுவதுமுன்

மீன வடிவைஅந்த மின்னார்கண் என்றும்நீ
ஆனசிங்க ரூபமிடை ஆமென்றும்-மேன்மையுடன் ௧௦௧௫

மைக்கிசைந்த ரூபத்தை மங்கையார் கூந்தலென்றும்
கைக்கிசைந்த சங்கைக் கழுத்தென்றும்—இக்கனைத்தும்

---

௧௦௦௯. நறும்: நல்ல. த்யாகம்: கொடை. தோகை: மயில் இறகு.

௧௦௧௦. மஞ்ஞை: மயில். தூசு: ஆடை.

௧௦௧௧. சாலி: நெல். குழாம்: கூட்டம்.

௧௦௧௨. பூரித்தேன்: பருத்தேன். வேதன்: பிரமன்.

௧௦௧௩. மாதவன்: திருமால்.

௧௦௧௪. திம்மராயன்: அப்பெருமாள் பெயர். பன்னி: பேசி.

௧௦௧௫. மீனவடிவு: மச்சாவதாரம். சிங்க ரூபம்: நரசிங்க அவதாரம்.

௧௦௧௬. மை: மேகம்.

தந்திப் புவனமெலாம் தந்தவனைத் தந்தமலர்
உந்தி திருமுகத்துக் கொப்பென்றும்—சந்தத்தும் கoகஎ

வேயடுத்த நின்இசையை மின்னார் வசனமென்றும்
நீபடுக்கும் பாயை நிதம்பமென்றும்—வாய்பிதற்றிப்

பாடினேன் இந்தப் பலன்கண்டேன் சிந்தைமலர்
சூடினேன் பாதம் தொழுதெழுந்தேன்—ஆடி

## நகர்ச் சிறப்பு

அளகா புரிக்கும் அமரா வதிக்கும்
வளமாம் நவபுரிக்கு வந்தேன்—பளபளெனும் கoஉo

செம்பொன் நெடுமதிலும் தேரோடும் வீதிகளும்
கும்ப முடிநிரைத்த கோபுரமும்—அம்பரத்தில்

ஆற்றுநீர் அள்ளி அருக்கன் உடல்குளிரத்
தூற்றியபொன் மாடத் துயிற்கொடியும்—நீற்றொளிசேர்

---

கoகஎ. தந்து இப்புவனமெலாம் எனப்பிரிக்க. தந்தவன்: பிர்மா. அவனைத்தந்த மலர் உந்தியுடையான் திருமால். இது "மூவுலகும் ஈன்றானை முன் ஈன்றான்" என்ற கம்பர் வாக்கின் வழிவந்தது.

கoகஅ. வேய்: புல்லாங்குழல். படுக்கும் பாய்: அநந்தன் என்னும் பாம்பரசன்.

கoகக. சிந்தைமலர்: மனத்தாமரை.

கoஉo. அளகாபுரி: குபேரன் ஊர். அமராவதி: இந்திரன் நகர். வளம் ஆம்: செழுமையான. நவபுரி: பாட்டுடைத் தலைவனுடைய நகரம்.

கoஉக. கும்பமுடி: குடச்சிகரம். நிரைத்த: வரிசையாக வைத்த. அம்பரம்: ஆகாயம்.

கoஉஉ. ஆறு: ஆகாய கங்கை. அருக்கன்: சூரியன்.

தன்னிறத்தைப் பொன்னிலத்துத்தந்திக்கீந்தந்நிலத்துப்
பொன்னிறத்தைப் பெற்ற புரிசைகளும்—இன்னஅழகு

அத்தனையும் கண்டுமகிழ்ந்து ஐயன் அகோபிலனும்
கர்த்தனையும் கண்டு கமலத்தாள்—பத்தியுடன்

அரண்மனை காண்டல்

சேவித்தேன் கோவிலுக்குத் தென்புறத்திற் கற்பகப்பூ
நீவித்தேன் ஊற்றும் நெடுமதிலும்—மேவுமுகம் கoஉ௫

இட்டமணிப் பொற்குடங்கள் எட்டுவகைச் செந்திருவின்
வட்டமுலை போலிலங்கு மாளிகையும்—தொட்டுக்

குழைக்கின்ற நல்குரவு கொண்டேனை வாவென்று
அழைக்கின் றதுபோல்நின் றுட்டம்—தழைக்கின்ற

சிங்கார வெள்ளைச் செயடாலும் கண்டிதுவே
எங்கோன் அரண்மனை என்றெய்தினேன்—துங்கப்

படையால் திருடர் பயத்தால் கொடையால்
அடையாத வாசலுக்குள் ஆனேன்—தடவிகட கoஉகூ

---

கoஉங. பொன் நிலம்: விண்நாடு. தந்தி: வெள்ளை யானை. புரிசை: கோட்டை. இன்ன: இம்மாதிரியான.

கoஉச. அகோபிலன், அத்திருமால் திருப்பெயர். கமலத்தாள்: அடிக்கமலம்.

கoஉ௫. கற்பகப் பூ நீவி: விண்ணிலுள்ள கற்பகப் பூவைத்தடவி.

கoஉகூ. எட்டுவகைச் செந்திரு: அஷ்ட லெட்சுமி.

கoஉஎ. நல்குரவு: வறுமை.

கoஉஅ. ஜெய டால்: வெற்றிக் கொடி. எங்கோன்: எந்தலைவன் கூளப்பநாயக்கன். துங்கம்: பரிசுத்தம்.

கoஉகூ. தடவிகட: விசாலமாகப் பெருமதம் பொழியும்.

காந்து கழற்சிறுகண் காரானை நிற்பஅது
ஏந்துகொம்பைக் கண்டுபகீல் என்றுமனம்—சோர்ந்துநான்

வெல்லவிட்ட பூண்முலையாள் மென்முலைமேல்என் மனதைச்
செல்லவிட்டேன் மெள்ளத் திரும்பினேன்—செல்வமுதல்

வாசலுக்குள் மன்னர் வருவாரும் போவாரும்
"ஜே ஜெ"எனும் சந்தடிக்குட் சிக்கினேன்—வீசுகின்ற

பட்டைக்கம் புக்குப் பயந்தெனைப்பின் பற்றிவந்த
மொட்டைக் கலியன் முடுக்குண்டான்—கிட்டப்போய்

அத்தினேன் கொல்லரெனை யாரென்றார் அப்பாநான்
வித்துவான் என்றுசொன்னேன் விட்டுவிட்டார்—மொய்த்தமணிப்

## கொலுச் சிறப்பு

பத்தி விலாசப் பவளக்காற் போதிகைப்பூ
வைத்த கனகமணி மண்டபத்தில்—இத்திகிரி

வாழலோ கம்புரக்கும் மால்பெரிய நாகேந்த்ர
கூளபூ பாலன் கொலுவாகத்—தோளில்

---

௧௦௩௦. காந்து தழற்சிறுகண்: தீ உதிர்க்கும் சிறிய கண். பகீல் என்று: குபீர் என.

௧௦௩௧. வெல்ல விட்ட: என்னை வெல்ல வெளியில் விட்ட.

௧௦௩௨. சந்தடி: கூட்டம்.

௧௦௩௩. மொட்டைக் கலியன்: வெறுந் தரித்திரம் என்போன். முடுக்குண்டான்: உதைபட்டான்.

௧௦௩௪. அத்தினேன்: எட்டிப் பார்த்தேன். கொல்லர்: எதிரியைத் தொலைக்கவல்ல வாயில் காப்போர்.

௧௦௩௫. இத் திகிரி: இச் சக்கரத்தால்.

௧௦௩௬. புரக்கும்: காக்கும். கொலுவாக: கொலுவிருக்க.

ஜெயமாது கூத்தாடத் திங்கள்முக மேற்பங்
கயமாது தன்கருணை காட்டக்—கயிலேந்து கoௗஎ
நெய்வடித்த வாள்செவிக்கு நேராக நின்றெனக்கூண்
எவ்விடத்தை யாசொல் எனக்கேட்பச்—செவ்விபூஞ்
சந்திர காவித் தலைப்பாகை மேற்கவிகை
சந்த்ரோ தயகாந்தி தான்காட்ட—சுந்தரமும்
திக்கனைத்தும் சுற்றச் சிறகடிக்கொள் கீர்த்தியைப்போல்
மிக்கிரட்டைப் பாவாடை வீசிநிற்கச்—செக்கர் கoசo
அவிரொளிரத் தாங்கி அடுத்திருபால் வீசும்
கவரி உபயநிறங் காட்டக்—கவலைபடும்
சொற்காட்டும் ஒன்னார் தொழுது விழுந்துகெஞ்சிப்
பற்காட்டும் சென்னி பதித்தமணி—முற்காட்டும்
சாமித் துரோகரைப்போல் தண்டை முகப்பில்வெற்றிச்
சோமத் தலைபோலச் சோதிவிட—வீமரண
தீர துரை மக்கள் ஜெயமந் திரிமாரும்
வீர தள கர்த்தர்களும் வேந்தர்களும்—பார்மதிக்கும்

---

கoௗஎ. ஜெயமாது: வெற்றித்திரு. பங்கயமாது: பாக்கியலெட்சுமி.

கoௗஅ. நெய்வடித்தவாள்: நெய்தடவிய கூரிய வாள். ஊண் எவ் இடத்து: உணவு எங்கே.

கoௗகூ. கவிகை: வெண்கொற்றக் குடை. சந்திரோதய காந்தி: திங்களின் புறப்பாட்டு ஒளி. அந்தரம்: வான்.

கoசo. சிறகடிக் கொள் கீர்த்தி: சிறகின் அடியில் பொருந்தும் புகழ். பாவாடை: வீசும் ஒருவகைத்துகில் விருது.

கoசக. கவரி: சாமரை. உபயம்: இரண்டு.

கoசஉ. ஒன்னார்: எதிரிகள்.

கoசச. தளகர்த்தர்: படைத்தலைவர்.

தானு பதிகளும்ப்ர சண்ட நியோகிகளும்
நானு கலைதெரிந்த நாவலரும்-கோன்முறைமைக்கு கoசரு

இந்தவகைக் கிந்தவகை இன்பம் தருவதென்ன
வந்துபர ராஜர் மநுக்கேட்பச்—செந்திருவாழ்

துய்ய வதனசந்த்ர சோபைநறுந் தெள்ளமுதைத்
தையல்நல்லார் செங்கட் சகோரமுண்ணக்—கைகுவித்து

வாரிட்ட ராணு வரிசையாய் நிற்கஎதிர்
காரிட்ட யானைநின்று காதாட்டத்—தாரிட்டுப்

பொன்னின் முகப்பூட்டுப் பூட்டி நிரைத்தடில்லி
வன்னப் பரிகளைத்து வாவிநிற்க—எந்நேரம்

கூடும் சனஊழியக்காரர் கோடிசெயந்
தேடும் கனசேரு வைக்காரர்—சோடிட்டுத் கoரு௦

தத்தரமாய்க் காலிலிட்ட தண்டைகளும் கேடயமும்
கத்தியுமாய் வந்துநின்று கைகுவித்துச்—சித்தம்வரச்

சிங்களத்தை வெட்டிச் சிறைபிடிக்க வோநாங்கள்
வங்களத்தி லேகலகம் வைக்கவோ—பங்கமிலா கoருஉ

---

கoசரு. நானுகலை: பலவித சாஸ்திரம்.

கoசஎ. வதன சந்த்ர சோபை: முக மதி ஒளி. கட் சகோரம்: கண்ணுகிய சகோரப்புள். சகோரம்: நிலவு உண்ணும் பறவை.

கoசஅ. வார்இட்ட: கச்சை கட்டிய. ராணு: ராணுவத்தின் கடைக்குறை. தார்: மாலை.

கoசகூ. பொன்னின் முகப்பூட்டு: தங்கத்தால்செய்த முக நகை. டில்லி வன்னப் பரி: நிறமான டில்லிக் குதிரை. வாவி: தாவி.

கoரு௦. கோடி ஜெயம்: ஏராளமான வெற்றி. சோடு: செருப்பு.

கoருஉ. சிங்களம்: இலங்கை. வங்களம்: வங்காளம்.

வல்லத்துக் கோட்டையைப்போய் வாங்கவோ வாங்காத
கொல்லத்தைக் கொள்ளையிட்டுக் கொள்ளவோ—மெல்லப்போய்ச்

சொல்லையர் என்னத் துடிமணியக் காரர்பணம்
செல்லும் வரவும் செவிக்கேற்ற—நெல்லுநிதி

ஆயக்க மும்செலவும் ஆதாய மும்கழிவும்
வாயிற் கணக்கர்வந்து வாசிக்கத்—தேயத்துக் கஂ௫௫

கோவோலை வாசகத்தைக் கூறுவார் தாம்எழுதி
ஏவோலைக் கொப்பம் இடச்சொல்லத்—தாவித்

தகரும் தகரும் தலையும் தலையும்
தகரும் தகரும்எனத் தாக்க—விகடநட

மல்லராய் முற்பகையும் அல்லராய்க் கட்டிவிழும்
மல்லராய்க் கைகுவித்து வாங்கிநிற்ப—வெல்லக்

குறும்புள்ளாய் அங்கைக் குறும்புள்ளாய்க் கோபக்
குறும்புள்ளாய்ப் பாய்ந்துகுதி கொள்ளப்—பறங்கிகளும்

---

கஂ௫௩. கொல்லம்: மலையாளத்திலுள்ள ஓர் ஊர்.

கஂ௫௪. செவிக்கேற்ற: காதிலே போட.

கஂ௫௫. ஆயக்கம்: மொத்தப்புள்ளி. தேயம்:தேசம்.

கஂ௫௬. கோ ஓலை: அரசருக்கு எழுதும் ஓலை. ஏவு ஓலை: ஏவுகின்ற சீட்டு. ஒப்பம்: கையெழுத்து.

கஂ௫௭. தகரும் தகரும்: ஆடும் ஆடும். தகரும் தகரும் என: ஒடியும் ஒடியும் என்று சொல்லும்படி.

கஂ௫௮. மல்லர்: மல்யுத்தம் செய்வோர். கட்டி விழும்மல்லர்: மல்லுக்கட்டி விழுபவர். வெல்ல: வெற்றி கொள்ள.

கஂ௫௯. குறும்புள்ளாய்: சிறுபறவையாய். அங்கைக்கு உறும் புள்ளாய்: கைக்குள் அடங்குவனவாய். கோபக் குறும்பு உள்ளாய்: சினக்குறும்பு உள்ளனவாய். பறங்கிகள்: வெள்ளைக்காரர்கள்.

சோனகரும் தந்த துரித வராகனிது
சீனர்வர விட்ட சிவிகைஇது—யானைகட்டி கoகூo

மிண்டுகொண்ட மைசூர்மேல் வேட்டைபோய் நம்முடைய
தண்டுகொண்டு வந்த தனங்களிவை—மண்டலிகர்

இட்ட திரைகள் இவைபராக் கென்றுசொல்லிக்
கட்டியர்கொண் டாடக் கனபேரி—கொட்டரணம்

மல்லாரி கொட்ட அகோபிலமால் கோயிலார்
எல்லாரும் ஓர்பால் இனிதிருப்ப—நல்லமிர்த

போஜனுங் கூளபூ பாலன்ச முத்திரத்து
மாஜனமும் மன்ருடி மங்கலத்து—மாஜனமும்

வத்தலக் குண்டு மகாஜனமும் மாற்றாராம்
அத்தலத்தில் வைதிகநூல் அந்தணரும்—வித்வஜனர் கoகூரு

பட்சமுறும் எங்கோன் பவிசும் பலன்களும்என்று
அட்சயமாம் என்றட் சதைவழங்க—ரட்சகனும்

கoகூo. சோனகர்: யவன தேசத்தார். சீனர்: சீனத்தார். சிவிகை: பல்லக்கு.

கoகூக. மிண்டுகொண்ட: வலிமை பெற்ற. வேட்டைபோய்: வேட்டையாடப் போய். தண்டு: படை. தனம்: பொருள்.

கoகூஉ. திறை: கப்பம். கட்டியர்: கட்டியங் கூறுவோர். கனபேரி: கனத்த முரசு.

கoகூங. மல்லாரி: ஓர் வகைவாத்தியக்கருவி. ஓர்பால்: ஒரு புறம்.

கoகூச. கூளபூபாலன் சமுத்திரத்து மாஜனமும்: கூளப்பநாயக்கனது கடலனைய உறவினர்களும்.

கoகூரு. வித்வசனர்: படிப்பாளிகள்.

கoகூசு. பவிசு: பெருமை. அட்சயமாம்: வாழட்டும். ரட்சகன்: காக்கின்றவன்.

*கோரசிங்க ரூபஉக்ர கோதண்ட பாணியைப்போல்*
*வீரசிங் காதனத்தில் வீற்றிருந்தான்—சூரியன்முன்*

*பங்கயம்போ லானேன் பரபரெனச் சென்றெதிரே*
*செங்கைதனை ஏந்திச் செயமென்றேன்—இங்கே*

*இருமென்றென் ஐயன் இடங்காட்டப் பெற்றேன்*
*அருகிலிருந் தேன்மகிழ்ச்சி ஆனேன்—கருணைபுரிந்து*

*என்மேல் விழிவைத்தான் எங்கோன் குறிப்பறிந்து*
*பொன்மேவும் பெஞ்சைப் புரந்தரா!—மன்னு* க௦ள௦

*நிகளங்கா! மல்லா! நிலைக்கோட்டை ராயா!*
*அகளங்கா! ஆளுக் கபிமா!—நகைமுகப்ர*

*தாபா! ககளகோ தண்டா! விருதுபண்டு*
*பாபா! வலக்கவம்ச பாக்யகுல—தீபா!*

*சுமுகப்ர முகலளித சுகுணகுண ரவியனைய*
*சமுகநகை முககமல தளநயனா!—அமிர்தரச* க௦ளங

---

க௦சுஎ. கோர சிங்க ரூபம்: அச்சுறுத்தும் நரசிம்ம வடிவம். கோதண்டபாணி: கோதண்டம் என்னும் பெயர் கொண்ட வில்லைக் கையிலே ஏந்திய தசரத ராமன்.

க௦சுஅ. பங்கயம்: தாமரை. பரபரென: விரைவாக. ஏந்தி: தூக்கி. ஜெயம்: வெற்றி.

க௦ள௦. விழிவைத்தான்: கண்பார்த்தான். புரந்தரன்: இந்திரன்.

க௦ளக. ராயன்: அரசன். அகளங்கன்: களங்கமற்றவன். அபிமன்: அபிமன்யு என்னும் அழகன்.

க௦ளஉ. வலக்க வம்சம், பாடல் தலைவனுடைய குலம்.

க௦ளங. ரவி: சூரியன். நயனம்: கண்.

மதுரவித வசனமிர்த மதமெழுது புயசயில
சதுரதட கடகரட சமரகரி!—உதயகெரு க௦எச
விதநடன பரிநகுல விகடமிகு மகுடமுடி
அதிரஅடி வருடுசரண் அடலபய!—அதுலகுல! க௦எரு

சந்திர சிந்துர சந்தன குங்கும
மந்தர கொங்கை மடந்தையர்—சுந்தர!

கல்விப் பெருங்கடலே! கற்பகக்கன் றே! கமலச்
செல்விக்கு வாய்த்த திரவியமே!—வெல்லுமதக்

கூன்கோட்டு யானைக் குறுகார் எனுங்காட்டு
மான்கூட்டம் சாடும் வரிப்புலியே!—மீன்கூட்டம்

பாதிக் குறநிவந்த பன்றிமலைச் சாரலிலே
ஆதிக்கம் செய்திருக்கும் ஆளியே!—ஓதுபகை க௦எகூ

---

க௦எச. வசன அமிர்தம்: இனிய பேச்சு. புய சயிலம்: தோள் மலை. சதுரன்: கெட்டிக்காரன். தடம்: பெரிய. கடம்: மதம். கரடம்: மதம்பாய் சுவடு. சமரம்: போர். கரி: யானை.

க௦எச, க௦எரு. கெருவிதம்: பெருமிதம். நடனபரி நகுலன்: நாட்டியக் குதிரைத் தலைவன். அதிர: அதிர்ச்சி பெற. அடல்: வலிமை. அபயன்: அச்சமற்றவன். அதுலன்: ஒப்பற்றவன். குல: நல்ல குலத்திலே பிறந்தவனே.

க௦எசு. மந்தரம்: மந்தரமலை.

க௦எஎ. கற்பகக் கன்று: கொடையில் கற்பக தருவின் பிள்ளை. கமலச் செல்வி: தாமரை மேவு திருமகள்.

க௦எஅ. கூன் கோடு: வளைந்த தந்தம். குறுகார்: அடையாதவர். சாடுதல்: மோதுதல். வரிப்புலி: கோடுகள் பெற்ற புலி.

க௦எகூ. பாதிக்கு உற: பாதிக்குப் பொருந்த. பன்றிமலை: பாடல் தலைவனுடைய வராககிரி. ஆதிக்கம்: அதிகாரம். ஆளி: சிங்கம்.

வீரமண்ட லீகரெனும் வேழங் கிளைவிழுங்கும்
பாரகண்ட பேரண்டப் பட்சியே!—சேரலராய் கoஅo

அண்டிப் பொருவோர் அரிக்குலத்தை வாளுகிராம்
தண்டிற் கிழிக்கும் சரபமே!—திண்டிறல்வேற்

போஜேந்த்ரா! சக்ர புவனேந்த்ரா! ராஜாதி
ராஜேந்த்ரா! தீனஜன ரட்சகா!—வீசுதிரை

ஆற்றிலே நாலும் அநுதினமும் பொன்னூறும்
ஊற்றிலே ஆறும் உடையானே!—ஏற்றமுள்ள

பத்தூரொவ் வொன்றுப் படைக்கும் தலையூராம்
நத்தூரும் ஒன்பதூர் நாயகனே!—மொய்த்தகடல்

ஒப்பத் திரண்டதளம் உள்ளசதுர் ஊடியங்கள்
முப்பத் திரண்டுபெற்ற மொய்ம்பனே!—இப்புவியில்

---

கoஅo. மண்டலீகர்: மண்டலம் ஆள்மன்னர். வேழம்: யானை. பாரகண்டம்: பெரிய கழுத்து. பேரண்டப் பட்சி என்பது யானையை விழுங்கும் வலிமை வாய்ந்த புள். சேரலர்: நண்ணுதார்.

கoஅக. பொருவோர்: போர் செய்வோர். அரிக் குலம்: சிம்மக் கூட்டம். வாள் உகிராம் தண்டு: ஒளிமிக்க நகமாகிய கதை. சரபம், சிங்கத்தையும் கொல்ல வல்ல எட்டுக் கால்கள் பெற்ற ஒரு பறவை என்ப.

கoஅஉ. தீனஜன ரட்சகன்: ஏழைகள் பங்கன்.

கoஅங. நான்கு ஆறுகளும் ஆறு நீர் ஓடைகளும் உடையான்.

கoஅச. தலையூர்: தலைநகரம். நத்து ஊர்: சங்கு தவழும்.

கoஅரு. தளம்: சேனை. சதுர் ஊடியங்கள்: தேர் யானை குதிரை காலாள் ஆகிய நால்வகைப்படை. மொய்ம்பு: வலிமை.

அண்டலரை வெல்லும் அறுபத்து நாலுமன்னர்
கண்டசெய துங்கரண கங்கணனே!—மிண்டுகொண்டு

சண்டைக்கு டில்லித் தளம்வந்த தானாலும்
கண்டுமலை ஏறாத கண்டனே!—தண்டஜெய

தண்டனே! காரியஉத் தண்டனே சூகரவே
தண்டனே! வீரியகோ தண்டனே!—தண்தளவத்

தாரனே! சற்குணவிஸ் தாரனே! கற்றவர்க்கு
தாரனே! அற்றவர்க்கா தாரனே!—ஆரமுத

சோமனே! அன்னசத்ர சோமனே! கற்பகப்பூங்
காமனே! விற்கரும்புக் காமனே!—நாமகள்சேர் ௧௦௯௦

பெஞ்சைநகர்ச் சிந்தமனற் பேறே! சரத்கால
மஞ்சைநிக ருந்தியாக வள்ளலே!—அஞ்சித்

தொழுதுங்க வேந்தருக்குத் துள்ளுசீட் டொப்பம்
எழுதும் பெரியநா கேந்த்ரா!—எளியோர் ௧௦௯௨

---

௧௦௮௬. அண்டலர்: பொருந்தாதார்.

௧௦௮௭. டில்லிப்படை போருக்கு எழுந்து வந்தால் அதைக் கண்டதும் மலையிலே ஏறிக்கொள்வது அந்நாளில் பெரிதும் இருந்த ஓர் நிலை. இப்பாட்டுடைத் தலைவன் பயந்து மலைஏற மாட்டானும்.

௧௦௮௮. சூகரவேதண்டம்: பன்றி மலைத்தொடர். தளவம்: முல்லை.

௧௦௮௯. தார்: மாலை. கற்றவர்க்கு உதாரன்: படித்தவர்க்கு நிறையக் கொடுப்பவன். அற்றவர்க்கு ஆதாரன்: ஏழைகட்குப் பற்றுக்கோடானவன்.

௧௦௯௧. நற்பேறு: நல்லபாக்கியம். சரத்கால மஞ்சு: ஐப்பசி, கார்த்திகை மாதங்களாகிய கூதிர்காலத்து மேகம்.

௧௦௯௨. துங்கம்: பரிசுத்தம். துள்ளுசீட்டு: அபய ஓலை.

கரங்கள் விரித்தேற்கக் கன்றுகண்ட ஆப்போல்
இரங்கும் பெரியநா கேந்த்ரா !—வரங்கள் கoகூங
செருக்குமத ரூபம்போல் சிங்கா சனத்தில்
இருக்கும் பெரியநா கேந்த்ரா !—பருக்கும்
மழைக்கும்ப கம்ப மதயானை வீரிட்டு
அழைக்கும் பெரியநா கையா !—தழைத்தபுகழ்க் கoகூரு
கூள மகீபன் குமார துரைச் சிந்தமனும்
வாளபய சோதரவ சிகரனே !—நீள்சகல

### வித்தை அரங்கேற்றல்

சம்பனு ! என்று தமிழ்பாடி னேன்தமிழிற்
கம்பனும் என்றார் கவிராஜர்—சொம்புபெறக்
கட்டாக நூறு கவிசொன்னேன் அங்கேஎன்
அட்டாவ தானம்அரங் கேற்றினேன்—அட்டாங்க
யோகக்கா வித்துகிலோர் உள்ளம் மகிழ்ந்தமிர்த
பாகம் எனச்சொல்லப் பண்ணினேன்—த்யாகநிதி கoகூகூ

---

கoகூங. ஆ: பசு.

கoகூச. மதரூபம்: மன்மத வடிவம்.

கoகூரு. மழைக் கும்ப கம்பமத யானை: குடம் போன்ற மத்தகம் உடைய கட்டுத்தறியை முறிக்கும் மழை போல் மதம் சொரியும் யானை. வீரிட்டு: கத்தி. இக்கண்ணிக்குத் திருமாலின் அவதாரமே என்பது கருத்து.

கoகூசா. குமார துரை: குமார ராஜா; சிந்தமனின் சகோதர்.

கoகூஎ. கம்பன் ஆம் என்றார் கவிராஜர்: என்னைக் கம்பன் என்று கூறினர் அங்குள்ள கவிராயர்கள். சொம்பு: எழில்.

கoகூகூ. காவி அணிந்த யோகிகள் கூட மன மகிழ்ந்து தேவாமிர்தம் என்று சொல்லச் செய்தேன். த்யாக நிதி: கொடை வள்ளல்.

என்னும் பெரியநா கேந்த்ரன் அகளங்க
மன்னன் திருவாய் மலர்ந்தருளி—என்னைக் ௧௧௦௦

கவிச்சக்ர வர்த்திஎன்ருன் காவலா நீயே
புவிச்சக்ர வர்த்திஎனப் போற்றச்—செவிக்குநல்ல

**வெகுமதி பெற்றமை**

முத்துக் கடுக்கனெடு முன்கை தனக்கிணங்கும்
அத்த கடகம்ரத்ன ஆரமணிக்—கொத்துச்

சரப்பணிதும் பிப்பதக்கன் சாலுவைபொற் காந்தி
பரப்பியிடு பொற்சரிகைப் பாகை—தரித்தருள்பீ

தாம்பரங்கள் ஈந்தான் தருப்போல் அவனெனக்கங்கு
ஆம்பரிசில் ஈயும் அதற்குமுன்னே—மேம்படுபேர்

தீட்டுபுகழ்க் கல்லூர்வாழ் திப்பணவேள் என்தலைக்குச்
சூட்டஒரு முத்துத் துராயீந்தான்—தாட்டிகோத் ௧௧௦௫

தண்டனெனும் கூளேந்த்ரன் தம்பியாம் சிந்தமனோர்
கண்டசரம் ஈந்தான் கழுத்துக்குக்—கொண்டலெனும்

---

௧௧௦௦. நாகேந்த்ரன், மன்னன்: கூளப்பநாயக்கன்.

௪௧௦௧. கவிச் சக்ரவர்த்தி: கவி மன்னர்க்கெல்லாம் மன்னன். புவிச் சக்ரவர்த்தி: புவி வேந்தர்க் கெல்லாம் வேந்தன்.

௧௧௦௨. அத்த கடகம்: கைக்கடகம் என்னும் அணி. ஆரம்: மாலை.

௧௧௦௩. தும்பிப்பதக்கன்: யானை முகப்பதக்கன். சாலுவை: கம்புளப்போர்வை. சரிகைப்பாகை: கெண்டைத் தலைப்பாகை.

௧௧௦௪. மேம்படு பேர்: சபையிலுள்ள மேலோர்.

௧௧௦௬. கொண்டல்: மேகம்.

முத்துரா யன்கொடுத்தான் முன்னணிசு மாக்கியணன்
பத்துவரா கன்பெறவோர் பாகீந்தான்-சித்தசனும் ௧௧௦௭

கங்கப்பன் கைக்கொலுசு நல்கினான் மோதிரமென்
செங்கைவிர லுக்கணிந்தான் சிந்தமவேள்—தங்கவளை

ராஜகோ பாலையன் நல்கினான் சீர்கொள்முத்துப்
போஜனொரு முத்துவடம் பூட்டினான்—பேசுபுகழ்ச்

சாந்தபூ பன்கொடுத்தான் சாலுவைநல் நாகரத்னம்
ஈந்தான் கொடிநாகன் என்கையில்—வாய்ந்தபுகழ் ௧௧௧௦

நல்லையனான் நச்சும் நடைப்பரீந் தான்உலகம்
சொல்லும் பணிக்காயன் சொக்கலிங்கம்—மல்லிகைப்பூத்

தையலங்கி ஒன்றெனக்குத் தந்தான் பெரியதம்பி
துய்யவெள்ளிக் குண்டொடுசொக் காய்தந்தான்—பொய்யுரையாக்

கூளக் கணக்கன்மணி குண்டலந்தந் தானிரண்டு
தோளிற் குணுக்களவாய்த் தூங்கவே—வேளைக்கு

உதவியதம் பான்கொடுத்தான் ஒன்பதுபொன் பட்டுச்
சதுரன்கை லாச தயாளு—புதுவயிரத்

தண்டோட்டி தந்தான் சவாதுப் பரணிதந்தான்
கொண்டசொக்க லிங்கன் கொடுத்தானோர்—முண்டாசு ௧௧௧௫

சட்டமிடும் சொக்கலிங்கன் தந்தான் கணையாழி
கட்டழகன் பாசிபந்து கட்டினான்—பட்டை ௧௧௧௬

---

௧௧௦௭. பத்துவராகன்: முப்பத்தைந்து ரூபாய், பாகு; தலைப்பாகை. சித்தசன்: மதன்.

௧௧௧௧. நச்சும்; விரும்பும். பரி; குதிரை.

௧௧௧௨. அங்கி; சட்டை. வெள்ளிக் குண்டொடு சொக்காய்; வெள்ளிப் பொத்தானுடன் சட்டை.

௧௧௧௩. மணிக்குண்டலம்: ரத்னக் குழை.

௧௧௧௪. பரணி: டப்பி.

௧௧௧௬. கணையாழி: மோதிரம்.

அரைஞாண்தந் தான்பொன் அரைச்சட்டை தந்தான்
வரிசையாம் ராம மகிபன்—முருகுமுத்துச் ககக௭
சின்னன் உதவினன் தீரன் வடகூளன்
பொன்னல் விருதுதண்டை பூட்டினன்—மின்எறிக்கும்
தாயித்து ராமனன்று தந்தான் திருமலையன்
நேயத்தாற் பொற்பூ நிசாறுதந்தான்—தூயதுணைக்
காமனீந் தான்நற் கறவைஐந்து கண்டையிட்ட
சோமனீந் தான்அரைகுச் சோடாகச்—சோமனெனும் ககஉ௦
சோலை சிவப்புத்துப் பட்டிதந் தான்மாடன்
பாலுக்குக் காராம் பசுதந்தான்—மால்குழந்தை
வேலன் எனக்கிரண்டு வெள்ளைஎரு தாய்மேகம்
போலக் கொடுத்தோட்டிப் போஎன்றான்—ஒலிபூ
பாலன் கொடுத்தானோர் பச்சைவடம் சோடங்கி
நாலு முடிப்புரொக்கம் நல்கினன்—சீலனெனும்
நல்லமரு தன்கொடுத்தான் நல்ல குதிரைமறி
கல்விதெரி சிக்கணனென் கண்குளிரக்—கொல்லத்துப்
பச்சைக்க பாய்தந்தான் பாரியொத்த காமியங்கே
மெச்சி எனக்கிரண்டு மேதிதந்தான்-உச்சிதமாக் ககஉரு

---

ககக௭. அரைச்சட்டை: சிறு காற்சட்டை.

ககக௮. மின் எறிக்கும்: ஒளி வீசுகின்ற.

ககக௯. பொற்பூ நிசாறு: அழகிய பூவைத்துத் தைத்த நீண்ட காற்சட்டை.

ககஉ௦. கறவை: பசு. கண்டை இட்ட சோமன்: கண்டை வேட்டி.

ககஉஉ. வெள்ளை எருது: வெள்ளைக்காளை.

ககஉ௩. பச்சை வடம்: பச்சை மாலை.

ககஉ௪. மறி: மான்.

ககஉரு. கபாய்: அங்கி. மேதி: எருமை. உச்சிதம்: உயர்வானதாக.

கூதலுக்குப் போர்வைதந்தான் கொண்டபூ பன்உலக
நாதன் சகலாத்து நல்கினான்—மாதங்கக் ககஉசு
கட்டி கொடுத்தனன்நா கக்கவுண் டன்குருவா
ரெட்டிகொடுத் தானதற்கு ரெட்டிப்பு—தட்டிவிட்டு
நாழிமுத்தை முத்தையவேள் நல்கவர தப்பனொரு
தாழிவில்லை போட்டான் சமுகத்தில்—வாழினன
ரங்கையனீந் தானங்கோர் ரத்னகண்டி ராமையனுந்
துங்கன் கொடுத்தான்பொன் தொண்ணூறு-திங்கள்முக
வீரப் பெருமாள் விரலுக்கு வச்சிரக்கல்
சேருற்ற பொன்மோ திரந்தந்தான்—கோர ககங௦
அநுமத் துவசர் அருங்கருட டாலர்
கனவிருது சிங்கடாற் காரர்—எனவாழும்
எல்லாரும் செம்பொன் இறைத்தாரை ஆனனஞ்சூழ்
நல்லாச னன்பெரிய நாகேந்திரன்—செல்வத்
துரைஎனக்கங் காட்டினான் சொர்ணாபி ஷேகம்
வரைஎனத்தந் தானோர் மதமா—தரளக் ககஙங

ககஉசு. மாதங்கம்: பெருமை வாய்ந்த தங்கம்.

ககஉஎ. ரெட்டிப்பு: இரண்டு மடங்கு.

ககஉஅ. நாழி: ஒருபடி.

ககஉகூ. ரத்ன கண்டி: மணி மாலை.

ககங௦. வச்ரக்கல்: வைரம்.

ககஙக. அநுமத்துவசர்: குரங்குக் கொடியாளர். கருடடாலர்: கருடக்கொடியினர். சிங்க டாற்காரர்: சிங்கக் கொடியினர்.

ககஙஉ. இறைத்தார்: வாரிச் சொரிந்தனர். ஐஆனனம் சூழ் நல் ஆசனன்: ஐந்து முகங்கொண்ட நல்ல இருக்கையுடையான்.

ககஙங. ஆட்டினான் சொர்ணாபிஷேகம்: தங்கத்தினால் என்னை முழுக்காட்டினான். வரை எனத் தந்தான் ஓர் மதமா: மலைபோல ஒரு மதயானையைத் தந்தான். தரளம்: முத்து.

கவிகைதந்தான் வெள்ளைக் கவரிதந்தான் செம்பொற்
சிவிகைதந்தான் காந்தி சிறந்த—ரவிபோல் ௧௧௩௪
இருட்டகற்றும் தீவட்டி ஈந்தான் மதிபோற்
சுருட்டிதந்தான் தந்தான் துவஜம்—பெருத்தசில ௧௧௩௫
ஊர்தந்தான் உப்பளிக்கை ஊர்தோறும் பண்ணைவைக்க
ஏர்தந்தான் வாழ்வுக்கு இடந்தந்தான்—ஆர்தந்தார்
இந்தத் தியாகம் இவனைப்போல் வாவிஅர
விந்தத்தி யாகவந்த மெல்லியலே!—இந்தவிதம்

## விறலி விடு தூது

என்செய்தி யாதிதொடர்ந் தெல்லாம உனக்குரைத்தேன்
பொன்செய்த எம்மூர்க்குப் போயினிநீ—மின்செய்த
சிற்றிடையாள் ஆகியஎன் தேவியா ரைக்கண்டு
நற்றிறம்சேர் வீணை நயம்பாடி—மற்றவளுக்கு ௧௧௩௯

௧௧௩௪. கவிகை: குடை. கவரி: சாமரம். செம் பொற் சிவிகை: தங்கப் பல்லக்கு. காந்தி சிறந்த: ஒளி மிகுந்த. ரவி: சூரியன்.

௧௧௩௫. சுருட்டி: விருதுகளுள் ஒன்று. துவஜம்: கொடி.

௧௧௩௬. உம்பளிக்கை: மானிய நிலம். வாழ்வுக்கு இடம் தந்தான்: இவ் உலகில் எனக்கும் ஒரு சிறந்த வாழ்வுக்கு இடம் உண்டாக்கினான்.

௧௧௩௭. தியாகம்: கொடை. வாவி அரவிந்தத்தி யாக வந்த மெல்லியலே: தடாகத்திலுள்ள அரவிந்தம் என்னும் தாமரையுறை திருவைப்போல இருக்கும் மென்மை வாய்ந்தவளே. இது விறலியை விளித்துச் சொல்லுவது.

௧௧௩௮. ஆதி: முதலியன.

௧௧௩௯. என் தேவியாரைக்கண்டு: என் மனைவியா ரைப் பார்த்து. வீணை நயம்பாடி: வீணாகானத்தை அவள் காதில் ஏற்றி.

என்குறையை மெள்ள இயம்பிஎதிர் சொல்லுமந்தப்
பொன்குறையும் கேட்டூடல் போக்கியே—நன்குறுமென் ௧௧௪௦
ஆசைமனை யாட்டிதனக்கு ஐயங்கார் இன்னுமொரு
வேசைமனைக் கேகுவரோ விட்டெனவால்—ஓசனையுட்
கொள்ளாமல் என்சபதம் கூறிமுன்னைக் குற்றம்நினைந்து
எள்ளாமல் கற்பின் இயல்போதி—உள்ளாரப்
பண்பாடி உட்காம பாணம் படச்செய்து
நண்பாடி என்வரவை நன்கேற்றுக்—கண்பார்க்க
ஓகையாய் முன்போல் உறவாக்கச் செல்வாழி
தோகை விறலிநீ தூது! ௧௧௪௪

---

௧௧௪௦. மெள்ள இயம்பி: மெதுவாகச் சொல்லி. ஊடல்: பிணக்கு.

௧௧௪௧. ஐயங்கார்: உன் கணவனார். ஆல்: அசை. ஓசனை: யோசனை.

௧௧௪௨. எள்ளாமல்: இகழாமல். கற்பின் இயல்பு ஓதி: கற்பின் தன்மையை அவளுக்கு எடுத்துச் சொல்லி. உள் ஆர: மனம் நிறைந்து மகிழ.

௧௧௪௩. பண்பாடி: இசைபாடி. உட்காமபாணம் படச்செய்து: உள்ளே மதன்கணை பொருந்துமாறு ஆக்கி. நண்பு ஆடி: நட்புக்கொண்டு. என்வரவை: எனது வருகையை. நன்கு ஏற்றுக் கண்பார்க்க: நன்றாக ஏற்றுக்கொண்டு கடைக்கண் செலுத்த.

௧௧௪௪. ஓகையாய்: மகிழ்ச்சியாக. முன்போல் உறவு ஆக்க: முன்னைப்போல உறவுகொள்ள. தோகை விறலி நீ செல்தூது: மயிலனைய விறலியே நீ தூது செல்க! வாழி: வாழ்வாயாக!

விறலி விடு தூது முற்றும்

# பின்கண்டவாறு படிக்க

பக்கம் உரு, கண்ணி கசஉ

ஆனதினுல் அஞ்சுநாள்
அங்கிருந்தேன் அங்கேயோர்
ஞானியையன் தன்னுடனே
நட்பானேன் — மேன்மையீர் கசஉ

பக்கம் சுகூ, கண்ணி சகூ௦, சகூக

நற்குணமுள் ளார்தமையே
நாடுவாள் வேந்தர்தரும்
பொற்குவைக்கும் உள்ளம்
பொருந்தாள்காண் — சொற்புலமை சகூ௦

வீறுடைய ராகியநல்
வேதியரே என்றுசில
கூறியதன் பின்னேஅக்
கோதைஅங்கே — தாறுதலைத் சகூக

பக்கம் அகூ, கண்ணி கூகரு

கருத்துவகை யாய்த்தேடிக்
கட்டிக் கடையில்
மருத்துவகை கஸ்தூரி
மஞ்சள் — அரைத்தசித்ர கூகரு